விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 தை 19 சனிக்கிழமை (02.02.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 045

## தேசிய அரசை அமைத்து அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான

### முன்மொழிவு சபாநாயகரிடம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தை அமைத்து அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான ஒரு முன்மொழிவு சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றின் சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்லவினால் குறித்த முன்மொழிவு சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் நேற்று வெள்ளிக்கிழமை காலை கையளிக்கப்பட்டது.

பாராளுமன்றில் அதிக உறுப்பினர்களை கொண்ட கட்சியான ஐக்கிய தேசிய கட்சியினால் தேசிய அரசாங்கம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது என அந்த முன்மொழிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 24

## தொடருந்து மோதியதில் இளைஞர் உயிரிழப்பு

### சாவகச்சேரியில் சம்பவம்



(சாவகச்சேரி)

யாழ்.சாவகச்சேரி வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள தொடருந்து கடவையில் தொடருந்தில் மோதுண்டு இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்.நோக்கி 23

## புதிய கூட்டு உடன்படிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது

### பிரதமர் உறுதியளித்ததாக மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் அடிப்படை சம்பளத்தை 700 ரூபாயாக நிர்ணயித்து தொழிற்சங்கங்களாலும் முதலாளிமார் சம்மேளனத்தாலும் செய்துகொள்ளப்பட்ட கூட்டு உடன்படிக்கையை வர்த்தமானியில் வெளியிட்டு நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

ஆளும் ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சியான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் 23

## ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மாநாடு நாளையதினம்

### யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிராந்திய மாநாடு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கலாபூஷணம் க.அருந்தவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விசேட விருந்தினராக நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் 24

## சு.கவுடன் இணைந்து தேசிய அரசு அமையாது

### அகிலவிராஜ் காரியவசம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் இணைந்து ஒருபோதும் தேசிய அரசாங்கம் அமைக்கப்படாது என ஐக்கிய தேசிய கட்சி மீண்டும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அந்த கட்சியின் பொது செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது கருத்து வெளியிட்ட அவர்,

ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான தேசிய அரசாங்கமொன்று உருவாக்கப்படுமானால் மீண்டும் 23

## பாடசாலைக்குள் புகுந்து கத்திக்குத்து

### மாணவன் படுகாயம்

(கரணவாய்)

வடமராட்சி பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் புகுந்த நபர் ஒருவர் கத்தியால் குத்தியதில் மாணவர் ஒருவர் காயமடைந்ததாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வெள்ளிக்கிழமை வடமராட்சி பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் அதே பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர் 24

# புதிய அரசியலமைப்பு
# தமிழ் மக்கள் ஏமாற்றம்



## பௌத்த மக்கள் மத்தியிலும் அமைதியின்மை - ஜனாதிபதி

(கொழும்பு) புதிய அரசியலமைப்பு தொடர்பில் வடக்கு தமிழ் மக்கள் ஏமாற்றப்படுவதாக தெரிவித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அரசியலமைப்பு பௌத்த மக்கள் மத்தியிலும் அமைதியின்மையை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (23-ம் பக்.)

### மே மாத இறுதியில்

## மாகாண சபை தேர்தல் நடைபெறும்

### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

மே மாத இறுதியில் அல்லது ஜூன் மாத ஆரம்பத்தில் மாகாண சபை தேர்தலை நடத்த முடியுமென இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய, தேர்தல்கள் செயலகத்தில் நேற்று 23

## தனங்கிளப்பில் அமைக்கப்படும் உப்பளத்தை நிறுத்த கோரிக்கை

### மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தனங்கிளப்பு பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்ற தனியார் உப்பளத்தை தடுத்து நிறுத்த வேண்டுமென மீனவ அமைப்புக்களால் கோரிக்கை விடப்பட்டும், கோரிக்கை தொடர்பில் உரிய பதில் கிடைக்காத நிலையில் மேற்படி அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் கருத்துத்தெரி 23

## பதவிகளுக்காக தேசிய அரசு!

### ஜே.வி.பி சாடல்

(கொழும்பு)

அமைச்சுப்பதவிகளுக்காகவே தேசிய அரசாங்கம் ஒன்றினை மீண்டும் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 23

### இலங்கையின் சுதந்திரதினத்திலாவது

## அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்யுங்கள்!

### மன்னார் பிரஜைகள்குழு வேண்டுகோள்

(மன்னார்)

தமிழ் மக்களின் உரிமையையும் வேண்டுகோளையும் அரசு மதித்து பல ஆண்டுகளாக அடிமைகளாக உரிமை இழந்து சிறைவாசம் அனுபவித்து வரும் தமிழ் அரசியல் கைதிகள் இலங்கையின் சுதந்திர தினத்திலாவது விடுதலை செய்யப்பட வேண்டும் என மன்னார் பிரஜைகள் குழு அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.


இவ்விடயம் தொடர்பாக 23

# நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தென்மராட்சி கருத்துருவாக்கிகள் குழாம் நடாத்தும்

# கற்றோர் கருத்தறிதலும் மூத்தோர் மூதுரையும்

## மக்கள் மனமறியும் அரசியல் கருத்தரங்கு



# அன்றாடப் பிரச்சினைகளும் அடிப்படைப் பிரச்சினையும் அடுத்தது என்ன?

சிவில் சமூகப் பிரதிநிதிகளின் வாதங்களுக்கு
பதிலுரையாற்றுகின்றார்
பாராளுமன்ற உறுப்பினர்

**M.A.சுமந்திரன் (ஜனாதிபதி சட்டத்தரணி)**

காலம் : 03.02.2019 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 3.00 மணி
இடம் : தென்மராட்சி கலாசார மண்டபம்
(சிவன் கோவிலடி சாவகச்சேரி)

அகவணக்கம், ஈகச்சுடரேற்றல்,

வரவேற்புரை
**திரு.கா.சிவஞானசுந்தரம்** (சமூக செயற்பாட்டாளர்)

தலைமையுரை
**திரு.சு.சிவானந்தன்** (கல்வியாளர்)

கருத்துரைகள்
**சிவஸ்ரீ.து.ஜெகதீஸ்வரக் குருக்கள்**
(நல்லை.ஆதீன சிவாச்சாரியார்)

**அருட்தந்தை றெக்ஸ் சௌந்தரா**
(புனித லிகோரியர் ஆலயம், சாவகச்சேரி)

**பேராசிரியர் க.கந்தசாமி**
(தொழில்நுட்ப பீடம் – பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்)

**வைத்தியர் ப. அச்சுதன்**
(வைத்திய பொறுப்பதிகாரி, பிரதேச வைத்தியசாலை, வரணி)

**சட்டத்தரணி ப. குகனேஸ்வரன்**
(சமூக மேம்பாட்டாளர்)

பதிலுரை
பாராளுமன்ற உறுப்பினர்
**கௌரவ M.A. சுமந்திரன்**
(ஜனாதிபதி சட்டத்தரணி)

நன்றியுரை
**திரு.ந.திலீபன்**
(உறுப்பினர், தென்மராட்சி கருத்துருவாக்கிகள் குழாம்)

நிகழ்ச்சித் தொகுப்பு
**சட்டத்தரணி கே.சயந்தன்**
(முன்னாள் உறுப்பினர், வடக்கு மாகாண சபை)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

**ஏற்பாட்டுக்குழு**

(C-5371)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**உப ஒப்பந்தகாரர் தேவை**
யாழ்ப்பாணத்தில் கட்டட பூச்சு வேலைக்கு உப ஒப்பந்தகாரர் தேவை
தொடர்பு
077 315 1500
(C-5366)

# மரண அறிவித்தல்



## தியாகராஜா இராசதுரை
### (புறோக்கர்)

பழைய வீதி கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா இராசதுரை அவர்கள் நேற்று (01.02.2019) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராஜா - ஆச்சிக்குட்டி தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற சின்னப்பு - சின்னப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் தவராஜா, தேவராஜா (கனடா), ராயேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ராதிகா, ரதீபன் (பிரான்ஸ்), பிரதீபா, சத்தியா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் சாந்தகுமார், சிலேஜன் ஆகியோரின் மாமனாரும் கார்த்திகன், விஸ்ணுஜன், வினோத்தன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(7384)

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு.

தகவல்:- குடும்பத்தினர்
தொ.பே: 0772719476, 077 142 8638



## மாகாண சபைத் தேர்தலே முதலில்

# ஜனாதிபதி வேட்பாளரை நானே தீர்மானிப்பேன்

## மகிந்த அணிக்கு மைத்திரி எதிர்வினை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராக நான் உள்ள நிலையில், இந்தக் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரை நானே தீர்மானிப்பேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



மேலும், இவ்வருடமும் அடுத்த வருடமும் தேர்தல் வருடங்கள்தான். மாகாண சபைத் தேர்தலே முதலில் நடக்கும். இவ்வருடம் விரைவில் அந்தத் தேர்தல் நடத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றின் கொழும்பு செய்தியாளருக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்ற பின்னர் ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் அல்லது ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற பின்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடக்கும். இந்த இரண்டு தேர்தல்களுக்கும் முன்னர் மாகாண சபைத் தேர்தல் நடக்கும். இதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை.

இந்த மூன்று தேர்தல்களும் நீதியாக நடைபெற அனைத்துத் தரப்புக்களும் ஒத்துழைக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடைபெறவுள்ளது எனவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பங்காளிக் கட்சியாகக் கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் எனவும் சிலர் விசமத்தனமான பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த வதந்திகளை எவரும் நம்ப வேண்டாம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராக நானே உள்ளேன். இந்நிலையில், எனது அனுமதி இல்லாமல் கட்சியிலுள்ள பலர் பொய்ப்பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர். இது தொடர்பில் நான் நடவடிக்கை எடுக்கவுள்ளேன். எமது கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரை நானே தீர்மானிப்பேன்" என்றார்.

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாங்கள் போட்டியிட மாட்டீர்களா?" என்ற கேள்விக்கு,


"அதுதானே சொன்னேன் எமது கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரை நானே தீர்மானிப்பேன் என்று. இந்தக் கருத்துக்குள் நான் மீண்டும் போட்டியிடுவேனா? இல்லையா? என்ற கேள்விக்கான பதிலும் அடங்கியுள்ளது. அதாவது நான் போட்டியிடுவதா? இல்லையா? என்பது குறித்தும் நான்தான் முடிவெடுக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## யாழ்.பல்கலை. மாணவர்கள் அழைப்பு

# சுதந்திர தின எதிர்ப்பு போராட்டத்துக்கு தமிழ் மக்கள் கூட்டணி பூரண ஆதரவு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சுதந்திர தினத்தைக் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்வரும் 4 ஆம் திகதி நடத்தவிருக்கும் போராட்டங்களுக்கு தமிழ் மக்கள் கூட்டணி தனது பூரண ஆதரவை வெளியிட்டுள்ளது.



இது தொடர்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

பிரித்தானியர்களிடமிருந்து இலங்கைக்கு 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்ததபோதும் அதன் பலாபலன்கள் தமிழ் மக்களுக்கு கிடைக்கவில்லை. மாறாகத் தமிழ் மக்களுக்கு எதிராகப் பெரும்பான்மை சிங்கள மக்களைக் கொண்ட தொடர்ந்து வந்த பாராளுமன்றங்களினால் பல்வேறு அடக்கு முறைகளே கட்டவிழ்த்துவிடப்பட்டன.

கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக நடைபெற்ற யுத்தத்தில் சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டு தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புமற்றும் போர்க்குற்ற செயற்பாடுகளுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்ட மக்களின் உறவினர்கள் வீதிகளில் தொடர்ந்தும் இரவு பகலாகத் தீர்வு எதுவும் இன்றி போராடி வருகின்றார்கள். சட்ட முறைமைகளுக்கு மாறாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவிக்கும் தமிழ் அரசியல் கைதிகள் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை. யுத்தம் முடிந்து பத்து வருடங்கள் ஆகியும் தடைச் சட்டம் இன்னமும் கைவாங்கப்படவில்லை. பலவந்தமாக தமது காணிகள் பறிக்கப்பட்ட நிலையில் இராணுவ முகாம்களுக்கு முன்பாக நின்று பாதிக்கப்பட்ட எம்மக்கள் தொடர்ந்து இரவு பகலாகப் போராடி வருகின்றார்கள்.

இந்த நிலையில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் சுதந்திரதினம் என்று பிரகடனப்படுத்தப்பட்ட தினத்தை தமிழ் மக்களின் குரலை சர்வதேசத் திடம் ஓங்கி ஒலிக்கச் செய்து நீதிகேட்கும் வகையில் தமிழர் தாயகத்தில் போராட்டங்களை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளமை பொருத்தமானது.

இதற்கு எமது முழுமையான ஆதரவை நாம் வழங்குகின்றோம். எமது கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் இந்தப்போராட்டங்களில் கலந்து கொள்வார்கள்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

## சம்பா அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்க இணக்கம்

(கொழும்பு)

ஏப்ரல் மாதம் தொடங்கும் பண்டிகைக் காலத்துடன் இணைந்ததாக ஒரு கிலோ சம்பாவை 85 ரூபா என்ற உச்ச வரம்பிற்கு உட்பட்டவாறு விநியோகிக்க நெல் ஆலை கம்பனிகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

இலங்கையின் முன்னணி ஆலை உரிமையாளர்கள் சிறிய அளவிலான ஆலை உரிமையாளர்கள் ஆகியோருடன் விவசாய அமைச்சு அதிகாரிகள் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதன்போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது. அமைச்சர் பி.ஹரிசன் தலைமையில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில் ஒரு கிலோ நெல்லின் விலையைப் போன்று இருமடங்கு விலைக்கு அரிசியை விநியோகிக்கவும் ஆலை உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். (இ-7)

## மகிந்த ஆட்சியில் கோத்தாவின் பணிப்பில்

# இலங்கையில் முதன்முறையாக தயாரிக்கப்பட்ட அதிநவீன ஆயுதங்கள்!

### சுதந்திர தின விழாவில் காட்சிப்படுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் முதல் முறையாக தயாரிக்கப்பட்ட போர் ஆயுதங்கள் 71ஆவது தேசிய சுதந்திர தினப் பேரணியில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

மகிந்த அரசாங்கத்தின் போது, அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தரவுக்கமைய இந்த ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இதில் ஏவுகணைகள், பல்குழல் ரொக்கட்டுகள் என்பன தயாரிக்கப்பட்டுள்ளன. பேராசிரியர் சந்தன பெரேரா, பிரிகேடியர் திரான் டி சில்வா ஆகிய அதிகாரிகள் தலைமையிலான தொழில் நுட்பவியலாளர்கள் இந்த ஆயுதங்களை தயாரித்துள்ளனர்.நவீன ஆயுதங்களை தயாரித்தவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

எனது அரசாங்கக் காலப்பகுதியில் கோத்தபாயவின் பணிப்புரையின் கீழ் இவை தயாரிக்கப்பட்டன. இலங்கையில் தயாரிக்கப்பட்ட பிரமாண்டமான ஆயுதங்கள் இவையாகும் என மகிந்த தெரிவித்துள்ளார். நாளை மறுதினம் 4 ஆம் திகதி நடைபெறும் சுதந்திர தினப் பேரணியின் போது இந்த ஆயுதங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

ஒரு நாடு தனிமைப்படுள்ள ஆயுத, படை பலங்களைப் பிராந்திய நாடுகளுக்குவெளிப்படுத்தும் நோக்கில், சுதந்திர தினத்தின் போது இராணுவ வளங்கள் காட்சிப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 18 1/2 கிலோ கேரளக் கஞ்சாவுடன் வல்வெட்டித்துறையில் இருவர் கைது

(கரணவாய்)

வடமராட்சி வல்வெட்டித்துறைப் பகுதியில் கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டு தம்மிடம் ஒப்படைக்கப்பட்டதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு வல்வெட்டித்துறைப் பகுதியில் கஞ்சா கடத்தப்படுவதாக கடற்படையினர், விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து வல்வெட்டித் துறை ஆதி கோவிலடிப் பகுதியில் விசேட அதிரடிப் படையினர் சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்தவர்களை மறித்து சோதனையிட்ட போது அவர்களிடம் 18 1/2 கிலோக்கிராம் கேரளக் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

அதனை எடுத்து வந்த சிதம்பரா வீதி வல் வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்த ஒருவரும், நாகர் கோவில் மேற்கைச் சேர்ந்த ஒருவருமாக இருவர் கைது செய்யப்பட்டு வல்வெட்டித்துறை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர். (இ-60)

# பேர்ன்ஸ், ஹெட் சதம்; ஆஸி., பலம்

இலங்கை அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் பேர்ன்ஸ், ஹெட் சதம் அடிக்க முதல் நாள் ஆட்டநேர நிறைவில் அவுஸ்திரேலிய அணி 384/4 ஓட்டங்கள் குவித் தது.

அவுஸ்திரேலியா சென்ற இலங்கை அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்டில் வென்ற அவுஸ்திரேலியா 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ள நிலையில், இரண்டாவது டெஸ்ட் நேற்று கான்பெராவில் நேற்று ஆரம்பமானது. நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

**இரண்டு சதம்**

அவுஸ்திரேலிய அணிக்கு ஹரிஸ் (11), கவாஜா (0), லபுசேன் (6) அதிர்ச்சி தர 28/3 ஓட்டங்கள் என திணறியது. பின் ஜோ பேர்ன்ஸ், டிராவிஸ் ஹெட் இணைந்தனர். அணியை சரிவில் இருந்து மீட்டு வேகமாக ஓட்டங்கள் சேர்த்தனர்.

பேர்ன்ஸ் டெஸ்ட் அரங்கில் 4வது சதம் அடித்தார். இது கடந்த 2018 அக்.,க்குப் பின் அவுஸ்திரேலிய வீரர் ஒருவர் அடித்த டெஸ்ட் சதமாக அமைந்தது.

இவருக்கு 'கம்பெனி' கொடுத்த ஹெட் தனது முதல் சதம் எட்டினார். இலங்கை வீரர்கள் 4 முறை 'பிடி' வாய்ப்புகளை நழுவ விட்டனர். 4வது விக்கெட்டுக்காக 308 ஓட்டங்களைச் சேர்த்த போது ஹெட் (161) ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் நேற்றைய முதல் நாள் ஆட்டநேர நிறைவில் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 4 விக்கெட்டுக்களை இழந்து 384 ஓட்டங்களை குவித்தது. பேர்ன்ஸ் (172), பேட்டர்சன் (25) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

## கண்ணீர் அஞ்சலி

**வைத்தியர் கந்தாதே ஒபிசரகே இராஜரட்ணம்**

**க.ஒ.இராஜரட்ணம் *RIMP***

**(24வது பரம்பரை வைத்தியர் சுஜீவா வைத்தியசாலை பாலிநகர்,வவுனிக்குளம்)**



லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவ சபையின் ஆளுநர் சபை உறுப்பினரும் யாழ்.போதனா வைத்தியசாலை பிறப்பு இறப்பு மருத்துவ பதிவாளரும் எனது உயிர் நண்பனுமான Dr. ஜெ.ஜெயலன் அவர்களின் அன்பு மாமனார் 31.01.2019 அன்று காலமான செய்தியறிந்து துயரடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கலாநிதி ந.யோகராஜன் (SLTES CLASS I)**
தொழில்நுட்பக் கல்வி பயிற்சி திணைக்கள
தலைமைச் செயலக பணிப்பாளரும்
வட மாகாண இணைப்பாளரும் யாழ்.மாவட்ட அமைப்பாளரும்


**திருமதி மாலதி யோகராஜன் (JP)**
திருமணப் பதிவாளர்
வலிகாமம் கிழக்கு, உரும்பிராய்.

(C-5365)

## மரண அறிவித்தல்

**கதிரவேலு கணேசலிங்கம்**

**(ஓய்வுநிலை அதிபர், எழுத்தாளர்)**



யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியை பிறப்பிடமாகவும் பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு கணேசலிங்கம் அவர்கள் நேற்று (01.02.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - நாகரத்தினம் தம்பதிகளின் பாசமிகு கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - இராசம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் சிவகடாட்சத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கதிர்காமலிங்கம், பத்மநாதன், சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கதிரவேல் (ஆசிரியர் - யா/முத்துத்தம்பி ம.வி), செல்வராஜா (ஆசிரியர் - யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற செல்வறஞ்சிதம் மற்றும் ஜெயராஜா (யா/இடைக்காடு ம.வி) ஆகியோரின் அன்புத் தந்தையும் வனஜாதேவி (ஆசிரியர் - யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை), யாழினி, நிரஞ்சனா ஆகியோரின் அன்பு மாமனாரும் துலாஞ்சன் (மொரட்டுவ பல்கலைக்கழகம்), சாயந்தரி (உயர்தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்), ஆர்த்திகன் (யாழ்.இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2019) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.32, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி.தர்மநாயகி தர்மலிங்கம்



யாழ்.கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி.தர்மநாயகி தர்மலிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (31.01.2019) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த புகழ்பூத்த ஈழத்துச் சித்தர்களான அருளம்பலசுவாமிகள்-தங்கம்மை தம்பதிகளின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான வரதரட்ணராஜா-பூலோகநாயகி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-தங்கச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் **M.T** தர்மலிங்கம் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் திகழ்மதி, ஜலஜா, லலிதினி, சிவகுமார், விக்கினேஸ்வரன், கிருஷ்ணகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற குலேந்திரன், பாலச்சந்திரா, கிருஷ்ணதாசன், தேவசேனை, ரோகினி, சாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற மகேஸ்வரன், ஸ்ரீகரன், குணசீலன், சோபனதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சரோஜினிதேவி, சாவித்திரிதேவி, ஜெயபூபதி, காலஞ்சென்ற மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் கார்த்திகா-சஞ்ஜீவ், அபராஜிதன்-சர்மினா, பிரசோதிகா, மயூரிக்கா, தினேசியா, டர்சியா, அபிரா, வராகி, ஆர்த்திகா, அகினாஷ், அக்ஷி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் மானவ், ஷ்ரவன் ஆகியோரின் ஆசைப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் இல 50, கே.கே.எஸ்.வீதி, கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.50, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.**
**தொ.பேசி: 021 222 8063**
**0777849369 (அபராஜிதன்-பேரன்)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# தெங்குச் செய்கையாளர்களை ஊக்குவிக்க வடக்கில் பல்வேறு வேலைத்திட்டங்கள்

## முகாமையாளர் வைகுந்தன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தெங்குச் செய்கையாளர்களை ஊக்குவிக்கும் முகமாக இவ்வருடம் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெங்குச் செய்கையின் வடமாகாண முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித் தார்.

இத் திட்டமானது வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக நடை முறைப் படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

### திட்டம்

ஒரு ஏக்கரில் 64 தென்னங்கன்றுகள் என்ற ரீதியில் மானிய அடிப்படையில் ஐம்பது ரூபாவிற்கு ஒரு தென்னங்கன்று வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தாகத் தெரிவித்தார்.

### உர மானியம்

ஐந்து வயதிற்கு மேற்பட்ட ஒரு மரத்திற்கு சேதனப் பசளை மானியமாக 125 ரூபாவும் மூன்று மாதத்திற்கு பின் 50 ரூபாவும் வழங்கப் படுவதோடு மொத்தமாக 175 ரூபா உரமானியத்திற்கு வழங்கப் படும்.

### புனரமைப்பு

2017-2018 ஆண்டு காலப்பகுதியில் நடுகை செய்யப் பட்ட தென்னங்கன்றுகளுக்கு ஒரு மரத்துக்கு 50 ரூபா வீதம் பராமரிப்புச் செலவு வழங்கப்படும் எனவும் இதற்கு தமதுசங்க உறுப்பினர்களூடாக உறுதிப் படுத்தவேண்டும் எனவும் தெரிவித்தார்.

### ஊடுபயிர்ச் செய்

தென்னை உற்பத்தியாளர்களுக்கு வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் தென்னைமர இடைவெளிகளில் வாழை, அன்னாசி, வெற்றிலை ஆகிய செய்கை நடவடிக்கையை ஊக்குவி க்கும் நோக்குடன் இத்திட்டம் செயற்படுத்தப்படுமென தெரிவித்தார்.

### நீர்ப்பாசனம்

தெங்குப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு வறட்சி காலத்தில் நீரைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நீரை வீண்விரயத்தில் இருந்து தடுப்பதற்கும் குழாய் நீர்ப்பாசனத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள் ளதாகவும் இத்திட்டத்தை பயன்படுத்த விரும்பும் விவசாயிகள் முதலில் தாமாகவே முன்வந்து இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் எனவும் திட்டம் நிறை வடைந்ததும் அவர்களுக்கான காசோலை வழங்கப்படும் எனவும் தெரி வித்தார்.

### அரச உத்தியோகத்தருக்கு 50 ரூபாவுக்கு தென்னங்கன்று

வடமாகாணத்திலுள்ள 8 ஆயி ரம் அரச உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் 50ரூபா வுக்கு ஒரு தென்னங்கன்று வழங்கப்படவுள்ளதோடு யாழ். மாவட்டத்தில் 1800 பேருக்கு இத் திட்டத்தில் தென்னங் கன்றுகள் வழங்கப்படும்.

### கைவிடப்பட்ட பிரதேசத்தில் மரநடுகை

யாழ்.மாவட்டத்திலுள்ள கைவிடப்பட்ட பிரதேசங்கள். வீதியோரங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

வேலணை, காரைநகர் வீதியோரங்களில் நடுகை செய்வன 2 ஆயிரத்து 300 தென்னங்கன்றுகள் வழங் கப்படும்.

யாழ்.மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்கள் அதனை அண்டிய பிரதேச வீதிகளுக்கு நடுகை செய்யவென இதுவரை 37 ஆயிரம் தென்னம் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய மரக்கன்றுகள் விரைவில் விநியோ கிக்கப்படவுள்ளன.

### சங்க உறுப்பினர்கள் பாடசாலை மாணவன்

வடமாகாணத்திலுள்ள கற்பக சங்கங்களில் உள்ள 16 ஆயிரம் பேருக்கு ஒருவருக்கு இரு தென்னங்கன்றுகள் வீதம் வழங்கப்படுவதோடு யாழ்.மாவட்டத்தில் 5 ஆயிரத்து 800பேருக்கு இத் திட்டம் வழங்கப்படும்.

பாடசாலை மாணவர்களுக்கான திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தரம் 6 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பைகளில் அடைக்கப்பட்ட தென்னங்கன்றுகள் வழங்கப்படும்.

எனவே அரசாங்கத்தால் வழங்கப்படும் இத் திட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்தி தெங்குச் செய்கையை ஊக்குவிக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென அவர் மேலும் கேட்டுக் கொண்டார். (இ-10)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் வட்டு மத்திய கல்லூரியைச் சேர்ந்த 60 பாடசாலை மாணவர்களுக்கு 60,000 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

# 2 கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட் மீட்பு

(கொழும்பு)



கொழும்பு புறக்கோட்டை பகுதியில் வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

புறக்கோட்டை மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகிலிருந்த கொள்கலன் ஒன்றிலிருந்தே சுமார் நான்கு இலட்சம் சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அவற்றின் பெறுமதி இரண்டு கோடி ரூபா எனவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# 45 ஆம் நாளில் நினைவு கூருகின்றோம்

அமரர். திருமதி.

**சுப்பிரமணியம் இராசம்மா**



எமது பாடசாலை ஆசிரியை திருமதி ராகினி தயாபரன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி சுப்பிரமணியம் இராசம்மா அவர்கள் 20.12.2018 அன்று காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்.

(7043)

# வீதியைக் கடக்க முற்பட்ட வயோதிபரை மோதிய பேருந்து

(கரணவாய்)

வீதியைக் கடக்க முற்பட்ட வயோதிபர் ஒருவரை பேருந்து மோதியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு மாலுசந்தி வைரவர் ஆலயத்திற்கு அருகாமையில்பிரதான வீதியில் இடம்பெற்ற இந்த விபத்து சம்பவத்தில் அத்தாய் பகுதியைச் சேர்ந்த வயோதிபரே படுகாயமடைந்தவராவார்.

வீதியை கடக்க முற்பட்ட வயோதிபரை பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பேருந்து மோதியது.

இதில் படுகாயமடைந்த வயோதிபர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

## ஊடகவியலாளர் படுகொலை

# உடனடியாக உண்மையை பகிரங்கப்படுத்த வேண்டும்

(கொழும்பு)

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை, மற்றும் காணாமலாக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட ஆகியோரது விசாரணைகள் அரசாங்கத்தால் மூடி மறைக்கப்பட்ட தாகவேவுள்ளது.

இச்சம்பவங்கள்தொடர்பில் மக்கள் மத்தியில் மாறுபட்ட கருத்துக்களே காணப்படுகின்றமையினால் உடனடியாக உண்மை தன்மையை பகிரங்கப்படுத்த வேண்டும்என பராளுமன்ற உறுப்பினர்ஹெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இராசி பலன்

**மீனம்:** தூரதேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், கௌரவமான நாள், போசன நன்மையுண்டு.

**மேடம்:** ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், எடுத்த காரியத்தில் மாற்றம் செய்ய முற்படுவீர்கள்.

**இடபம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், உடல் நலக்குறைகள் ஏற்படலாம்.

**மிதுனம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | செவ் | | |
| புத | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மிருகசீரிடம்- திருவாதிரை | | ராகு |
| சூரி, கேது | | | |
| சனி, சுக்,சந் | குரு. | | |

02.02.2019
தை 19, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு
திரயோதசி முன்னிரவு 11.13 மணிவரை
பூராடம் பின்னிரவு 1.41 மணிவரை
சுபநேரம் 3.36-5.06 மணிவரை
இராகுகாலம் 9.36-11.06 மணிவரை
சனிப்பிரதோச விரதம்

வளவன்

**கடகம்:** உங்களின் செயற்பாடுகளுக்கு மற்றவர்களின் அனுசரணை கிடைக்கும், போசன நன்மையுண்டு, ·தன்னம்பிக்கையுடான் செயற்பட்டு காரியம் சாதிப்பீர்கள்.

**மகரம்:** உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, சுபகாரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், புதிய திட்டங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**துலாம்:** போசன நன்மையுண்டு, சுய முயற்சிகள் மூலம் முன்னேற முற் படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் இடம்பெறலாம்.

**கன்னி:** எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

# யாழில் சிறுமியை கடத்த முயற்சி; பொலிஸாரை கண்டித்து ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

சிறுமியை கடத்த முயற்சி செய்த நபரை கைது செய்ய வலியுறுத்தியும் பொலிஸாரின் அசண்டையீனத்தைக் கண்டித்தும் நாவாந்துறை பகுதியில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நாவாந்துறை தெற்கு கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தை முற்றுகையிட்டு அப்பகுதி மக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் குறித்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

அண்மையில் நாவாந்துறை பகுதியில் வசிக்கும் சிறுமியை கடத்தும் நோக்குடன் உடுவில் பகுதிக்கு கூட்டிச்சென்றுள்ளார்.

பின்னர் குறித்த சிறுமி தப்பித்து வந்துள்ளார். இருப்பினும் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர் மீண்டும் கடந்த 29 ஆம் திகதி நாவாந்துறை பகுதிக்கு வந்துள்ளார். இதை அறிந்த அப்பகுதி மக்கள் ஒன்று திரண்டு அவரைப் பிடித்து பிரதேச செயலர் ஊடாக பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

ஆனால் குறித்த நபர் மீது முறைப்பாடு எதுவும் இல்லை எனக் கூறி பொலிஸார் அவரை அசண்டையீனமாக விடுவித்துள்ளனர். எனவே பொலிஸார் குறித்த நபரை கைது செய்து விசாரணை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரி குறித்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருந்தனர். (இ-9)






தெல்லிப்பழை வீமன்காமம் ஞானவைரவர் கோயில் கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது.

## புதிய ஆண்டுக்கான செயற்பாட்டு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சர்வோதயத்தின் ஓர் அங்கமாகிய தேசோதயத்தின் செயற்பாட்டு கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். மாவட்ட சர்வோதய அலுவலகத்தில் இடம்பெறும்.

இதில் அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். சர்வோதயத்தின் கீழ் இயங்கும் சமாதான நீதவான் அமைப்பில் இயங்கும் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு விருது வழங்கலும் இன்னும் சில திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படுவர்களுக்கு விருது வழங்கல் மற்றும் புதிய கட்டடத் திறப்பு விழா தொடர்பாகக் கலந்தாலோசித்தல் போன்ற பலவிடயங்கள் ஆராயப்படவுள்ளன. எனவே அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-60)


## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டி வேவில் ஸ்ரீ வீரகத்தி விக்னேஸ்வர சுவாமி கோவில் நூதன பஞ்சதள அதிசுந்தர இராஜகோபுர சம்ரோக்ஷண அஷ்டபந்தன நவ குண்டபக்ஷ மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 10.28 மணிவரையுள்ள சுபவேளையில் விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகி 08.02.2019 வெள்ளிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும்.

10.02.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 8.58 முதல் 10.08 வரையுள்ள சுபவேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். (இ

# அரச வைத்தியசாலை மருந்தாளர்கள் நேற்று அடையாள பணிப்புறக்கணிப்பு



(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதுமுள்ள அரச வைத்தியசாலை மருந்தாளர்கள் நேற்று முதல் அடையாள பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளனர்.

அரசால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் மருந்தக உதவியாளர் நியமனங்களை உடனடியாக நிறுத்தக் கோரி, மருந்தாளர்கள் குறித்த பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளனர். இந் நிலையில் யாழ். மாவட்டத்திலுள்ள அரச வைத்தியசாலை மருந்தாளர்களும் நேற்று பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டனர்.

இதற்கு ஆதரவாக யாழ். போதனா வைத்தியசாலையிலும் மருந்தாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் சிகிச்சைக்கு வந்த நோயாளர்கள் மருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் சிரமங்களை எதிர்கொண்டதுடன் விரக்தியுடன் திரும்பிச்சென்றதை அவதானிக்க முடிந்தது. (இ-9-107)

# அறுவடை செய்யச் சென்ற இருவர் மீது மூவர் தாக்குதல்

## சாவகச்சேரியில் சம்பவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -மட்டுவில் மோகன்தாஸ் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 9 மணியளவில் தமது வயலில் அறுவடை செய்யச் சென்ற இருவர் மீது மூன்று பேர் கொண்ட குழு தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மட்டுவில்-சந்திரபுரம் பகுதியிலுள்ள தமது வயலில் அறுவடை மேற்கொள்வதற்காக அறுவடை செய்யும் இயந்திரத்திற்காக காத்து நின்ற போதே இந்தத் தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் மட்டுவில் பகுதியைச் சேர்ந்த 35 மற்றும் 40 வயதுடைய இருவர் தலைக்கவசத்தால் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளனர்.

அவர்களது மோட்டார் சைக்கிளும் சேதமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாரிடம் தாக்குதலுக்கு இலக்கானவர்கள் முறையிட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-30)

# கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சின் கீழ் இயங்குகின்ற யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவனமானது உயர்தேசிய டிப்ளோமா சான்றிதழ்களை வழங்கிவருகின்றது.

இந் நிறுவனத்தில் நடைபெறுகின்ற கற்கை நெறிகளுக்கான (Courses-HNDA, HNDM, HNDIT, HNDE, HND in CE, HND in EE, HNDQS & HNDTHM) 2019 ஆம் கல்வி ஆண்டுக்கான புதிய அனுமதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் திகதி 15.02.2019 ஆகும். விண்ணப்பப் படிவங்களை நிறுவனத்திலோ அல்லது இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்வதன் மூலமோ பெற்றுக்கொள்ள முடியும். மேலதிக விபரங்களுக்கு www.sliate.ac.lk & www.Jaffna.sliate.ac.lk இணையத்தளத்தை பார்வையிடவும் என உதவிப் பணிப்பாளர் வை.திசாந்தன் அறிவித்துள்ளார். (இ

# இல்லமெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

. யாழ்.வைத்தீஸ்வரா கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் வாசுகி தவபாலன் தலைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொள்வார். (இ-4)

# நல்லூரில் முன்பள்ளி மாணவர்களுக்கு மூன்று நாட்களுக்கு போஷாக்கு உணவு

(யாழ்ப்பாணம்)

முன்பள்ளி மாணவர்களுக்கு போஷாக்கு உணவு வழங்கும் திட்டத்திற்கு 6 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் தியாகமூர்த்தி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் 31 ஆம் திகதி இடம்பெற்ற சபையின் விசேட கூட்டத்திலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட 550 முன்பள்ளி மாணவர்களுக்கு பாடசாலை நாட்களில் மூன்று நாட்களுக்கு மட்டும் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமெனத் தெரிவித்தார்.

பிரதேச சபையால் ஒதுக்கப்பட்ட நிதி பாடசாலை நாட்கள் முழுவதும் வழங்க இயலாத காரணத்தால் நாட்களை மட்டுப்படுத்தியதாகவும் எதிர்வரும் காலங்களில் பாடசாலை நாட்கள் முழுவதும் முன்பள்ளி மாணவர்களுக்கு போஷாக்கு உணவை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.முகாமையாளர் சம்மேளனம் (JMF) "இலங்கை நெருக்கடி-அடுத்தது என்ன?" தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது. இக் கலந்துரையாடலானது நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இதில் பத்திரிகையாளர், சமூகஆர்வலர் விக்ரர்ஜவன் சிறப்புரையாற்றுவார்.

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (இ

# புதிய அம்புலன்ஸ் வழங்கல்



(சாவகச்சேரி)

வரணி பிரதேச வைத்தியசாலைக்கு அண்மையில் மத்திய அரசால் புதிய அம்புலன்ஸ் (நோயாளர் காவு வண்டி) வாகனம் வழங்கப்பட்டது.

வடமாகாண பிரதிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உமாசங்கர், வரணி பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் அச்சுதனிடம் குறித்த அம்புலன்ஸ் ஆவணங்களை கையளித்துள்ளார். (இ-30)

# செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போக்கட்டி அ.த.க பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும் சிறப்பு விருந்தினராக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் க.கனகேஸ்வரனும் கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி கல்விவலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன் மற்றும் பிரித்தானிய நாட்டின் தென்மராட்சி அபிவிருத்தி ஒன்றிய விளையாட்டுச் செயலாளர் ம.ஸ்ரீதாஸன் ஆகியோர் கலந்து கொள்வர் (இ-30)

• • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி சறோசாதேவியும் சிறப்பு விருந்தினராக பாடசாலையின் பிரித்தானிய நாட்டு பழைய மாணவர் சங்க விளையாட்டுச் செயலாளர் ம.ஸ்ரீதாசனும் கலந்து சிறப்பிப்பர். (இ-30)

# இந்த ஆண்டு இறுதிக்குள் சீனா-இலங்கை இடையில் சுதந்திர வணிக உடன்பாடு

(பீஜிங்)

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான சுதந்திர வணிக உடன்பாடு இந்த ஆண்டு கையெழுத்திடப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக, சீனாவின் சைனா டெய்லி நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவிலுள்ள இலங்கை தூதரகத்தை மேற்கோள்காட்டியே இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.



சுதந்திர வணிக உடன்பாட்டை இறுதி செய்வதற்கான ஆறாவது கட்டப் பேச்சுக்கள் கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறைவடைந்து விட்டதாகவும் அந் தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

சீன சந்தைக்கு இலங்கையிலிருந்து ஏற்றுமதிகளை விரிவுபடுத்துவதற்கு இலங்கை அரசு மிகவும் ஆர்வமாக இருக்கிறது என்றும் சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் கருணாசேன கொடிதுவக்கு தெரிவித்துள்ளார். (இ-7)


## வைத்திய சேவையும் பராமரிப்பும்

உங்கள் வீடுகளில் வைத்து பராமரிக்க கஷ்டமான வயதுவந்த, முதியவர்களை எங்கள் இடத்தில் வைத்து வைத்திய சேவையுடன் பராமரிக்கலாம்.

**அழையுங்கள் : 077 873 0129** (7282)


## பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல்

கீழ்க்குறிப்பிடப்படும் பணி நிலைகளுக்கு தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பதவி, குறியீட்டு இல: கணனிப் பக்க உருவாக்குநர் 322/15
சம்பள அளவுத்திட்டம்: 15545–18245 (சுற்று நிருப இல. 04/2018 130X10–140X10 இற்கு அமைய)

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்: க.பொ.த சா.தர பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி மற்றும் கணிதம் / எண் கணிதம் உள்ளடங்கிய 06 பாடங்களில் சித்தியுடன் அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 03 மாதங்களுக்கு குறையாத முழுநேர MS OFFICE அல்லது அதை ஒத்த கணனி பாடநெறி ஒன்றை பூர்த்தி செய்தமைக்கான தகைமை சான்றிதழ் அத்துடன் ஏதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஓராண்டுக்கு குறையாத செயல் அனுபவம்.

02. பதவி : களஞ்சிய மேற்பார்வையாளர்
சம்பள குறியீட்டு இல : 207/13
சம்பள அளவுத்திட்டம் :16365–19265 (சுற்று நிருப இல. 04/2018 140X10–150X10 இற்கு அமைய)

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்.

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:** கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. சாதாரண தரத்தில் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் 02 ஆண்டு கால அனுபவம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி : 14.02.2019**

**நிபந்தனைகள்**

1. பதவிக்கேற்ப பிணைப்பணம் அறவிடப்படும்.
2. வயது 18 தொடக்கம் 45 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும் (கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது)
3. கூட்டுறவுச் சங்கங்களில் தற்பொழுது கடமையாற்றுபவர்கள் சங்கத்தின் ஊடாக சிபார்சு செய்து விண்ணப்பித்தல் வேண்டும்.
4. சங்க எல்லைப்பரப்புக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5. விண்ணப்பங்கள் முழுப்பெயர், முகவரி, தே.அ.அ.இல., பிறந்த திகதி, தகைமைகள், அனுபவம் என்பவை உள்ளடங்கலாக சுயமாக தயாரிக்கப்பட்டு அல்லது சங்கத்தில் மாதிரி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து கல்விச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், மேலதிக தகைமைகளுக்கான சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
6. விண்ணப்பங்களை ஏற்கவோ, நிராகரிக்கவோ நெறியாளர் குழுவுக்கு உரிமையுண்டு.
7. விண்ணப்பங்கள் "**தலைவர், பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கண்டி வீதி, பளை**" எனும் முகவரிக்கு எதிர்வரும் **14.02.2019** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.
8. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும், பதவியின் பெயர், குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

க.இராசதுரை-தலைவர்
பளை ப.தெ.வ.அ.கூ.சங்கம்-2019.02.01

## கலாபூசண அரச விருது



சிறுவயதில் இருந்து கலைத் துறையில் ஈடுபட்டு சுவாமி அலங்காரப் பொருள், அலங்காரம் அறநெறிப் பாடசாலை 29 வருடம் நடாத்த கலை நிகழ்வுகள், அதற்கு தேவையான பொருட்கள், திருமாமலர்கள், திருமுருகன் பாமாலை, திருமுருகன் பவளமலர் இந்து திருமணமும் அதன் சிறப்புக்களும் வெளியிட்டு ஏறுபடி எனும் நூலையும் இப்போது எழுதி வெளியிட்டார். மேலும் பல கலைப் பொருட்கள் தயாரிப்பதிலும், சமூக சேவையும் செய்து ஜனாதிபதி விருது , முதலமைச்சர் விருது செம்புலக் குருசில் விருது , மேன்மைமிகு சிறந்த (அறநெறி) ஆசிரிய சேவை விருது, சிறந்த சமூக சேவையாளர் விருது, சமூக ஜோதி என பல விருதுகள், பாராட்டுக்கள், பரிசுகள் பெற்ற எங்கள்

## சைவப்புரவலர் திருமுருகன் நடராசா சிவசுப்பிரமணியம்

அவர்கள் மேலும்பல ஆண்டுகள் சிறப்பான சேவைகள் செய்து எமக்கும் ஊருக்கும் பெருமை சேர்க்க எல்லாம் வல்ல அரசகேசரிப் பிள்ளையார், நீர்வை கந்தவேள் பெருமான் தாள் பணிந்து வாழ்த்துகின்றோம்.

(7368)

வாழ்த்துவோர்:
மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் , அன்பர்கள், ஆதரவாளர்கள் யாவரும் .


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்1 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L,அரச எழுதுநர்<br>தொ.இ: B/9201 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:MBBS , Doctor<br>எதிர்பார்ப்பு:Doctor, Engineer , Lecturer Accountant<br>தொ.இ: G/9203 |
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>கி.பா: 29செவ் 7 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: B/9202 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்A/L,தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு:அரச தனியார் தொழில்<br>தொ.இ: G/9208 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பரணி 1செவ் 12 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L , France<br>தொ.இ: B/9204 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:பூரம்<br>கி.பா: 29 3/4 உயரம்: 154cm<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: ,G/9211 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:BSC பட்டதாரி France<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/9205 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 21 1/4 சூரி செவ் 12 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:மருத்துவபீடம்<br>எதிர்பார்ப்பு: Doctor,Engineer, Lecturer<br>தொ.இ: G/9215 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# தேர்தல் சட்டத்தை முறையானதாக்கும் பாராளுமன்றத் தெரிவுக்குழு வேண்டும்

## அமைச்சர் கிரியெல்லவுக்கு தேர்தல் ஆணையாளர் தேசப்பிரிய கடிதம்

(கொழும்பு)

**தேர்தல் சட்டத்தை முறையானதாக்கும் வகையில் பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிக்குமாறு தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, பாராளுமன்ற சபை முதல்வர் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



தேர்தல் செயற்பாடுகளை முறையாக முன்னெடுத்தல் மற்றும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். அதற்கான செயற்பாடுகளை பலப்படுத்தல், அனைத்து வாக்காளர்களினதும் வாக்குகளை முறையாகப் பெற்றுக்கொள்ளல் ஆகியவற்றுக்கு தற்போதைய தேர்தல் சட்டத்தை முறையாக அமைப்பது காலத்தின் தேவையாகவுள்ளது என்றும் அவர் அந்த வேண்டுகோளில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் ஆணையாளர் பாராளுமன்ற சபை முதல்வருக்கு இது தொடர்பில் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

1956 ஆம் ஆண்டிலிருந்து சகல தேசிய தேர்தலுக்குப் பின்னரும் தேர்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய பல்வேறு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்காக பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்டு வந்துள்ளது.

கடந்த காலங்களில் தேசிய அடையாள அட்டையை கட்டாயமாக்குவது, தேர்தல்முறை தொடர்பில் ஆராய்வது போன்ற விடயங்கள் தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அண்மைக் காலமாக தேர்தல் செயற்பாடுகள் மற்றும் அது தொடர்பான சட்ட மறுசீரமைப்புகள் தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்படவில்லை.

பல்வேறு அரசியல் கட்சிகள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள், சிவில் அமைப்புகள் ஆகியன தேர்தல் செயற்பாடுகள் நீதியானதாக இருக்க வேண்டியதன் அவசியத்தையும் அதற்காக தேர்தல் சட்டத்தை பலப்படுத்துவது தொடர்பிலும் தொடர்ச்சியாக கருத்துக்களை முன்வைத்து வருகின்றன.

இது தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக்குழு மூலமாக விடயங்களை முன்னெடுப்பது சிறந்தது என தேர்தல் ஆணைக்குழு கருதுகிறது.

அதற்கமைய தேர்தல் சட்டத்தை பலப்படுத்தும் வகையில் பாராளுமன்ற தெரிவுக்குழுவை அமைத்து அதன் சிபாரிசுக்கிணங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றும் தேர்தல் ஆணையாளர் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தேர்தலை துரிதமாக நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்

## நீதியமைச்சர் தலதா கூறுகிறார்



(கொழும்பு)

தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தியதன் காரணமாகவே உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் போன்று மாகாண சபைத் தேர்தலும் தள்ளிப் போனதாக நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

வெலிமடையில் நேற்று முன்தினம் புதிய நீதிமன்றக் கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டிய பின்னர், செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

சாதாரணமாக நாங்கள் கூட்டு எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிப்பதில்லை. தேர்தல் நடத்தப்பட வேண்டிய நேரத்தில் நடக்கும்.

தேர்தல் முறை மாற்றம் காரணமாகவே மாகாண சபைத் தேர்தல் தள்ளிப் போனது. எனினும்தேர்தலை துரிதமாக நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் பட்டியல் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மரண தண்டனை பெற்ற கைதிகளின் பெயரப் பட்டியலை அனுப்பும் பொறுப்பை நாங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கே வழங்குவோம். சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடாக 48 பேரின் பெயர்ப் பட்டியல்களை பெற்றோம். அவர்களில் 30 பேர் மேன்முறையீடு செய்துள்ளனர்.

ஏனைய 18 பேரின் அனைத்து விடயங்களையும் தேடிப் பார்த்து, அவர்கள் கட்டாயம் மரண தண்டனையை நிறைவேற்றத் தகுதியானவர்களா? என்பதை ஆராய்ந்து, அது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அந்த அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் தலதா அத்துகோரள மேலும் தெரிவித்தார். (இ-7)

# த.மு.கூட்டணியை விமர்சிப்பதற்கு இ.தொ.காவுக்கு அருகதையில்லை

## வேலுகுமார் காட்டம்



(கண்டி)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வெறும் 20 ரூபாய் சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுத்துவிட்டு, ஏதோ உலக சாதனை நிகழ்த்திவிட்டது போல் வீராப்பு பேசும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என மார்தட்டிக் கொள்வது, வங்குரோத்து அரசியலின் உச்சகட்டமாகும் என்று, ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட எம்.பியுமான வேலுகுமார் தெரிவித்தார்.

சலுகைகளுக்கும் எலும்புத் துண்டுகளுக்கும் விலைபோகாமல், மக்களின் உரிமைகளை முன்னிலைப்படுத்தி, கொள்கை அரசியலை முன்னெடுத்துவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியை விமர்சிப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு எவ்வித அருகதையும் கிடையாதென்றும் அவர் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மலையக மக்களுக்கான அபிவிருத்தி மற்றும் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதே எமது இலக்காகும்.

இதன்படி மலையக அபிவிருத்தி அதிகாரசபையை நிறுவியுள்ளோம். தோட்டப் புறங்களின் அபிவிருத்திக்கு தடையாக இருந்த பிரதேச சபை சட்டத்தை மாற்றியமைத்துள்ளோம். இருந்தாலும், அதை செய்து விட்டோம், இதை செய்யப் போகின்றோம் என ஒருபோதும் நாம் மார்தட்டியதில்லை.

"எனினும், சரணாகதி அரசியலை நடத்துபவர்கள், புதுமணத் தம்பதிக்கு அருந்ததி காட்டப்படுவது போல், "தாத்தா அதை செய்தார், இதைச் செய்தார்" என அந்தக் காலத்துக் கதையைக் கூறியே அரசியல் நடத்தி வருகின்றனர்.

உருப்படியாக எதையும் செய்ததாகத் தெரியவில்லை. கூரை ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவன், வானமேறி வைகுண்டம் போன கதை போல் தான் சேவல் கட்சிக் காரர்களின் செயற்பாடுகள் இருக்கின்றன.

"மலையக மக்களுக்கென தனித்துவமானதொரு கூட்டணியை அமைத்து, இதுவரை காலம் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாத மாவட்டங்களிலும், தொகுதிகளிலும் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை வென்றெடுத்துள்ளோம். உரிமை அரசியலுக்காக போராடி வருகின்றோம்.

"ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணக்கப்பாட்டு ரீதியில் அரசியல் நடத்திவரும் நாம், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சரணாகதி அரசியலை நடத்தவில்லை என்பதை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் புரிந்துகொள்ள வேண்டும்.

சூழ்ச்சி மூலமாவது பதவியைப் பெறவேண்டுமென்ற, கீழ் மட்ட அரசியல் சிந்தனையும் எம்மிடம் இல்லை" என, அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிரதமர் ரணிலுக்கு எதிரான மனு ஒத்திவைப்பு



(கொழும்பு)

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பாராளுமன்ற உறு**ப்பினர் பதவியை சவாலுக்கு உட்படுத்தி கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஷர்மிளா கோனவல தாக்கல்செய்த மனு, எதிர்வரும் 12ஆம் திகதி பரிசீலிக்கப்பட வுள்ளது.

நேற்று இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதியரசர்களான அனில்குணரத்ன மற்றும் பிரியந்த ஃபெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணையிலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைவர் நீதியரசர் தீபாலி விஜேசுந்தர நேற்று முன்தினம் தனிப்பட்ட காரணங்களால் விலகியிருந்தார்.

தனியார் நிறுவனத்தின் பங்குகளுக்கு உரிமை யாளராக இருக்கின்றமை மற்றும் அது குறித்த சொத்துப் பொறுப்புக்களை வெளிப்படுத்தாமை ஆகிய குற்றச்சாட்டுகளை பிரதமருக்கு எதிராக முன்வைத்து இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன் ஊடாக பிரதமர் அரசியல் யாப்பை மீறி இருப்பதாகவும் இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் ந.பரமேஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக இலங்கை மின்சார சபை வடமாகாண உதவிக் கணக்காளர் இராசேந்திரம் மோகனகலா கலந்து கொள்வார். (இ-4)

## குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு

# இயற்கை நீதியின் பிரகாரம் கைதிக்குத் தண்டனைத் தணிப்பு

(யாழ்ப்பாணம்)

குடும்ப சூழ்நிலை உள்ளிட்ட காரணங்களை கவனத்தில் எடுத்து இயற்கை நீதியின் பிரகாரம் சிறைத் தண்டனை வழங்கப்பட்ட கைதிக்கு தண்டனைத் தணிப்பு வழங்கி யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் அந்தோனி சாமி பீற்றர் போல் தீர்ப்பளித்துள்ளார்.

18 மாதங்கள் சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்த கைதிக்கு அவரது குடும்ப நிலையைக் கருத்தில் எடுத்து தண்டனையை 2 ஆண்டுகளுக்கு ஒத்தி வைத்து நீதவான் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாண்ம் அரியாலைப் பகுதியில் வீடொன்றில் நகை மற்றும் பணம் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பான குற்றச்சாட்டில் இருவருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றன.

விசாரணைகளின் நிறைவில் பாதிக்கப்பட்டோரின் முறைப்பாடுகளின் அடிப்படையில் எதிரிகள் இருவரையும் குற்றவாளிகளாக இனங்கண்டு விளக்கத்தை முன்னெடுத்த நீதவான் சின்னத்துரை சதீஸ்தரன் தீர்ப்பளித்தார்.

இந் நிலையில் யாழ்ப்பாணம் நீதிமன்றின் புதிய நீதவான் ஏ.எஸ்.பி. போல், முன்னிலையில் குற்றவாளிகள் இருவருக்கும் தண்டனைத் தீர்ப்பளிக்க வழக்கு கடந்த மாதம் நடுப்பகுதியில் அழைக்கப்பட்டது.

முதலாவது சந்தேக நபருக்கு கொள்ளைச் சம்பவம் இடம் பெற்ற வீட்டுக்குள் அத்துமீறி உள்நுழைந்த குற்றத்துக்கு 6 மாதங்கள் சிறைத் தண்டனையும் நகை மற்றும் பணம் கொள்ளையிட்ட குற்றத்துக்கு 12 மாதங்கள் சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

இரண்டாவது சந்தேக நபர் இந்தக் கொள்ளைச் சம்பவத்துடன் உடந்தையாக இருந்தார் என்ற குற்றத்துக்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு 40 ஆயிரம் ரூபா இழப்பீட்டை வழங்கவேண்டும் என்றும் நீதவான் தண்டனைத் தீர்ப்பளித்தார்.

இந் நிலையில் ஒன்றரை ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்ட கைதியின் குடும்ப நிலை தொடர்பில் குறிப்பிட்டு அவரது சட்டத்தரணி வீரகத்திப்பிள்ளை கௌதம் நகர்த்தல் பத்திரம் அணைத்து மன்றுக்கு அறிவித்தார்.

அதனை ஆராய்ந்த நீதவான், வழக்கை கடந்த புதன்கிழமை அழைக்க திகதியிட்டதுடன், கைதியை மன்றில் முற்படுத்த யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு கட்டளையிட்டார். மேலும் தண்டனைக் கைதியின் மனைவி மற்றும் குழந்தைகளையும் மன்றில் முன்னிலையாக நீதிவான் அறிவுறுத்தினார்.

வழக்கு மீள அழைக்கப்பட்டது. கைதி மன்றில் முற்படுத்தப்பட்டார். கைதியின் மனைவி, குழந்தைகள் இருவரும் மன்றில் முன்னிலையாகினர். தண்டனைத் தணிக்கை தீர்ப்பை நீதவான் வழங்கினார்.

"ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளில் குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் தண்டனைத் தீர்ப்பு வழங்குவதற்காக மீளவும் ஒரு விசாரணை முன்னெடுக்கப்படும்.

குற்றவாளியின் குடும்ப நிலை, அவரது முற்குற்றங்கள், சமூகத்தில் அவரது வகிபாகம் உள்ளிட்டவை இதன்போது கவனத்தில் எடுத்து குற்றவாளிக்குத் தண்டனை வழங்கும் நடைமுறை அந்த நாடுகளின் நீதித் துறையால் கடைப்பிடிக்கப்படுகிறது.

அவ்வாறானதொரு சட்ட ஏற்பாடுகள் எமது நாட்டில் இல்லை. இந்த வழக்கின் தண்டனைக் கைதியின் குடும்பம் இவரின் வருமானத்திலேயே தங்கியிருக்கின்றது. இவர் சிறையில் அடைக்கப்பட்டால் அவரது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளின் நாளாந்த வாழ்வாதாரம் வெகு வாகப் பாதிப்படையும்.

அதனால் வறுமையின் உச்சத்தில் அவர்கள் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்படுவார்கள். எனவே கைதியின் குடும்ப நிலை, முற் குற்றங்கள் உள்ளிட்டவையை கவனத்தில் எடுத்து இயற்கை நீதியின் பிரகாரம் அவரது தண்டனையை இரண்டு ஆண்டுகளுக்கு இந்த மன்று ஒத்திவைக்கின்றது.

அவருக்கு இந்தத் தண்டனைத் தணிப்பு வழங்கப்படும் அதேநேரத்தில் பாதிக்கப்பட்டவர்களும் கருத்தில் எடுக்கப்படுகின்றனர். அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 40 ஆயிரம் ரூபா இழப்பீட்டை குற்றவாளி வழங்க வேண்டும்.

அத்துடன், இனிவரும் காலங்களில் குற்றவாளி எந்தவொரு குற்றச்செயல்களிலும் ஈடுபடக் கூடாது என்று மன்று எச்சரிக்கின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு தண்டனை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதால் அந்தக் காலப்பகுதிக்குள் குற்றச் செயல் ஒன்று தொடர்பில் கைது செய்யப்பட்டால் இந்த ஒன்றரை ஆண்டுகள் தண்டனையும் அவர் அனுபவிக்க நேரிடும்" என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் தண்டனைத் தணிப்பு தீர்ப்பளித்தார். (இ-9)

## ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைக்காமல்

# எந்த முறையிலாவது மாகாணத் தேர்தலை உடன் நடத்த வேண்டும்

## அரசிற்கு தயாசிறி எச்சரிக்கை

(கொழும்பு)

எந்த முறையின் கீழாவது மாகாண சபைத் தேர்தலை துரிதமாக நடத்துமாறும் தவறினால் தேர்தலை நடத்தக் கோரி உச்ச நீதிமன்றத்திற்கு செல்ல நேரிடும் எனவும் சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி எச்சரித்துள்ளார்.

மாகாண சபைத்தேர்தலை நடத்துவதற்காக சகல விதமான அழுத்தங்களையும் அரசாங்கத்திற்கு வழங்க இருப்பதாக குறிப்பிட்ட அவர், மே 31 ஆம் திகதிக்கு முன்னர் சகல மாகாண சபைகளின் தேர்தல்களை நடத்துவதற்காக அமைச்சரவைப் பத்திரமொன்றை ஜனாதிபதி சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் கட்சித் தலைமையகத்தில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய தயாசிறி பழைய விகிதாசார முறையில் தேர்தலை நடத்துவதற்கான புதிய சட்ட மூலத்தை அரசாங்கம் சமர்ப்பித்தால் சகல எம்.பிக்களும் அதற்கு ஆதரவு வழங்கத் தயாராகவுள்ளனர் எனவும் தெரிவித்தார். ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைக்காமல் தேர்தலை நடத்த வேண்டும்.

இது தொடர்பான யோசனையை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற நாம் ஒத்துழைப்பு வழங்குவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

சட்டம் ஒழுங்கு அமைச்சரான ஜனாதிபதி போதைப் பொருள் ஒழிப்பிற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளன. சட்ட விரோத குழுக்கள் பலவற்றை கைது செய்ய முடிந்துள்ளது. சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களே சட்டம் முறையாக நிறைவேற்றப்படுவதை எதிர்க்கின்றனர்.

சுங்கப் பணிப்பாளர் நாயகம் விவகாரம் குறித்து கருத்துத் தெரிவித்த அவர், அரச வருமானத்தில் 35 வீதத்தை ஈட்டித் தரும் சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு பல்வேறு



அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. அவர் வரிகளை முறையாக அறவிட நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் வாகனங்கள் அடங்கலான பல பொருட்களுக்கான தீர்வை குறைக்கப்பட்டுள்ளதால் வரி வருமானம் குறைந்துள்ளது.

சுங்கப்பணிப்பாளர் பதவிக்கு இதுவரை பொதுநிர்வாகம் அல்லது சுங்கத் திணைக்களத்தில் பணியாற்றிய ஒருவரே நியமிக்கப்பட்டார். அதற்கு மாற்றமாக இம்முறை நியமனம் வழங்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ரணிலுக்கு தேவையானவர்கள்

# போட்டி போட்டுக்கொண்டு திருட்டுத்தனம் செய்தனர்

## எஸ்.பி.திஸாநாயக்க புகார்

(மருதானை)

அரசாங்கத்தில் அதிகமாகத் திருடக்கூடிய துறைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் அவருக்குத் தேவையானவர்களை அமைச்சர்களாக நியமித்தார். அதனால் போட்டிபோட்டுக் கொண்டு அவர்கள் திருட்டுத்தனம் செய்தனர் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட புதிய காரியாலயம் நேற்று முன்தினம் மருதானை புஞ்சி பொரளையில் திறந்து வைக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 1952 ஆம் ஆண்டிலிருந்து தனித்துப் போட்டியிட்டு வந்ததால் தோல்வியடையும் நிலை ஏற்பட்டது.



அதன் பின்னர் 1977இல் இருந்து நாங்கள் தேர்தலில் வாக்களிக்கும்போது வெற்றி பெறும் நிச்சயம் இருந்த போது வாக்கெண்ணும் போது எமக்கு தோல்வியேற்படும் நிலை இருந்து வந்தது. ஆனால் 1994 இற்கு பிறகு நாங்கள் கூட்டாக போட்டியிட ஆரம்பித்தோம் அதன் பின்னர் எங்களுக்குத் தொடர்ந்து வெற்றி கிடைத்தது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி எப்போதும் இடதுசாரி கட்சிகளை இணைத்துக் கொண்டே பயணித்து வருகின்றது என்றாலும் நாட்டைப்புதிய பாதையில்கொண்டு செல்லவும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கிலும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயற்படத் தீர்மானித்தது.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆரம்பத்திலேயே அவரது பழக்கத்தைக் காட்டி விட்டார்.

அத்துடன் அரசாங்கத்தில் அதிகமாகத் திருடக்கூடிய துறைகளுக்கு அவருக்கு தேவையானவர்களை அவர் அமைச்சர்களாக நியமித்தார்.

அதனால் போட்டிபோட்டுக் கொண்டு திருட்டுத்தனம் செய்தனர். இதனை பொறுத்துக்கொள்ள முடியாமலேயே ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேற நடவடிக்கை எடுத்தார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# விண்வெளிக்கு பயணமாகும் முதல் ஈழத்தமிழ் மாணவி!



(லண்டன்)

ஈழத்தமிழ் மாணவி ஒருவர் முதன்முறையாக சர்வதேச விண்வெளி ஓடத்திற்கு பயணமாகவுள்ளார்.

பிரித்தானியாவில் வசிக்கும் சியோபன் ஞானகுலேந்திரன் என்ற மாணவியே, விண்வெளி தொடர்பான கற்கைநெறியில் சிறப்பு தேர்ச்சி பெற்று விண்வெளி ஓடத்திற்கு செல்லவுள்ளார்.

பிரித்தானியாவிலுள்ள பல மாணவர்கள் விண்வெளி தொடர்பாக கல்வி கற்று வருகின்றனர்.

செயற்கை கோளை விண்வெளிக்கு ஏவுவது, விண்வெளியிலிருந்து நில அளவை செய்வது என பல துறைகளில் சுமார் 30 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இந்நிலையில் அதீத திறமை மிக்க 2 மாணவர்களை விண்வெளிக்கு அனுப்ப பிரித்தானிய விண்வெளி ஆய்வு மையம் தீர்மானித்திருந்தது.

அதன்படி, ஈழத்தமிழ் மாணவியான சியோபன் ஞானகுலேந்திரன் திறமையாக செயற்பட்டு விண்வெளிக்கு செல்லும் இருவரில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேலும் இவருடன் இணைந்து பிரித்தானிய மாணவியான டியானாவும் சர்வதேச விண்வெளி ஓடத்திற்கு செல்லவுள்ளார். (இ-7)

# மன்னாகண்டல் வெளிவயல் குளத்தில் வயோதிபர் சடலமாக மீட்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஒட்டு சுட்டான் மன்னாகண்டல் வெளிவயல் குளத்தில் இருந்து வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை நடை பெற்றுள்ளது.

குறித்த குளத்தில் சடலம் இருப்பதைத் தெரிந்த விவசாயிகள் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். சம்பவ இடத்திற்கு விரைந்த புதுக்குடியிருப்பு பொலிஸார் குறித்த சடலத்தை மீட்டு மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளார்கள்.

இதன்போது கெருடமடு மன்னாகண்டலை சேர்ந்த நாகரர்சா தங்கராசா (வயது 70) என்பவர் என அடையாளம் காணப்பட்டார்.

மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள். (2-281)

# வைத்திய நிலைய அலுவலகத்தில் திருட்டில் ஈடுபட்ட சிறுமி கைது

## சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் ஒப்படைப்பு

(மன்னார்)

மன்னார் சிலாபத்துறை வைத்திய நிலைய அலுவலகத்தில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட சிறுமியொருவர் சிலாபத்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுமன்னார் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்ட சம்பவம் இடம் பற்றுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மன்னார் சிலாபத்துறை வைத்திய நிலைய அலுவலகத்தில் எவரும் இல்லாத சமயம் பார்த்து உள் நுழைந்த பன்னிரண்டு வயது சிறுமி அங்கு இருந்த திறப்பு, பேனா, கொப்பி, பல்ப் இவ்வாறான சிறிய சிறிய பொருட்களை களவாடிச் சென்றுள்ளார்.

பொருட்கள் களவாடப்பட்ட சம்பவம் தொடர்பாக சிலாபத்துறை பொலிஸில் முறைப்பாடுசெய்யப்பட்டதும் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டதுடன் அலுவலக தொலைபேசி தொடர்பு இலக் கங்களை பரிசோதித்த போதே களவாடப்பட்ட பொருட்கள் இருந்த வீடு கண்டு பிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரஸ்தாப சிறுமி பொருட்களை திருடியபின் அலுவலகத்திலுள்ள தொலைபேசியிலிருந்து வீட்டுக்கு தொடர்பு ஏற்படுத்தியதன் மூலம் அவ் வீட்டை பரிசோதித்தபோதே திருட்டுப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொருட்களுடன் கைது செய்யப்பட்ட சிறுமியை சிலாபத்துறை பொலிஸார் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மன்னார் மாவட்ட நீதவான் நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

குறித்த சந்தேக நபரான சிறுமியை மன்னார் சிறுவர் பராமரிப்பு நிலைய அதிகாரிகளுக்கூடாக கைதடி இரட் சணைச்சேனை சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் ஒப்படைக்கும்படியும்திருட்டுப்போன சான்றுப் பொருட்களை சம்பவ திணைக்கள அதிகாரியிடம் ஒப்படைக்குமாறும் மன்று கோரும் வேளையில் இப் பொருட்களை மீளவும் ஒப்படைக்க வேண்டும் என நீதிபதி கட்டளை பிறப்பித்து வழக்கு விசாரணையை பிறிதொரு திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார். (2-285)

# முல்லையில் படைப்புழு தாக்கம் குறித்து விழிப்புணர்வு நாடகம்



(பனிக்கன்குளம்)

படைப்புழுவின் தாக்கம் முல்லைத்தீவிலும் துரித கதியில் பரவி வருகின்ற நிலையில் இந்தத் தாக்கம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் பேரணி முன்னெடுக்கப்பட்டு வீதி நாடகமும் நடத்தப் பட்டுள்ளது

முல்லைத்தீவு விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் பல்வேறுபட்ட திணைக்களங்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் என்பன இணைந்து நேற்று முன் தினம் காலை 9.30 மணியளவில் முல்லைத்தீவு புதுக் குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விசுவமடு பகுதியில் இருந்து ஆரம்பமான விழிப்புணர்வு பேரணி ரெட்பானா சந்திவரை சென்று அங்கு மக்களுக்கு விழிப்புணர்வு நாடகமும் நடத்தப் பட்டுள்ளது.

இதன்போது அவற்றை கட்டுப்படுத்தும் முறைகள் தொடர்பான துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட் டுள்ளன

அத்துடன் விவசாய செய்கையில் பாதிப்பை ஏற்படுத்தி வரும் படைப்புழுவிலிருந்து பாதுகாக்கும் முறைமைகள் தொடர்பாகவும் விவசாயிகள், பொது மக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளன.(2-281)

# ஊற்றுக்குளத்தில் திட்டமிட்டு ஏற்படுத்தப்படும் சிங்கள மயமாக்கலை தடுத்து நிறுத்தக்கோரி

## ஜனாதிபதிக்கு ஆனந்தன் எம்.பி.கடிதம்

(குருமன்காடு)

வவுனியா வடக்கு ஊற்றுக்குளம் தமிழ் கிராமத்தில் திட்டமிட்டு ஏற்படுத்தப்படும் சிங்கள மயமாக்கலை உடன் தடுத்த நிறுத்தக்கோரி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன் னணியின் செயலாளரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் நேற்று அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அனுப்பப்பட்ட அக் கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது.

வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஊற்றுக்குளம் கிராமம் தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த பகுதியாகும். இந்தக் கிராமத்தில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் இது வரை மீள குடியேறாத போதும் அங்குள்ள விவசாய நிலங்களில் மக்கள் இன்றளவும் விவசாயம் செய்து வருகின்றனர். இந்நிலையில் ஊற்றுக்குளம் கிராமத்தின் காட்டுப்பகுதியில் பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டு அதனை சூழ சிங்கள குடும்பங்களை குடியேற்றும் நோக்கில் கொட்டில்களும் அமைக்கப்பட்டுள்ளன.அவ் விகாரையில் பௌத்த பிக்கு ஒருவரும் அவரது காவலாளிகள் இருவரும் தங்கியிருக்கின்றனர்.

மக்களது சொந்த நிலங்களை துப்புரவு செய்வதற்கு தடையாக இருக்கும் வன வள திணைக்களத்தினர் சிங்கள மக்கள் என்ற காரணத்தினால் இவ் விடயத்தில் எந்தவிதமான நடவடிக்கையினையும் எடுக்காத நிலையில் மிக சுதந்திரமாக காடழிக்கப்பட்டு குடியேற்றங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

கச்சல் சமளன்குளத்திற்கும் மேற்கே உள்ள ஊற்றுக்குளத்திற்கும் இடைப்பட்ட 3 மைல்கள் வரையான அடர்ந்த காட்டுப்பகுதியூடாகச் செல்லும் பாதையின் இரு மருங்கிலும் காணித் துண்டுகள் துப்புரவு செய்யப்பட்டு சிறுகுடிசைகள் அமைக்கப்பட்டு புதிய சிங்களக் குடியேற்றத்திற்கான உட்கட்டமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எமது பரம்பலை மாற்றியமைக்கக்கூடிய வகையில் புதிய காடுகளை அழித்து புதிய சிங்கள குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ் கிராமங்கள் சிங்கள கிராமமாக மாற்ற மடைவது இன்றளவும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.

ஒரு புறத்தில் இராணுவம் தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து வைத்திருக்கிறது.மறுபுறத்தில் வன வளத் திணைக்களம் காணிகளைப் பறிக்கிறது. மகாவலி அதிகார சபை மக்களின் காணிகளை துண்டாடுகிறது. இன்னொரு புறத்தில் தொல்லியல் திணைக்களம் தொன்மச் சின்னங்களை ஆக்கிரமித்து விகாரைகள் அமைக்கின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக அண்மையில் செம்மலை நீராவியடிப் பிள்ளையார், வெடுக்குநாறி மலை, குருந்தூர் மலை, கல்லுமலை பிள்ளையார் ஆலயம் ஆகிய இடங்களில் புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பால் ஆதரவு வழங்கப்பட்டு கடந்த வரவு-செலவு திட்டத்தின்போது ஆயிரம் விகாரைகள் அமைக்கப்படும் என்கின்ற செயற்பாடு வடக்கில் வலிந்து திணிக்கப்படுகிறது.

ஜனாதிபதி இத் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களையும் பௌத்த மயமாக்கலையும் காடழிப்பையும் உடனடியாகத் தடுத்து நிறுத்தி எமது பூர்வீக நிலங்களில் நாம் சுதந்திரமாகவும் நிம் மதியாகவும் வாழ வழியேற் படுத்திக் கொடுக்க வேண்டும்என்று தங்களை கேட்டுக் கொள்கிறோம் என்றுள்ளது. (2-250)


# மீனவர்கள் கரைசேர்ந்தனர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடலில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை காணாமல் போனதாக கூறப்பட்ட இரு மீனவர்களும் நேற்றுக் காலை கொக்குளாய் பகுதியில் படகுடன் கரை சேர்ந்தனர்.

முல்லைத்தீவு கள்ளப்பாடு தெற்கு பகுதியில் இருந்து கடந்த மாதம் 30 ஆம் திகதி தொழிலுக்கு சென்ற மீனவர்கள் நேற்று வரை வீடு வந்து சேரவில்லையென குடும்பத்தினர் தெரிவித்திருந்தனர்.

இந் நிலையில் இரண்டு மீனவர்களும் படகின் இயந்திரம் பழுதடைந்த காரணத்தால் கடலில் தத்தளித்ததாகவும் பின்னர் படகுடன் நேற்றுக் காலை கரை சேர்ந்துள்ளனர். (2)



## சட்ட விரோத செயற்பாடுகள் தொடர்பாக

# 545 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு 56 இலட்சம் ரூபா தண்டப்பணமாக அறவீடு

## வவுனியா மாவட்ட மதுவரி திணைக்களப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் கடந்த வருடத்தில் மட்டும் 545 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட மதுவரி திணைக்களத்தின் பொறுப்பதிகாரி அசோக திலகரட்ண தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தின் மதுவரித்திணைக்களத்தால் கடந்தவருடம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக நேற்றைய தினம் வினவிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் சட்டவிரோதமான கள்ளு மற்றும் சாராய விற்பனை, கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனைகளில் ஈடுபட்டமை, கஞ்சா கடத்தல் மற்றும் விற்பனைகளில் ஈடுபட்டமை போன்ற சட்ட விரோத செயற்பாடுகள் தொடர்பில் கடந்த வருடத்தில் மட்டும் 545 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அந்த வகையில் வரி செலுத்தாமல் பீடிகள் விற்பனை செய்யப்பட்டமைக்காக 3 வழக்குகளும், சட்ட விரோதமாக கள்ளு விற்பனை செய்தமைக்காக 270 வழக்குகளும், அனுமதிப்பத்திரமின்றி கள்ளை வைத்திருந்தமைக்காக 15 வழக்குகளும், அனுமதியின்றி மதுபானம் விற்பனை செய்தமைக்காக 35 வழக்குகளும் கஞ்சா வைத்திருந்தமைக்காக 5 வழக்குகளும், சட்டவிரோத வடிசாராயத்தை உடைமையில் வைத்திருந்தமைக்காக 3 வழக்குகளும், அனுமதியின்றி வெளிநாட்டு மதுபானங்கள் வைத்திருந்தமைக்காக மூன்று வழக்குகளும், அனுமதியின்றி பீடியை உற்பத்திசெய்தமை க்காக 6 வழக்குகளும், 21 வயதிற்கு கீழ்பட்டவர்களுக்கு புகைத்தல் பொருட்களை விற்பனை செய்தமைக்காக 154 வழக்குகளும், பொது இடத்தில் புகைத்தமைக்காக 54 வழக்குகளும், தாக்கல் செய்யப்பட்டன.

குறித்த குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக வவுனியா நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதுடன் அவர்களுக்கான தண்டப்பணமாக 56 இலட்சம் ரூபாய் அறவிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-250)

# மருந்தாளர்கள் அடையாள பணிப்புறக்கணிப்பு



(மன்னார்)


அரசாங்க மருந்தாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நாடு முழுவதிலுமுள்ள அரச வைத்தியசாலைகளிலுள்ள மருந்தாளர்கள் நேற்று காலை முதல் அடையாள பணிப்புறக்கணிப்பை மேற் கொண்டுள்ளனர்

அந்த வகையில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள அரச வைத்தியசாலைகளில் உள்ள மருந்தாளர்கள்நேற்று காலை முதல் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத் திருந்தனர்.

தற்போது அரசாங்கத்தால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் மருந்தக உதவியாளர் நியமனங்களை உடனடியாக நிறுத்த கோரி மேற்படி பொது வைத்தியசாலை மற்றும் பிரதேச வைத்தியசாலை மருந்தாளர்கள் அடையாள பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளனர்

குறித்த பணிப்புறக்கணிப்பினால் நேற்றைய தினம் நோய்காரணமாகவும் பொது பரிசோதனைக்காகவும் சிகிச்சை பெறவருகைதந்த நோயாளர்கள் மருந்துகள் பெற்றுக் கொள்ள முடியாமல் சிரமங்களுக்கு ஆளாகி வீடு திரும்பினர். (2-285)

## மக்களின் போராட்டத்தை அடுத்து
# கேப்பாப்பிலவு முகாமை பலப்படுத்தியது இராணுவம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்களது ஜனநாயகப் போராட்டத்தைத் தொடர்ந்து இராணுவ முகாமை பலப் படுத்தும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

704 ஆவது நாளாக இராணுவத்தினர் வசமுள்ள தமது சொந்த நிலங்களை விடுவிக்குமாறுகோரி முல்லைத்தீவு கேப்பாப்பிலவு கிராம மக்கள் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர் 2017.03.01 அன்று ஆரம்பித்த மக்களது நில மீட்புப் போராட்டத்தில் கடந்த ஒருவருடங்களுக்கு முன்பு ஒருதொகுதி காணிகள் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் மிகுதி காணிகள் விடுவிக்கப்படாமல் அதில் இராணுவத்தினர் தமது படை முகாம்களை அமைத்து நிலைகொண்டுள்ளனர்.

இந்தக் காணிகளை முழுமையாக விடுவிக்கக் கோரி மக்கள் தொடர்ந்தும் போராடி வருகின்றனர்.

இந்நிலையில் மக்களின் போராட்டத்தைத் தொடர்ந்து முகாம் வாயில்களில் முள்ளுக்கம்பிகளை கொண்டு பல்வேறு தடுப்புக்களை போட்டு முகாமை பலத்த பாதுகாப்புக்குள் கொண்டுவந்துள்ளனர். (2-281)

# 14 கிலோ கேரள கஞ்சாப்பொதிகளுடன் தலைமன்னாரில் குடும்பஸ்தர் கைதானார்

(மன்னார்)

**தலைமன்னார் புகையிரத வீதி பகுதியில் வைத்து 14 இலட்சம் ரூபாய் பெறுமதியான 14 கிலோ 690 கிராம் கேரள கஞ்சாப்பொதிகளுடன் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.**



தலைமன்னார் புகையிரத வீதி பகுதியில் வைத்து ஒரு தொகுதி கேரள கஞ்சாப் பொதிகளுடன் அப்பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம்வியாழக்கிழமை இரவு 8 மணியளவில் மன்னார் மாவட்ட பொலிஸ் ஊழல் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து சுமார் 14 இலட்சம் ரூபாய் பெறுமதியான 14 கிலோ 690 கிராம் எடை கொண்ட கேரள கஞ்சாப்பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சியந்த பீரிசின் வழிகாட்டலில் மன்னார் மாவட்ட பொலிஸ் ஊழல் ஒழிப்பு பிரிவு அதிகாரிகள் குறித்த சந்தேக நபரை கைது செய்ததோடு.அவரிடம் இருந்து குறித்த கஞ்சாப் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பிரஸ்தாப குடும்பஸ்தர் விசாரணைகளின் பின்னர் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, கைப்பற்றப்பட்ட கஞ்சாப் பொதிகளும் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தலைமன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-285)

## பொலிஸ் குற்ற பரிசோதனை ஆய்வுகூடம் உயிலங்குளத்தில் திறந்து வைக்கப்பட்டது





மன்னார் மாவட்டத்திற்கான பொலிஸ் குற்ற பரிசோதனை ஆய்வு கூடம் நேற்று முன்தினம் மன்னார் உயிலங்குளம் பொலிஸ் காவல் அரணில் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த பொலிஸ் குற்ற பரிசோதனை ஆய்வு கூடத்தை வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் றொசான் பெர்னாண்டோ வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.

43 ஆவது பொலிஸ் குற்ற பரிசோதனை ஆய்வு கூடம் நேற்று முன்தினம் இவ்வாறு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இடம் பெறுகின்ற குற்றச் செயல்களின் ஆய்வுகள் தொடர்ச்சியாக வவுனியாவில் உள்ள பொலிஸ் குற்ற பரிசோதனை ஆய்வு கூடத்தில் இடம்பெற்று வந்த நிலையில் மன்னார் மாவட்டத்திலுள்ள 9 பொலிஸ் நிலைய பிரிவுகளிலும் இடம்பெறும் குற்றச் செயல்களின் பரிசோதனைகளை உடனடியாக மேற்கொள்ள மன்னார் உயிலங்குளத்தில் குறித்த பொலிஸ் குற்ற பரிசோதனை ஆய்வு கூடம் சுவீடன் நாட்டின் நிதியுதவியுடன் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர முயற்சியினால் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(2-285)




# விடுவிக்கப்பட்ட காணியின் எல்லையிலிருந்து 10 அடிக்கு அப்பால் வீதிக்கு வராது போராடுங்கள்

## முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவு



(பனிக்கன்குளம்)

கேப்பாபுலவு மக்களது ஜனநாயக போராட்டத்தை இராணுவமும் பொலிஸாரும் அடக்க பல்வேறு முய ற்சிகளை மேற்கொண்டும் கேப்பாபிலவு மக்களின் ஜனநாயக போராட்டத்துக்கு நீதிமன்று நேற்று முன்தினம் மீண்டும்நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கியுள்ளது.

கேப்பாபிலவு மக்கள் கடந்த 26 ஆம் திகதி தங்கள் வாழ்விடங்களை விடுக்கக்கோரிகவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை மேற்கொண்டுள்ளார்கள்.

இந்நிலையில் படையினரின் முகாம் வாசலில் இருந்து மக்களை அப்புறப்படுத்துவதற்காக பொலிஸார் பல்வேறு பிரயத்தன முயற்சியை மேற்கொண்டு வந்த நிலையில் போராட்ட மக்கள் தங்கள் போராட்டங்களை கைவிடாத நிலையில் பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்ட மூவர்மீது குற்றம் சுமத்தி நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளார்கள்.

கேப்பாபிலவு மாதிரி கிராமத்தினை சேர்ந்த வி. இந்திராணி, மனித உரிமை செயற்பாட்டாளர் க.சந்திரலீலா, நீர்கொழும்பினை சேர்ந்த யோ.விறிட்டா பெணாண்டு ஆகியோர் மீது முள்ளியவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் வழக்கு தொடரப்பட்டு வழக்கின் விசாரணை கடந்த 28 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது இதன்போது பொலிஸார் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்கள்.

பொலிஸாரின் இந்த குற்றச்சாட்டுக்களுக்கு நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை. விடுபட்ட எங்கள் காணிகளில் இருந்துதான் நாங்கள் போராட்டம் செய்வோம் என்று மன்றிற்கு தெரிவித்துள்ளோம்.இதற்கமைய எங்கள் போராட்டம் தொடர்பில் நீதிமன்றம் இரண்டுநாட்கள் கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணிகள், பொலிஸார், அரசதரப்பினர், மக்கள் இணைந்து போராட்ட இடத்திற்கு நேரடியாக சென்று பார்வையிட்டு நல்ல முடிவினைஎடுக்கவேண்டும்என்று நீதிபதி தெரிவித்துள்ளார்.

தற்சமயம் போராட்டம் நடத்தப்படும் படைமுகாம் வாயிலில் இருந்து 75 மீற்றருக்கு அப்பால் இரண்டு நாட்களும் போராட்டம் செய்யலாம் என்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் மீண்டும் நீதிமன்றம் சென்று சட்டத்தரணிகள் சகிதம் வருகை தந்த மக்கள் இராணுவம் மற்றும் பொலிஸார் இராணுவ முகாமுக்கு முன்பாக போராட்டம் செய்ய விடாது நிலைமை ஏற்பட்டதால் பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு இருந்தனர்.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் குறித்த ஊசிகள் தேவையான அளவு கையிருப்பில் உள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

முடியாது என தெரிவித்த போது மக்கள் பாவனைக்கு விடப்பட்ட காணியில் போராட முடியாது என கோர குழப்ப நிலையில் பொலிஸார் இராணுவத்தினது கருத் தையே கூற தீர்வுக்கு வராது மீண்டும் நீதிமன்றுக்கு சென்றனர் அங்கு மன்று மக்க ளுக்கு சில நிபந்தனைகளுடன் இராணுவ முகாமுக்கு முன்பாக ஜனநாயக ரீதியில் போராட அனுமதித்திருக்கிறது. குறிப்பாக இராணுவ வாயிலுக்கு நேராக இல்லாது வாயிலில் இருந்து 10 மீற்றருக்கு அப்பால் விடுவிக்கப்பட்ட காணியின் எல்லையில் இருந்து 10 அடிக்கு அப்பால் வீதிக்கு வராது வீதியில் வாகனங்களை நிறுத்த விடாது பொது மக்களுக்கோ இராணுவத் துக்கோ இடையூறின்றி போராடுமாறு கூறப்பட்டுள்ளது. (2-281)

## விசர் நாய்க்கடி ஊசிகள் போதுமானளவு கையிருப்பில்

### கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் விசர்நாய்க்கடி ஊசிகள் போதுமான அளவு கையிருப்பில் உள்ளன என கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் த.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

விசர்நாய்க்கடி ஊசிகளுக்கு இலங்கை முழுவதும் கடந்த வாரம் வரை தட்டுப்பாடு நிலைமை ஏற்பட்டதால் பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு இருந்தனர்.

## போதை தடுப்பு பொலிஸாரால் மூவர் கைது!

வவுனியாவில்நேற்று முன்தினம் இரவு பல்வேறு சம்பவங்களுடன் தொடர்புடைய மூன்று பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலைய போதை தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அதனடிப்படையில் வெளிநாட்டு சிகரெட்டுக்களை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரும் குடு கஞ்சா. போதைப் பொருட்களை மில்லிகிராம் அளவில்வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவருமாக மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் மேலும்தெரிவித்தனர்(2-250)

### தொண்டராசிரியர்களுக்கான வழிப்படுத்தல் கூட்டம்

(கிளிநொச்சி)

தொண்டர் ஆசிரியர்களின் நியமனத்துக்கான இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் நேர்முகத் தேர்வுக்கு தேவையான ஆவணங்களை தயார் படுத்தும் முகமாக வழிப்படுத்தல் கூட்டம் நாளை மறுதினம் 4 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறுவடக்குமாகாண தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் யோ.அருட்செல்வம் அறிவித்துள்ளார்.(2-9)

# பாரதம்

# ராஜீவ் கொலை விவகாரம்; வாகனப் பேரணி நடத்த பரிசீலனை



முருகன் சாந்தன் பேரறிவாளன்

நளினி ரவிச்சந்திரன் ராபர்ட் பயஸ் ஜெயகுமார்

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதான ஏழு பேரின் விடுதலையை வலியுறுத்தி இருசக்கர வாகனப்பேரணி நடத்த அனுமதி கோரும்மனுவை 3 வாரங்களுக்குள் பரிசீலித்து உரிய உத்தரவிடுமாறு டிஜிபிக்கு சென்னை உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தர விட்டுள்ளது.

ராமநாதபுரத்தை சேர்ந்த திருமுருகன் சென்னை உயர் நீதிமன்றத்தில்மனுவொன்றை தாக்கல் செய்தார். இந்த மனு நீதிபதி ஜெகதீஷ்சந்திரா முன்பு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, நீதிபதி மனுதாரர் தனது கோரிக்கை தொடர்பாக டிஜிபியிடம் புதிதாக மனு அளிக்க வேண்டுமென்றும், அந்த மனுவை டிஜிபி மூன்று வாரங்களுக்குள் பரிசீலித்து உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது,

"முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பேரறிவாளன், முருகன், சாந்தன், நளினி, ரவிச்சந்திரன், ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் ஆகிய 7 பேரும் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரை இருசக்கர வாகனங்களில் இம்மாதம் 20ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை பேரணியாக செல்வதற்கு அனுமதி வழங்குமாறு கோரியுள்ளோம்.

ஆனால், இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை. 7 பேரையும்விடுதலை செய்வது என தமிழக அரசு தீர்மானம் நிறைவேற்றிய நிலையில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமலுள்ளது.

7 பேரையும் விடுதலை செய்ய வலியுறுத்தி பேரணி செல்ல அனுமதி வழங்குமாறு பொலிஸ் அதிகாரிக்கு உத்தரவிட வேண்டும்" என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# இந்தோனேசியாவில் டெ…

# ஜனவரி மாதத்தில்…

(ஜகார்த்தா)

**இந்தோனேசியாவில் கடந்த ஜனவரி மாதத்தில் மட்டும் டெங்கு காய்ச்சலுக்கு பலியானோர் எண்ணிக்கை 135 ஆக அதிகரித்துள்ளது என நோய் தடுப்பு துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.**

இந்தோனேசியா நாட்டில் தற்போது டெங்குக் காய்ச்சலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இதனால் டெங்கு காய்ச்சலுக்கு பலியானோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இதுகுறித்து, இந்தோனேசியாவின் நோய் தடுப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜனவரி மாதத்தில் மட்டும் டெங்கு காய்ச்சலுக்கு பலியானோர் எண்ணிக்கை 135 அக

# சூடானில் அரச எதி…

# உயிரிழப்பு 50 ஆ…

(கார்டூம்)

சூடானில் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டம் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளது.

பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் ஜனாதிபதி ஒமர் அல் பஷீரின் மூன்று தசாப்தகால ஆட்சிக்கு எதிராக கடந்த டிசெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தின் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



அரசாங்கத்திற்கு எதிராக பல்வேறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் கண்ணீர் புகை தாக்குதல் நடத்தி கலைத்துள்ளனர்.

நாட்டில் பொருட்களின் விலை அதிகரிப்பதாகவும், அத்தியாவசிய பொருட்

# பனிப்பொழிவு மீது மோதி ஜப்பான் விமானம் விபத்து

## அதிர்ஷ்டவசமாக தப்பிய 201 பயணிகள்

(டில்லி)

டில்லியிலிருந்து புறப்பட்ட ஜப்பான் எயார்லைன்ஸ் விமானம் ஒன்று டோக்கியோவில் விமான நிலையத்தில் தரையிறங்கியபோது ஓடுபாதையிலிருந்த பனிப்பொழிவுகளை தகர்த்துச்சென்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

மேலும் விமான நிலையத்தின் பிரதான மையத்தின் ஒரு பகுதி மூடப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து விமான நிலைய செய்தித் தொடர்பாளர் கசுஹியோ மரியோ ஏஎப்பியிடம் தெரிவித்த விபரம்:

டில்லியிலிருந்து வந்த போயிங் 787 ஜெட் விமானம் டோக்கியோ நாரிட்டா விமான நிலையத்தில், நேற்றுக் காலை ஓடுபாதையிலிருந்த பனிப்பொழிவுகளை தகர்த்துச்சென்று விபத்துக்குள்ளானது.

எனினும் அதிர்ஷ்டவசமாக அதில் வந்த 201 பயணிகளும் மற்றும் விமானப் பணியாளர்கள் அனைவரும் உயிர் தப்பினர். யாருக்கும் பலத்த காயம் எதுவும் ஏற்படவில்லை.

இவ்விபத்து விமான நிலையத்தின் இரண்டு ஓடுபாதைகளில் ஒன்றை மூடும் நிலைக்கு தள்ளியது. விமானம் பாதுகாப்பு பிராந்தியத்தைக் கடந்து ஓடியதாலேயே விமான ஓடுபாதை மூடவேண்டியே நிலை ஏற்பட்டது.

விபத்துக்கு காரணம் உடனடியாக தெரியவில்லை. ஆனால் என்எச்கே பொது வானொலி தெரிவிக்கையில், விமானத்தின் டயர்கள் ஓடுபாதையோடு ஒட்டியிருந்த அரிதான பனிப்பொழிவுகள் மீது சற்றே இடறியதே இவ் விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. இவ்வாறு விமான நிலைய செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

நாரிட்டாவைச் சுற்றியுள்ள பகுதி உள்ளிட்ட கிழக்கு ஜப்பான் பகுதியில் உள்ள காண்டோ பிராந்தியத்தில் பனிப்பொழிவு குறைந்துள்ளதாக ஜப்பான் வானிலை ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இவ் விபத்து குறித்த காணொளியில் விமானம் விபத்துக்குள்ளானபோதும் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்பதை காணமுடிந்தது. (4-7)

# சவுதியில் கன…

# 12 பேர் உயி…

## 200 இற்கு மேற்பட்டவர்கள்…



(றியாத்)

சவுதி அரேபியாவில்பெய்த கடுமையான மழைக்கு 12 பேர் பலியாகியுள்ளனர்.

இதுகுறித்து சவுதி மன்னரின் பாதுகாப்புத் துறை அமைச்சகம் தரப்பில், "சவுதியில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வந்ததன் காரணமாக சவுதி அரேபியாவின் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகள் கடுமையாக பாதிப்படைந்துள்ளன.

# மலேசியாவின் மன்னராக அப்துல்லா பதவியேற்பு

(கோலாலம்பூர்)

மலேசியாவின் 16ஆவது மன்னராக தேர்ந்தெடுக்கப்பட்ட சுல்தான் அப்துல்லா சுல்தான் அஹமது ஷா நேற்று முன்தினம் பதவியேற்றார்.



மலேசிய மன்னராக கடந்த 2016ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பதவியேற்ற மன்னர் ஐந்தாம் சுல்தான் முஹம்மது, தனது பதவிக்காலம் முடிவதற்கு முன்பாகவே கடந்த 6ஆம் திகதி பதவி விலகினார்.

ரஷ்ய அழகியை அவர் திருமணம் செய்துகொண்டதால்தான் இராஜினாமா செய்ததாகத் தகவல்கள் வெளியாகின. ஆனால் அதுகுறித்து அரண்மனை கருத்து தெரிவிக்கவில்லை.

இஸ்லாமிய மன்னர்களின் ஆளுகையின் கீழ் உள்ள மலேசியாவில், 9 மாநிலங்களில் அரச பரம்பரையினர் ஆட்சி செய்கின்றனர். இந்த மாநிலங்களில் உள்ள மன்னர் குடும்பத்தில் உள்ளவர்கள், சுழற்சி முறையில் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்வு செய்யப்பட்டு மன்னராக முடிசூட்டப்படுகின்றனர்.

அவ்வகையில், மன்னர் ஐந்தாம் சுல்தான் முஹம்மது பதவி விலகியதைத் தொடர்ந்து, பஹாங் மாநிலத்தின் தலைவரான சுல்தான் அப்துல்லா சுல்தான் அஹமதுஷா (வயது 59), கடந்த 24ஆம் திகதி புதிய மன்னராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் நாட்டின் 16 ஆவது மன்னர் ஆவார். (4-7)

# வெளிநாடு

## ...ல் டெங்குக் காய்ச்சல் ...தில் 135 பேர் பலி !



அதிகரித்துள்ளது. டெங்கு காய்ச்சல் தொடர்பாக 13 ஆயிரத்து 683 நோயாளிகள் பதிவு செய்யப்பட்டு உள்ளனர்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்த பாதிப்பை விட 3 மடங்கு அதிகமாக உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. (4-7)

## ...எதிர்ப்பு போராட்டம்; ...ஆக அதிகரிப்பு




களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் குறிப்பிட்டு கடந்த டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி முதல் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாட்களிலிருந்து உயிரிழுந்தவர்களின் எண்ணிக்கை 50ஆக அதிகரித்துள்ளதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1989ஆம் ஆண்டு சூடானின் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற ஓமர் அல் பஷீர் 29 ஆண்டு காலமாக பதவியிலுள்ளார். குறித்த போராட்டங்களை கடுமையாக விமர்சிக்கும் ஜனாதிபதி, பொதுச் சொத்துக்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் சேதப்படுத்தி, எரித்து, வன்முறையிலீடுபடுவதாகவும் அவ்வாறானவர்கள் துரோகிகள் எனவும் குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## ...னமழை ...பிரிழுப்பு ...கள் வெளியேற்றம்



இதில் 12 பேர் பலியாகியுள்ளனர். இதில் 10 பேர் தபுக் நகரைச் சேர்ந்தவர்கள்.

கனமழையில் சிக்கிய 200க் கும் மேற்பட்ட மக்கள் வெளியேறி முகாம்களில் தங்கியுள்ளனர்" என்று தெரிவிக்கப்பட்டது.

தபுக் நகரில் பல இடங்களில் ஓடும் வெள்ளத்தில் மக்கள் சிக்கிக் கொண்டுள்ளதாகவும், அவர்களை பல மணிநேரப் போராட்டங்களுக்குப் பின்னர் மீட்புப் படையினர் மீட்டனர் என்று சவுதி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வெப்பச் சலனம் காரணமாக பல நாடுகளில் ஓராண்டு பெய்ய வேண்டிய மழை ஒருசில நாட்களுக்குள் பெய்து பெரும் வெள்ளத்தை ஏற்படுத்திவிடுகிறது. இம்மாதிரியான வானிலைத் தன்மை, பாலைவன நாடுகளாக அடையாளப்படுத்தப்படும் மத்திய கிழக்கு நாடுகளில் அண்மைக் காலமாக தொடர்ந்து வருகிறது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் கட்டாரில் ஓராண்டு பெய்ய வேண்டிய மழையின் அளவு கடந்த சனிக்கிழமையன்று, ஒரேநாளில் கொட்டித் தீர்த்தது. இதனால், தலைநகர் டோஹா உள்ளிட்ட பல்வேறு நகரங்களை வெள்ளம் சூழ்ந்தது குறிப்பிடத்தக்கது. (4-7)

## கிறிஸ்தவ-இஸ்லாமிய மத வரலாற்றின் புதிய பக்கத்தை எழுதுவதில் மகிழ்ச்சி

### போப் பிரான்சிஸ் நெகிழ்ச்சி

(வத்திக்கான்)

கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் என இரண்டு மதங்களுக்கு இடையிலான தொடர்பு குறித்த வரலாற்றின் புதிய பக்கத்தை எழுதுவது மகிழ்ச்சி அளிப்பதாக போப் ஆண்டவர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று போப் பிரான்சிஸ் ஐக்கிய அரபு அமீரகம் சென்றார். இதுதொடர்பாக அந்நாட்டு மக்களுக்கு அவர் வெளியிட்டுள்ள செய்தியில், "நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். மதங்களுக்கிடையிலான உறவின் வரலாற்றில், ஒரு பதிய பக்கத்தில் உங்களின் நேசமிக்க தேசத்தில் எழுதுகிறேன். நாம் வேறுவேறாக இருந்தாலும் சகோதரர்கள்தான்.



நாளை 3 முதல் 5ஆம் திகதி வரை நடைபெறும் மத நல்லிணக்கக் கூட்டத்தில் கலந்துகொள்ள அழைப்பு விடுத்த அபுதாபி இளவரசர் ஷேக் முகமது பின் சயத் அல்-நயானுக்கு நன்றி. இங்கு வந்ததன் மூலம் நண்பரும் சகோதரருமான எகிப்து சன்னி முஸ்லிம்களின் தலைவரான சேக் அகமது அல்-தயேப்பை மீண்டும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

வருங்காலத்தை நோக்கி நிகழ்காலத்தில் வாழும் மக்களைச் சந்திக்க ஆர்வமாக இருக்கிறேன்" என மேலும் தெரிவித்தார். (4-7)

## அமெரிக்காவில் இந்துக்கோவிலை சேதப்படுத்திய மர்ம நபர்கள்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள பிரசித்தி பெற்ற இந்து கோவிலுக்குள் நுழைந்த மர்ம நபர்கள், சிலைகளை அவமதித்து, பொருட்களை அடித்து நொறுக்கி சேதப்படுத்தியது பரபரப்பை ஏற்படுத்தியது.

அமெரிக்காவின் கென்டக்கி மாநிலம், லூயிஸ்வில்லே நகரில் பிரசித்தி பெற்ற சுவாமி நாராயணன் கோவில் உள்ளது. கடந்த இரு தினங்களுக்கு முன்பு மர்ம நபர்கள் சிலர் இந்த கோவிலுக்குள் நுழைந்து, கோவிலின் சிலைகள் மற்றும் கலைநயம் வாய்ந்த பொருட்களை சேதப்படுத்தியுள்ளனர்.


கோவிலின் உட்புற சிலைகள் மற்றும் சுவர்களின் மீது கறுப்பு நிற சாயம் அடித்து, சில வாசகங்களும் எழுதப்பட்டிருந்தன.

மேலும் அங்கிருந்த நாற்காலி ஒன்றின் மீது கத்திக்குத்தப்பட்டிருந்தது. பின்னர் ஜன்னல், கதவுகள் உடைக்கப்பட்டு, அலுமாரி காலியாக இருந்தது.

இச்சம்பவம் இந்திய-அமெரிக்க மக்களிடையே அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இது மத வெறுப்புணர்வை வெளிப்படுத்தும் விதமாக இருந்ததாக பலரும் குற்றம் சாட்டி உள்ளனர். இதுதொடர்பாக அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கு நகரமுதல்வர் கிரெக் பிஷ்ஷர், கண்டனம் தெரிவித்துள்ளார். சேதமடைந்த கோவிலை பார்வையிட்ட அவர், இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

"இதுபோன்ற கோழைத்தனம் நம் சமூகத்திற்கு தீங்கானது. நம் நாடு இரக்கம் மற்றும் ஒற்றுமையை மட்டுமே வலியுறுத்துகிறது. நாம் ஒரு நகரம், ஒரு நாடு எனும் வகையில், சமத்துவத்துடன் அனைவருக்கும் மரியாதை செலுத்தும் விதமாக வாழ வேண்டும்" என தெரிவித்துள்ளார்.




எந்த மதத்தை சார்ந்திருந்தாலும் இவ்வாறு செய்திருக்கக்கூடாது எனவும், நாம் அமைதியான முறையில் வழிபாட்டிற்காக வந்துள்ளதால் மகிழ்ச்சியாக கடவுளை வழிபட வேண்டும் எனவும் அப்பகுதியைச் சேர்ந்த ராம் படேல் கூறினார்.

இச்சம்பவம் மிகவும் வருந்தக்கூடியது எனவும், அக்கோவிலுக்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்கப்படும் எனவும் லூயிஸ்வில்லே பொலிஸ் அதிகாரி ஸ்டீவ் கான்ராட் தெரிவித்துள்ளார்.

கென்டக்கியில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்திய-அமெரிக்க பிரதிநிதி நிமா குல்கர்னி தெரிவிக்கையில், "இந்த சம்பவம் எங்கள் நம்பிக்கை மற்றும் சமூகத்தை பலவீனப்படுத்துவதற்கான அச்சுறுத்தல்" என்றார். கடந்த காலங்களில் இதுபோன்று பல சம்பவங்கள் நடந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

## தென்கொரியாவில் சட்டவிரோத பிளாஸ்டிக் அறுவைச்சிகிச்சை

### மருத்துவ உதவியாளர் கைது

(சியோல்)

தென்கொரியாவில் 1000க்கும் மேற்பட்டோருக்கு சட்டவிரோதமாக பிளாஸ்டிக் அறுவைச்சிகிச்சை செய்த குற்றச்சாட்டில், மருத்துவ உதவியாளர் கைது செய்யப்பட்டுள்ளார். தென்கொரியாவின் சியோலில் உள்ள ஜூங்ராங் பகுதியில் தனியார் மருத்துவமனை இயங்கி வருகிறது.

இங்கு பணிபுரியும் 70 வயது நிரம்பிய மருத்துவ உதவியாளர் ஒருவர், கடந்த (2015-2018) மூன்று ஆண்டுகளாக, 1000க்கும் மேற்பட்ட நபர்களுக்கு உடல் அழகிற்காக செய்யப்படும் பிளாஸ்டிக் அறுவைச்சிகிச்சையை சட்டத்திற்கு புறம்பாக செய்து வந்துள்ளார். இந்த சட்ட விரோதமான சிகிச்சை மூலம் அவர் இது வரை சுமார் 1 பில்லியன் (9 லட்சம் அமெரிக்க டொலர்) சம்பாதித்ததாக தெரியவந்துள்ளது.

இதுதொடர்பாக பொலிஸில் புகார் அளிக்கப்பட்டது. பொலிஸார் விசாரணை நடத்தி மருத்துவ உதவியாளர் மற்றும் அவருக்கு உடந்தையாக இருந்த வைத்தியசாலை உரிமையாளரான தலைமை பிளாஸ்டிக் அறுவைச்சிகிச்சை நிபுணர் ஆகியோரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மருத்துவ உதவியாளர், வைத்தியசாலைக்கு அருகில் உள்ள அழகு நிலையம் மற்றும் தோல் பராமரிப்பு நிறுவனங்களில் இருந்து வாடிக்கையாளர்களைக் கவர்ந்து, அவர்களுக்கு முகம், உதடு மற்றும் இரட்டை கண்ணிமை போன்ற பல அறுவைச்சிகிச்சைகளை சட்டவிரோதமாக செய்துள்ளார்.

தொடர்ந்து பல அறுவைச் சிகிச்சைகள் செய்ததால், வைத்தியசாலையில் பணிபுரியும் மற்ற ஊழியர்களும் அந்த உதவியாளரை உண்மையான மருத்துவராகவே நினைத்துள்ளனர். இந்த செய்தியை தலைமை பிளாஸ்டிக் அறுவைச்சிகிச்சை நிபுணர் மற்றும் உதவியாளர் இருவரும் ரகசியமாக வைத்துள்ளனர் என்பது பொலிஸார் விசாரணையில் தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்ட பிளாஸ்டிக் அறுவைசிகிச்சை நிபுணரும், உதவியாளரும் தங்களுக்கு எதிரான அனைத்து குற்றச்சாட்டுகளையும் மறுத்துள்ளது குறிப்பிடத் தக்கது. (4-7)

### அழைப்பிதழ் அனுப்பவில்லை

# தேசிய நாள் நிகழ்வை புறக்கணித்தார் பொன்சேகா



(கொழும்பு)

காலி முகத்திடலில் நாளை 4ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கையின், 71 ஆவது தேசிய தின நிகழ்வுகளில் பங்கேற்பதில்லை என்று முன்னாள் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா முடிவு செய்துள்ளார்.

தமக்கு இன்னமும், அழைப்பிதழ் கிடைக்கவில்லை என்று அவர் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

"பீல்ட் மார்ஷல் பதவியில் இருக்கும் ஒருவருக்கு உயர் மதிப்புக் கொடுக்கும் வழக்கம் உலகம் முழுவதும் இருக்கிறது.

அவ்வாறான நிலையில் இந்தப் பதவிக்குரிய கௌரவம் கொடுக்கப்படா விட்டால், அத்தகைய நிகழ்வில் பங்கேற்க மாட்டேன் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் தேசிய நாளை முன்னிட்டு நடைபெறவுள்ள அணிவகுப்புக்கான, ஒத்திகை நேற்று முன்தினம் காலி முகத்திடலில் இடம்பெற்றது.

இதன்போது, முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய விருந்தினர்களின் பட்டியல் அறிவிக்கப்பட்டது.

அதில், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் பெயர் இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# திருகோணமலையில் அமெரிக்கப்படைத்தளம் நாட்டின் இறைமைக்கு பாரிய அச்சுறுத்தல்

## பேராசிரியர் திஸ்ஸ எச்சரிக்கை



(கொழும்பு)

திருகோணமலையில் அமெரிக்க கடற்படைத் தளம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக, லங்கா சமசமாசக் கட்சியின் பொதுச்செயலரான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர்,

"இதுதொடர்பான இருதரப்பு உடன்பாடு, ஏற்கனவே இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் கையெழுத்திடப்பட்டுள்ளது.

இதற்கமைய திருகோணமலையில் அமெரிக்க கடற்படைத் தளம் அமைக்கப்படவுள்ளது.

இதனால், நாட்டின் இறைமைக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# இந்த நாட்டின் மிகப்பெரிய சாபக்கேடு குடும்ப ஆட்சி

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



(மாத்தறை)

இந்த நாட்டின் மிகப்பெரிய சாபக்கேடே குடும்ப ஆட்சி எனத் தெரிவித்த, பாரிய நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க, வடக்கிலும் தெற்கிலும் ஏற்பட்ட அழிவுகள் இனியும் இடம்பெறாத ஆட்சியை உருவாக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மாத்தறை பெளிகம பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது நாட்டில் கடன் நெருக்கடியே மிகப்பெரிய சிக்கலாக உள்ளது. ஜனாதிபதியாகவேண்டும் என சிலர் போராடிக் கொண்டுள்ளனர்.

ஆனால் நாட்டின் கடன்களை அடைக்கும் வழிமுறை ஒன்றை இவர்கள் கையாளவில்லை.

இந்த நாட்டின் அபிவிருத்திக்கு ஒதுக்கும் நிதியில் மூன்று மடங்கு நிதியை நாட்டின் கடனுக்காக ஒதுக்கவேண்டிய நிலைமை உள்ளது.

அதனை அடைக்கவோ பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்பது குறித்து சிந்திக்கவோ இவர்கள் எவருக்கும் நேரமில்லாதுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அதிபர்கள் ஆர்ப்பாட்டத்திற்கு முஸ்தீபு

(கொழும்பு)

பதவி உயர்வு உட்பட பல்வேறு பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு அரச பாடசாலைகளிலுள்ள 4000 அதிபர்கள் இணைந்து எதிர்வரும் 6 ஆம் திகதி முற்பகல் 10மணிக்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

அரச நிர்வாக அமைச்சின் முன்னால் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளதாக அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மருத்துவரின் மன இறுக்கம்!

என்னுடன் படித்தவர் இப்பொழுது வைத்தியராக இருக்கின்றார். அவரைப் பார்த்துவிட்டு வரலாம் என்று ஒரு தரம் போயிருந்தேன். அந்த சமயம் எனக்கும் உடம்பு சரியில்லை.. அதைச் சொல்லி ஏதாவது மாத்திரை வாங்கிக் கொண்டு வரலாமே என்று நினைத்துக் கொண்டு போனேன். போய்ச் சொன்னேன் உடம்பு வலிக்கு ஏதாவது மாத்திரை கொடுத்தால் தேவை இல்லை என்றேன். அவர் உடனே கேட்டார். மூட்டுக்கு மூட்டு வலி கொஞ்சம் அதிகமாக இருக்கா என்றார். ஆமாம் என்றேன்!

காலையில் படுக்கையைவிட்டு எழுந்து கொள்கின்ற சமயம் தலை சுத்துகின்ற மாதிரி இருக்கா? என்றார். ஆமாம் என்றேன்!

சாப்பாட்டைப் பார்த்தாலே அது வேண்டாம் என்று தோன்றுகின்றதா என்றார்.

" நீங்க சொல்வது எல்லாம் மிகவும் சரி. அது எப்படி இவ்வளவு நுணுக்கமாக கண்டுபிடிக்க முடிந்தது? என்று கேட்டேன்.

" வேறு ஒன்றுமில்லை! அதே குணம் எல்லாம் எனக்கும் இப்பொழுது இருந்து கொண்டிருக்கின்றது! அது தான் அவ்வளவு சரியாக சொல்ல முடிந்தது என்று சொல்லிக் கொண்டே எழுந்து போய் நாலு மாத்திரையை எடுத்துக் கொண்டு வந்தார்.

என்னிடம் இரண்டு கொடுத்து விட்டு அவர் இரண்டைச் உண்டுவிட்டு தண்ணீரை குடித்தார்.

வைத்தியர் என்பதனாலே வியாதிகள் விலகிப் போய் விடுவது இல்லை. வைத்தியர்களுக்கு ஏற்படுகின்ற மன இறுக்கம் (Tension to Doctors) பல சமயங்களிலே அவர்களுடைய ஆரோக்கியத்தைப் பாதித்து விடுகின்றது. இதைப் பற்றியெல்லாம் கூட வெளிநாடுகளிலே சில ஆராய்ச்சிகள் நடக்கின்றன.

இங்கிலாந்திலே ஒரு புள்ளி விபரம் எடுத்தார்களாம். அங்கே பொது மக்களைவிட வைத்தியர்களிடம் தான் தற்கொலை விகிதம் அதிகமாக இருக்கின்றதாம்.

மதுவினால் உடல் நலம் குன்றுவதற்கு முக்கியமான காரணமாக இருக்கின்றது மன இறுக்கம் தான்.

விளம்பர நிறுவனங்களிலே வேலை செய்கின்றவர்கள், பத்திரிகைகாரர்கள், பொலிஸ் அதிகாரிகள், விமானிகள்– இவர்களுக்கு அடுத்தபடியாக மன இறுக்கத்திற்கு அதிகமாக ஆளாகிறவர்கள் வைத்தியர்கள் தானாம்! உயிர் பிரிய இருக்கும் நோயாளியை எப்படியாவது பிழைக்க வைத்து விட வேண்டும் என்பதற்காக சாப்பாட்டைக் கூட மறந்து ,இரவு முழுவதும் கண் முழித்துக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டி இருக்கின்றது! டென்சன் வராமல் இருக்குமா? பாதி இரவிலேயே வந்து கதவைத் தட்டுவார்கள்.. எழுந்து கொண்டு என்ன என்று கேட்டா உடனே புறப்படுங்க வைத்தியரே அங்கு ஒருவர் உயிருக்குப் போராடிக் கொண்டு இருக்கின்றார் என்பார்கள்.

டென்சன் வராமே என்ன செய்ய வேண்டும்?

சில பேர் நடு இரவிலேயே வைத்தியர் வீட்டிற்கு தொலைபேசி அழைப்பை எடுத்து "வயிறு வலிக்கின்றது வைத்தியரே ... என்ன செய்யலாம் சொல்லுங்கள் " என்று கேட்பார்கள்.

இவரும் அவசரத்திற்கு இரண்டு அஸ்பிரின் மாத்திரையை போட்டுக் கொண்டு நித்திரை கொள்ளுங்கள்... காலையிலே பார்த்துக் கொள்ளலாம் என்று தொலைபேசியிலே பதில் சொல்லுவார். அவர் உடனே வைத்தியர் சொன்னது போல் இரண்டு மாத்திரையை சாப்பிட்டுவிட்டு நிம்மதியாக தூங்கி போயிடுவார். ஆனால் இங்கே வைத்தியருக்குத் தூக்கம் வராது! ஏன் தெரியுமா?

" அந்த ஆளு வயிறு வலிக்கின்றது என்று சொன்னாரே வயிற்றிலே ஏதாவது கட்டியாக இருக்குமா? இல்லை வேறு ஏதாவது பெரிய கோளாறாக இருக்குமா? அஸ்பிரின் அவருக்கு ஏதாவது ஆபத்தை உண்டாக்கி விடுமோ?"

அப்படி எல்லாம் நினைத்து கவலைப் பட்டுக் கொண்டு இரவு பூராக வைத்தியர் தூங்க மாட்டார். ஜான் ஹோவி (John Howie) என்று ஒருத்தர். இவர் இங்கிலாந்திலே எடின்பரோ பல்கலைக் கழகத்திலே பொது மருத்துவப் பேராசிரியர்.

இவர் நிறைய ஆய்வுகளை எல்லாம் செய்திருக்கின்றார். பொது வைத்தியம் செய்கின்ற வைத்தியர்களுக்கு மன இறுக்கத்தை உண்டாக்குகின்ற சில காரணங்களை அவர் கண்டு பிடித்து இருக்கின்றார். தன்னாலே முடிவதை விட அதிகமான எண்ணிக்கையிலே நோயாளிகளை இழுத்துப் போட்டு விட்டு சிகிச்சை செய்ய முயற்சி செய்வதும் ஒரு காரணம்.

தொந்தரவு செய்கின்ற நோயாளிகளும் ஒரு காரணம். சக பணியாளர்களிடம் எரிச்சல் படுவது இன்னொரு காரணம். தாமதங்கள் –இடையூறுகள் இதனாலே கோபம் அடைவது ஒரு காரணம். இதையெல்லாம் கண்டு பிடித்து சொல்கின்ற அந்த பேராசிரியர் வைத்தியர்களுக்கு என்ன யோசனை சொல்கின்றார் தெரியுமா?

" இடையூறுகள் – தாமதங்கள் இது எல்லாம் இருக்கத்தான் செய்யும் . தவிர்க்க முடியாது. அதனாலே வைத்தியர்களாக இருப்பவர்கள் தம்முடைய பணியிலே எதிர் பார்க்க முடியாத சூழ்நிலை கள் ஏற்படத் தான் செய்யும் என்பதை மனதார ஒப்புக் கொள்ள வேண்டும். அப்படி ஒத்துக் கொண்டு, அதனாலே சம நிலையை இழக்காமல் இருக்க பழகிக் கொள்ள வேண்டும்." என்றார்.

அனுபவம் உள்ள மூத்த பொது வைத்திய இளைஞர்கள் மாதிரி அவ்வளவு அதிகமான நெருக்கடிகளாலே பாதிக்கப்படுவதில்லை. ஜென்னி (Jenny Firth- Cozens ) என்று ஒரு உளவியல் டாக்டர் 170 இளம் வைத்தியர்கள் அவர்கள் பணியிலே படிப்படியாக முன்னேறிக் கொண்டு வருவதை கண்காணித்துக் கொண்டே வந்தார். அவர்களுக்குக் கடுமையான மன இறுக்கம் உண்டாவதற்கு என்ன காரணம் என்று கண்டு பிடித்தார்.

நோயாளி இறப்பது, இறக்கும் நிலையில் இருப்பது ... மூத்த மருத்துவ வைத்தியர்களிடம் சுமுகமான உறவு இல்லாமல் போவது. தவறு செய்வது.. கடினமான வேலை, தூக்கம் இழப்பு... இது எல்லாம் இளம் டாக்டர்களுக்கு கடுமையான மன இறுக்கத்தை உண்டாக்குவதாக அவர் கண்டு பிடித்து இருக்கின்றார். பணியிலே சேர்ந்து மூன்று வருடத்திற்கு அப்புறம் இது படிப்படியாக குறைந்து விடுகிறதாகவும் ஜென்னி என்னும் வைத்தியர் கண்டு பிடித்து சொல்கின்றார். இதுவரைக்கும் சொன்னது எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். எங்களுடைய ஊரில் எல்லாம் வைத்தியர்களுக்கு உளைச்சலை அதிகப்படுத்துகின்றது நோயாளிகள் தான். சில பேர் தனக்கு என்ன வியாதி என்பதை வைத்தியர்களிடம் சொல்ல மாட்டார்கள்... அவர்கள் தான் வைத்தியர்கள் தானே கண்டு பிடிக்கட்டுமே என்று ஒரு நினைப்பு. இப்படிப்பட்ட ஒருவர் ஒரு வைத்தியரிடம் வந்தார்.

" உடம்பு என்ன செய்கின்றது? " என்று வைத்தியர் கேட்டார். "அதை நீங்கதான் கண்டு பிடித்து மருந்து கொடுக்க வேண்டும்" என்றார் இவர். இதை கவனித்துக் கொண்டு பக்கத்திலே இருந்த ஒருத்தர் சொன்னார்: " இதோ பாருப்பா .. உடம்புக்கு என்ன என்பதை வைத்தியர்களிடம் சொல்லி ஒத்துழைத்தால் தான் சிகிச்சை கொடுப்பதற்கு வசதியாக இருக்கும். நோயாளிகளிடம் வைத்தியம் செய்ய வேண்டும் அதுக்கு அடுத்த தெருவிலே ஒரு வைத்தியசாலை இருக்கு; அங்கே போ!" என்றார். அது எந்த வைத்தியசாலை என்று ஆர்வமா கேட்டார் இவர். " மாட்டு வைத்தியசாலை "! என்றார் அவர்.

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

160



“சைவ-தமிழ்மறுமலர்ச்சியாளரும்அறிஞருமான சீ.வை. தாமோதரம்பிள்ளை 1876 இல் வெளியிட்ட சைவமகத்துவம் எனும் நூலுக்கு எதிராகக் கத்தோலிக்க மிஷனரிமார் 1876 க்கும் 1877 க்கும் இடையில்சைவமகத்துவதிமிராபந்துசைவமகத்துவம் என்ற நூலை வெளியிட்டார். அத்துடன் அவர்கள் தென்னிந்தியாவின்தமிழ்நாட்டைச்சேர்ந்தகத்தோலிக்க அறிஞ ரான அருளப்பா முதலியாரை அழைத்து வந்து சைவத்தையும் அதைப் பின்பற்றும் யாழ்ப் பாண மக்களையும் கண்டனஞ் செய்ய வைத்தனர்”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

இப் பத்திரிகை யாழ்ப்பாணத் தீபகற்பம் முழுவதும் பணம் பெற்று விநியோகிக்கப்பட்டது மட்டுமன்றி ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும் கிறிஸ்தவத்தை விரிவாகப் பரப்புவதற்காக அனுப்பி வைக்கப்பட்டது.

கிறிஸ்தவர்கள் சைவத்தை வெறுமனே கண்டனம் செய்வதில் மாத்திரம் திருப்தி அடையாமல், தமிழ் மக்களின் மதத்தை அடிப்படையாகக் கொண்ட கலாசார வாழ்வையும் தகர்க்க வேண்டுமென்ற கட்டாயத்திற்கும் உள்ளானார்கள் என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

ஆயினும் மதரீதியான இந்தத் தாக்குதல்கள் கிறிஸ்தவச் செயற்பாடுகளையும் சைவத்திற்கு எதிரான செயல்களையும் மேலும் தீவிரமாக எதிர்கொள்வதற்கு சைவர்களைத் தூண்டுவதற்கே உதவின.

சைவத் தமிழர் தமது மதத்தைப் பாதுகாக்க, புத்துயிர் அளிக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டமை அவர்களது மத, கலாசார உணர்வு பெருகவே உதவின. கத்தோலிக்கரும் பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் கத்தோலிக்கப் பாதுகாவலன் என்றொரு பத்திரிகையை 1876 இல் வெளியிட்டு சைவத்தைக் கண்டனம் செய்தன.

சைவ- தமிழ் மறுமலர்ச்சியாளரும் அறிஞருமான சி.வை. தாமோதரம்பிள்ளை 1876 இல் வெளியிட்ட சைவமகத்துவம் எனும் நூலுக்கு எதிராகக் கத்தோலிக்க மிஷனரிமார் 1876 க்கும் 1877 க்கும் இடையில் சைவமகத்துவ திமிராபந்து சைவ மகத்துவம் என்ற நூலை வெளியிட்டார்.

அத்துடன் அவர்கள் தென்னிந்தியாவின் தமிழ் நாட்டைச் சேர்ந்த கத்தோலிக்க அறிஞரான அருளப்பா முதலியாரை அழைத்து வந்து சைவத்தையும் அதைப் பின்பற்றும் யாழ்ப்பாண மக்களையும் கண்டனஞ் செய்ய வைத்தனர்.

இதற்கு எதிராக சைவசமய மறுமலர்ச்சியாளர், தமது மதத்தைப் பாதுகாக்க அருளப்பா முதலியாரை பொது விவாதங்களுக்கு அழைத்தனர். இந்தக் காலத்திலிருந்து கத்தோலிக்கப் பாதுகாவலன் சைவத்தைத் தாக்குவதில் இடையறாது ஈடுபட்டது.

இவ்வேளையில் பகைமை பாராட்டிய கத்தோலிக்க மிஷன்கள் புரட்டஸ்தாந்தினருடன் கூட்டுச் சேர ஆரம்பித்தனர். எனவே இப்போது சைவசமய மறுமலர்ச்சியாளருக்கு புரட்டஸ்தாந்தினர் கத்தோலிக்கர் என்ற இரு சாராருக்கும் எதிராக தமது மதத்தைப் பாதுகாக்க வேண்டியிருந்தது.

இந்தச் சூழ்நிலை சைவத்தமிழரை ஒரு இக்கட்டான நிலைக்கு ஆளாக்கியது. அவர்கள் மதச் செயற்பாடுகளுக்குப் புத்துயிரூட்டி அவற்றை அதிகரிப்பதுடன் புறமதச் சக்திகளிடமிருந்து தமது சமயத்தைப் பாதுகாக்கும் தார்மீகக் கடமையையும் உடையவர்களாகின்றனர்.

இருந்தபோதிலும் இந்நிலை சைவத்தமிழுணர்வு விழிப்புற்று அவர்களின் மதம், கலாசாரம் ஆகியவற்றின் விழுமியங்களைப் பாதுகாக்கும் வேட்கையைக் கிளரச் செய்தது.

தமிழ் அடையாளம் என்ற உணர்வு, யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் மாத்திரமன்றி ஏனைய தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள வெகுசனங்களிடையேயும் பரவ வழியமைத்தது.

எண்ணிக்கையில் குறைவாக இருந்த கல்வியறிவு பெற்ற சைவத்தமிழ் உயர் மட்டத்தினரிடையே ஆரம்பத்தில் உருவான சைவ விழிப்புணர்வு, சுயவுணர்வு என்பவை பின்னர் எவ்வாறு விரிவடைந்து வெகுசனங்களிடையே பரவியது என்பதை ஆராய்வோம்.

மோணிங்ஸ்ரார் சிறந்ததொரு பிரசார இயந்திரமாக இயங்கிய பத்தொன்பதாவது நூற்றாண்டின் மத்திய காலத்தை நாம் பார்த்தோமேயானால் இதே நோக்கங்களைக் கொண்டு இயங்கிய வேறுபல வெளியீடுகளையும் நாம் காணலாம். உதாரணமாக புரட்டஸ்தாந்து மிஷனரிமார் பல்வேறு சைவ எதிர்ப்புச் சிறுநூல்களை ஒழுங்கான அடிப்படையில் வெளியிட்டனர்.

அவை கிறிஸ்துவின் இன்பத்துவம், ஓய்வுநாள், சித்தாந்தக் கலக்கு, புராணிக மதம், சன்மார்க்கம் யாரிடத்தில், புதிய ஏற்பாடு, கிறிஸ்துவின் மகிமை என்பனவாகும். இந்தச் சிறு நூல்கள் யாவும் சைவத்தைத் தாக்கிய அதேசமயம் கிறிஸ்தவ நம்பிக்கைகளைப் புகழவும் மேம்படுத்தவும் செய்தன.

சில வருடங்களின் பின்னர் ஆறுமுகநாவலர் தீவிரமாகச் செயற்பட்டபோது சத்திய வேதப் பரீட்சை, சைவ மகத்துவத் திக்கரம், சுப்பிர தீபம் போன்றவை கிறிஸ்தவ சிறுபிரசுரங்களுக்குப் போட்டியாக வெளியிடப்பட்டன. இந்து மதக் கண்டனம், நிகர நிக்கரண நிக்கிரகம், கலாக்கோஷ தோஷம் போன்ற நூல்களை மிஷனரிமாரும் வெளியிட்டனர்.

சைவத்திற்கு எதிரான இவர்களின் எதிர்மறை விமர்சனங்கள், கண்டனங்கள், மறுப்புக்கள் யாவுமே ஒருதலைப் பட்சமானவை என்பதை அறிய முடிகிறது. சைவநெறி, பாரம்பரியம் என்பவற்றின் சிறந்தனவும் சிறப்பற்றனவும் நவீன நியாயப் பார்வையில் கண்டிக்கப்பட்டன.

கிறிஸ்தவர்கள் சைவசமயக் கோட்பாட்டையும் தத்துவத்தையும் எதிர்மறையாக விமர்சிக்கையில், அவற்றின் உள்ளார்ந்த அர்த்தங்களையும் விழுமியங்களையும் பாராட்டத் தவறிவிட்டனர். ஒருவேளை அவர்களுக்கு இவற்றையிட்டு புலமை இல்லாதிருந்திருக்கலாம்.

(தொடரும்)

# தமிழர்கள் சுதந்திர தினத்தை புறக்கணித்து வடக்கு - கிழக்கு, மலையகம் எங்கும் கறுப்புக் கொடியை பயன்படுத்தவும்

## அருட்தந்தை சக்திவேல் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**இலங்கை சுதந்திர தினத்தை ஒட்டுமொத்த தமிழர்களும் புறக்கணிக்க வேண்டும் என்பதுடன் அதற்கு அடையாளமாக வடக்கு-கிழக்கு மற்றும் மலையகம் எங்கும் அன்றையதினம் தமிழ்மக்கள் கறுப்புக்கொடியை பயன்படுத்த வேண்டும் என மலையக சமூக ஆய்வு மையத்தின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.**

இலங்கை சுதந்திர தினம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையின் 71 ஆவது சுதந்திர தினம் என்பது தமிழ் மக்களை பொறுத்தவரையில் கறைபடிந்த நாள்.

அதாவது பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டு 40 ஆவது ஆண்டு இது தமிழ் மக்களும் அவர்களின் அரசியல், மற்றும் வாழ்க்கை என்பன சிறையில் தள்ளப்பட்டு 40 ஆண்டு காலம் ஆகிறது.

இந்தக் காலகட்டத்தில் தான் தமிழ்மக்கள் நாட்டில் இருந்தும் சொந்த நிலத்தில் இருந்தும் துரத்தப்பட்டார்கள். அவர்களின் காணிகள் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டு உள்ளது. ஒட்டுமொத்த தமிழ் மக்களும் பயத்தில் உள்ள காலகட்டம் தான் இது.

அடுத்தது மலையக மக்களின் எதிர்காலம் பறிக்கப்பட்டுள்ளது. முன்னர் 4 இலட்சம் தொழிலாளர்கள் இருந்த நிலையில் தற்போது ஒன்றரை இலட்சம் தொழிலாளர்களாக குறைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கில் தமிழ் மக்கள் எவ்வாறு இன அழிப்பு செய்யப்பட்டார்களோ அதே போன்ற இன அழிப்பு தான் மலையகத்தில் நடைபெறுகிறது. இந்த சுதந்திர தினம் இந்த நாட்டில் உள்ள ஒரு இனத்தின் கொண்டாட்ட நாளாகத்தான் பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு சுதந்திர தினமும் யுத்த வெற்றியை வைத்து தான் கொண்டாடப்படுகிறது. எந்த ஆயுதம் யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டதோ அது தான் காட்சிப்படுத்தப்படுகிறது. தமிழ் மக்களை புண்படுத்தி கொண்டாடப்படும் தினம் தான் இது. முதலாளித்துவ வாதிக்ளில் இனவாத முலாம், மதவாத முலாம் பூசப்பட்ட சுதந்திர தினம் தான் இது.

தமிழ் மக்களுக்கு இது கறைபடிந்த நாளாக தான் இருக்கிறது. முள்ளிவாய்க்கால் அழிவு ஏற்பட்டு 10 ஆவது ஆண்டு நிறைவடைகிறது. அதற்கு ஒரு நீதி கிடைக்கவில்லை.

எனவே இந்த சுதந்திர தினத்தை ஒட்டுமொத்த தமிழர்களும் புறக்கணிக்க வேண்டும். அதற்கு அடையாளமாக வடக்கு-கிழக்கு மற்றும் மலையகம் எங்கும் தமிழ் மக்கள் கறுப்புக்கொடியை பயன்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# மத்திய வங்கி மீது தாக்குதல்

## 23 வருடங்கள் பூர்த்தி



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளால் இலங்கை மத்திய வங்கியின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு நேற்று முன்தினத்துடன் 23 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன.

இலங்கை மத்திய வங்கி மீதான குண்டுத் தாக்குதல் சுமார் 91 பேரின் உயிர்களைக் காவுகொண்டதுடன், ஆயிரத்து 400 பேருக்கு காயம் ஏற்படுத்தியிருந்தது.

1996 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகளால் குறித்த தாக்குதல் நடத்தப்பட்டது.

அன்றைய தினம் முற்பகல் 10.45 மணியளவில் 200 கிலோகிராம் வெடிபொருட்களுடனான பாரவூர்தி இலங்கை மத்திய வங்கியின் கட்டடத்திற்குள் நுழைந்து வெடிக்கச் செய்ய முயற்சிக்கப்பட்டது.

எனினும், கட்டடத்தின் வெளியிலுள்ள இரும்பு வேலிகள் காரணமாக மத்திய வங்கி வளாகத்திலேயே குறித்த பாரவூர்தி வெடித்து சிதறியது. இதனையடுத்து 10 மாடிகளை கொண்ட மத்திய வங்கியின் முன்பகுதி முற்றாக சேதமடைந்தது.

இதன் காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தேசிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உள்ளிட்ட சிலருக்கு எதிராக வழக்குத் தாக்கலும் செய்யப்பட்டது.

தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் விடுதலைப் புலிகளின் தலைவர் உள்ளிட்ட சிலருக்கு 200 வருடங்கள் சிறைத் தண்டனை விதித்து அப்போதைய உயர் நீதிமன்ற நீதிபதி சரத் அபயபிட்டிய தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பொலிஸாருக்கான தங்குமிட விடுதிகள் திறப்பு





**காங்கேசன்துறை மற்றும் அச்சுவேலி பொலிஸ் பிரிவுகளில் பொலிஸாருக்கான தங்குமிட விடுதிகள் நேற்று திறந்துவைக்கப்பட்டுள்ளன. யாழ்.மாவட்டத்தில் தனியார் காணிகளில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்களிலுள்ள பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் தங்குவதற்கான விடுதிகள் பொலிஸ் திணைக்களத்தால் அமைக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட 2 தங்குமிட விடுதிகள் நேற்று திறந்து வைக்கப்பட்டன. இந் நிகழ்வில் வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொசாந் பெர்னாண்டோ மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.**

# குடிவரவு-குடியகல்வு பணிகளை விரைவுபடுத்த நடவடிக்கை

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு-குடியகல்வு பணிகள் தாமதமடைவதைத் தடுப்பதற்காக, பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக, போக்குவரத்து மற்றும் சிவில் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, குடிவரவு-குடியகல்வு மற்றும் சுங்க கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் வழிநடத்த விமான நிலையத்தில் பல்வேறு நிலையங்களை அமைப்பதற்கும், அறிவிப்புப் பலகை, வர்ண சமிக்ஞைகளை தேவையான இடங்களில் பொருத்தவும் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க அறிவுரை வழங்கியுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் மூலம் விமான நிலையத்தில் குடிவரவு-குடியகல்வு திணைக்களத்தின் பணிகள் விரைவுபடுத்தப்பட்டு பயணிகளுக்கு அதிகம் வசதிகளைப் பெற்றுக் கொடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7)

# கர்ப்பிணித் தாய்மாருக்கு மீண்டும் போஷாக்கு நிவாரணம்

## அமைச்சர் சஜித் தெரிவிப்பு



(அம்பாந்தோட்டை)

கர்ப்பிணித் தாய்மாருக்கான போஷாக்கு நிவாரணம் மீண்டும் வழங்கப்படும் என்று அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை, லுணுகம்வெஹர பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அரசியல் பயணம் மக்களுக்குக் கூடுதலான சலுகை அளிப்பதை ஒரே நோக்கமாகக் கொண்டது.

நல்லாட்சி அரசாங்கம் பல வருட காலம் அமுலாக்கிய நிவாரணத் திட்டம் சமீபகாலமாக முடங்கியிருந்தது.

அதனை மீண்டும் அமுலாக்கி கர்ப்பிணித் தாய்மாருக்கு நன்மை வழங்கப் போவதாக அமைச்சர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)







**யா/மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயத்தின் 2019ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் சு.சிவானந்தன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புக்கள் பீட உதவிப் பதிவாளரும் பாடசாலையின் பழைய மாணவருமான சி.பிரணவனும், சாவகச்சேரி நகரசபை உறுப்பினரும் பாடசாலையின் பழைய மாணவருமான க.கஜீதனும் கலந்து சிறப்பித்தனர்.**

**(படங்கள்:-விஜயவாசன்)**

## ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகுமாறு

# நான் அப்படியான அறிவித்தலை வெளியிடவில்லை! கோத்தபாயவின் கூற்றை முற்றாக மறுக்கும் மகிந்த

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகுமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தன்னிடம் கூறியிருப்பதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்த நிலையில், அப்படியான எந்த அறிவித்தலையும் தான் வெளியிடவில்லை என்று மகிந்த ராஜபக்ஷ மறுத்துள்ளார்.



அதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தயாராகிவிட்டார் என்று மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்திருந்த நிலையில், அந்தச் செய்தியும் 'பொய்யானது எனவும் மகிந்த தெரியப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் பொய்யுரைத்து வருகின்றார்கள் எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோ, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவோ தனித்து நின்று முடிவெடுக்க முடியாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் ஒரே கூட்டணியைச் சேர்ந்தவை.

அதேவேளை, இந்தக் கூட்டணியின் பங்காளிக் கட்சியாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இல்லாவிடினும் அதில் உள்ளவர்கள் வேறு ஆட்கள் அல்லர்.

இந்தக் கூட்டணியைச் சேர்ந்தவர்களே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உள்ளார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர பெரமுன, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய மூன்று கட்சிகளையும் ஒருங்கிணைத்து தான் ஜனாதிபதி வேட்பாளரைத் தீர்மானிப்போம்.

இது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நாம் பேச்சு நடத்துவோம்.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் அவசரப்பட்டு முடிவு எதையும் எடுக்கமாட்டோம். வெற்றியை இலக்காகக் கொண்டு ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு செய்யப்படுவார் என மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஜனாதிபதி இறந்துவிடுவார் எனக்கூறிய ஜோதிடர் விஜித ரோஹண விடுதலை!



(கொழும்பு)

இணையத்தளம் ஊடாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இறந்து விடுவாரென திகதி குறிப்பிட்டு ஆருடம் கூறியதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்த, ஜோதிடர் விஜித ரோஹண விஜயமுனியைக் குறித்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜெயரத்னவால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கவனத்தில் எடுத்தே குறித்த ஜோதிடருக்கு எதிராக மேலதிக சட்டநடவடிக்கைகள் எடுக்காமல் அவரை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜோதிடர்விஜித ரோஹண விஜயமுனி 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதி இறந்து விடுவாரென இணையத்தளம் ஊடாக பிரசாரங்களை மேற்கொண்டாரென, இவருக்கு எதிராக பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தமிழ் பொலிஸ் உத்தியோகத்தருக்கு அஞ்சலி






(யாழ்ப்பாணம்)

போர்க்காலத்தில் சிறந்த சேவைகளை ஆற்றி, பலரது உயிர்களைக் காப்பாற்றிய, ஓய்வு பெற்ற தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் மறைந்த பாலசிங்கம் கிருஷ்ணபிள்ளைக்கு நேற்று வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உயர் அதிகாரிகள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

பருத்தித்துறையைச் சேர்ந்த இவர் 1937 ஆம் ஆண்டு பிறந்தவர். தனது 25 ஆவது வயதில் 1962 ஆம் ஆண்டு பொலிஸ் சேவையில் கான்ஸ்டபிளாக இணைந்து கொண்டுள்ளார். பின்னர் பொலிஸ் சேவையில் சார்ஜன்ட் தரத்திற்கு உயர்ந்தவர் 1989 ஆம் ஆண்டு தனது 52 ஆவது வயதில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார். இவர் தனது 82 ஆவது வயதில் நேற்று இயற்கை எய்தியுள்ளார்.

அவரின் இறுதிக் கிரியைகள் நாளை 3 ஆம் திகதி பூரண பொலிஸ் மரியாதையுடன் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவர்சாவகச்சேரி பொலிஸ் நிலையம் மீது றெலோ அமைப்பு கடந்த 1984 ஆம் ஆண்டு தாக்குதல் மேற்கொண்ட வேளை அங்கிருந்த 20 சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர்களை காயங்கள் இன்றி காப்பாற்றி காட்டுப் பாதைகள் ஊடாக அழைத்து சென்று, பின்னர் வான் ஒன்றில் ஏற்றி சென்று ஆனையிறவு இராணுவ முகாமில் பாதுகாப்பாக ஒப்படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

## முதலமைச்சர் வேட்பாளராக பசில்



(கொழும்பு)


ஒரே நாளில் 9 மாகாணசபைகளின் தேர்தல்களை நடத்துவதற்காக மேல், தென் மற்றும் ஊவா மாகாணசபைகளை கலைத்து விடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஏற்கனவே ஏனைய மாகாணசபைகளின் ஆயுட்காலம் முடிவடைந்துள்ள நிலையில் இந்த மூன்று சபைகளும் இன்னும் சில மாதங்களில் தமது ஆயுட்காலத்தை நிறைவு செய்யவுள்ளன.

இந் நிலையில் குறித்த மூன்று சபைகளின் முதலமைச்சர்கள் தமது சபைகளை கலைப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக தேவப்பிரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை மேல்மாகாண முதலமைச்சர் பதவிக்காக பொதுஜன பெரமுனயிலிருந்து பசில் ராஜபக்ஷ போட்டியிடவுள்ளதாக வெளியான தகவல் தொடர்பில் எவ்வித உறுதியான தகவல்களும் வெளியாகவில்லை என்றும் இசுறு தேவப்பிரிய தெரிவித்தார். (இ-7)



யாழ்.யூனியன் கல்லூரியின் இல்லமெய்வல்லுநர் போட்டி கடந்த சனிக்கிழமை கல்லூரியின் முதல்வர் தி.வரதன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.வடக்கு பிரதேசசெயலாளர் சி.சிவசிறி, சிறப்பு விருந்தினர்களாக உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபரும் கல்லூரியின் பழைய மாணவருமான பி.உமாகரன், வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி பாட ஆசிரிய ஆலோசகர் ஐ.சசிக்குமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் ஆய்வுமையம் வழங்கும் ஆய்வுரைகள்

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் ஆய்வுமையம் வழங்கும் ஆய்வுரைகள் எதிர்வரும் 5 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

தமிழ்ப் பற்றையும் தமிழ் இலக்கியங்கள் வழங்குகின்ற மானிடப் பெறுமானங்களை ஆழமாக தமிழ் மாணவர்கள் மத்தியில் பதிக்கும் நோக்குடன் வருடாவருடம் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் ஆய்வு மையம் பாடசாலைகள் மத்தியில் சிறந்த தமிழ் பற்றாளர்களைக் கொண்டு உரைகள் வழங்கி வருகின்றன.

இவ்வருடம் உலகெங்கும் பரவியிருக்கும் தமிழ் மக்களுக்காக நடத்தப்படும் தொலைக்காட்சியில் "குறள் வழி இறைமொழி" என்னும் நிகழ்ச்சியை நடத்தும் தமிழ் நாட்டைச் சேர்ந்த அருட்பணி வினி இளங்குமரன் சொற்பொழிவு ஆற்றுவார்.

"வள்ளுவர் வகுத்த தமிழ் அறம்" என்ற மையப்பொருளில் அருட்பணி வெனி இளங்குமரன் மாணவர்களுக்கு உரையாற்றுவார்.

குறித்த பேருரைகள் எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியிலும், 6 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும், 12 மணிக்கு யாழ்.புனித பரியோவான் கல்லூரியிலும், 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8மணிக்கு இளவாலைபுனித ஹென்றியரசர் கல்லூரியிலும், 12 மணிக்கு யாழ்.புனித பரியோவான் பல்கலைக்கழகத்திலும், 9 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியிலும், 11ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, 11 மணிக்கு மன்னார் புனித சவேரியார் மகளிர் கல்லூரியிலும், 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. (இ-9)

## கிழக்கில் ஐந்து துறைகளுக்கான தலைவர்கள் ஆளுநரால் நியமனம்



(ஏறாவூர்)

கிழக்கு மாகாணத்தின் ஐந்து துறைகளுக்கான தலைவர்களும் பணிப்பாளர்சபை உறுப்பினர்களும் ஆளுநர் ஹிஸ்புல்லாவால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ்.எம்.பி.அசங்க அபயவர்த்தன தலைமையில் நேற்று முன்தினம் மாலை திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்திலேயே இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

மாகாண பொதுச்சேவைகள்ஆணைக்குழுவின்தலைவராக பேராசிரியர் தங்கமுத்து ஜெயசிங்கம், கிழக்கு மாகாண போக்குவரத்து அதிகார சபையின் தலைவராக ஜீ.கரீதரன், கிழக்கு மாகாண முன்பள்ளிப் பணியகத்தின் தலைவராக எம்.எஸ்.உதுமான் லெவ்வை, கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தலைவராக எம்.எஸ்.சுபைர், கிழக்கு மாகாண உல்லாச பயணத்துறையின் தலைவராக இந்திக நளீன் ஜெயவிக்ரம ஆகியோரும் இத்துறைக்கான பணிப்பாளர் சபை உறுப்பினர்களும் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர்.(இ-7)

## காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களை சந்தித்த இனத்துவ கற்கைநெறி மாணவர்கள்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர் போராட்டம் நடத்திவரும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்ட இடத்திற்கு கேப்பாபிலவு நிலமீட்புப்போராட்ட மக்களையும் இலங்கையில் இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தின் மாணவர்கள் ஒன்பது பேர் சென்று கலந்துரையாடியுள்ளார்கள்.

முல்லைத்தீவில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டம் நேற்று 695 ஆவது நாளாக தொடர்ந்து வருகின்றது.

இந்நிலையில் இலங்கையில் இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தின் வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் நேற்றுக் காலை சென்று தங்கள் ஆய்வுகளையும் காணாமலாக்கப்பட்டவர்களின் தற்போதைய நிலைப்பாடுகள் தொடர்பிலும் ஆராய்ந்துள்ளார்கள். (2-281)

## சிறுமியைத் தேடும் பொலிஸார்



(புத்தளம்)

புத்தளம் - சாலியவெவ, நீலகம பிரதேசத்திலிருந்து காணாமற்போன நான்கரை வயதுச் சிறுமியைத் தேடி, தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 30 ஆம் திகதியன்று காணாமற்போன குறித்த சிறுமி, அன்றைய தினம் காலை 7 மணிக்கு வீட்டில் இருந்துள்ள போதிலும், அதன் பின்னர் அவர் காணாமற் போயுள்ளதாக, அவருடைய உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிறுமியின் வீட்டிலிருந்து சுமார் 300 மீற்றர் தொலைவிலேயே கலா ஓயாவும் அதனை அண்டியே, வில்பத்து தேசிய சரணாலயமும் அமைந்துள்ளது.

இந்நிலையில், சிறுமி காணாமற்போன நாள்முதல், பொலிஸாரால் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அதே வேளை, இதற்காக, பொலிஸ் மோப்ப நாய்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1632

### இந்துஜா

ஆடு மேய்த்துக் கொண்டிருந்தவரிடம் இருக்கும் நிம்மதி நாயை வோக்கிங் கூட்டிச் செல்பவர்களுக்கு இருப்பதில்லை



### அன்பழகி

யானை ஒரு பள்ளத்தில விழுந்திடுச்சு. அப்போ மழை பெய்யுது. யானை எப்படி வெளியே வரும்? நனைஞ்சு வரும்



### பார்த்தீபன்

நோயாளி: மயக்கமா இருக்கு டாக்டர்
டாக்டர்: சுகர் இருக்கா..?
நோயாளி: இருக்கு டாக்டர்...
டாக்டர்: எப்ப பார்த்தீங்க?
நோயாளி: இன்னைக்கு காலைல
டாக்டர்: எவ்வளவு இருந்திச்சு
நோயாளி: அரை டப்பா




### கவிப்பிரியா

சிலர் பார்க்க ரிப்ரொப்பா இருப்பார்கள்... பேச ஆரம்பித்துவிட்டால் அவர் தலையில மூளை இருக்கா இல்லை குப்பை இருக்கான்னு ஈசியா தெரிஞ்சிடும்



### சாவித்திரி

இப்போ எல்லாம் நல்லவன் கெட்டவன் குணத்தை வைத்து முடிவு பண்ணுவதில்லை... நமக்குத் தேவையானவன் நல்லவன், நமக்கு தேவையில்லாதவன் கெட்டவன்



### கலையரசி

சிரிப்பு என்கிற உடையை உடுத்திக்கொள் உன்னைப் போல அழகாக யாரும் இருக்கமுடியாது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# விவசாயிகளின் அடிப்படை பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண்பதே முக்கிய நோக்கம்

## ஜனாதிபதி மைத்திரி திட்டவட்டம்



(பத்தரமுல்ல)

**விவசாய சமூகத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை நன்கு அறிந்தவன் என்ற வகையிலும் அது பற்றிய அனுபவமுள்ள தலைவர் என்ற வகையிலும் தனது முக்கிய நிகழ்ச்சித்திட்டமாக இருப்பது விவசாய சமூகத்தின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதாகுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

பாடசாலை பருவத்திலிருந்து கலப்பையுடனும் அரிவாளுடனும் பழக்கப்பட்ட விவசாயியின் மகன் என்ற வகையில், நாட்டின் விவசாய சமூகத்தின் பிரச்சினைகளை நன்கு அறிவேன் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பத்தரமுல்ல அபேகம வளாகத்தில்' நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

"கொவி தாத்தா" (கமக்கார தந்தை) திரைப்படத்தின் பணிகளை ஆரம்பிக்கும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பண்டைய சூழல் நட்புடைய முறைமைகளிலிருந்து முழுமையாக விலகி இரசாயன உரப் பாவனையுடன் கூடிய நவீன விவசாய யுகத்தில் விவசாயிகளும் மக்களும் முகங்கொடுக்கும் வாழ்க்கைப் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வரும் வகையில் தயாரிக்கப்படும் உலகின் முன்னணி ஆசிய விவசாயத்துறை திரைப்படமாக "கொவி தாத்தா" திரைப்படம் விளங்குகிறது.

உனகலா வெஹெர கிராமத்தில் பிரேமரத்ன திஸாநாயக்க என்ற விவசாயியின் வாழ்க்கைச் சரித்திரத்தை "கொவி தாத்தா" என்ற பெயரில் அவரது மகன் தர்ஷன ருவான்திஸாநாயக்கவினால் இவ்வாறு திரைப்படமாக்கப் படவுள்ளது.

"கொவி தாத்தா" திரைப்படத்தின் திரைக்கதை பிரதி அதன் தயாரிப்பாளர் சரத் பண்டார கொக்வேவ வினால் ஜனாதிபதி முன்னிலையில் பிரேமரத்ன திஸாநாயக்கவின் மனைவியான பி.எம்.பிசோமெனிக்காவிடம் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதிக்கும் இதன்போது விசேட நினைவுச் சின்னம் ஒன்று வழங்கப்பட்டது.

பாடசாலை மாணவி ஒருவரால் இயற்றப்பட்ட பாடல்கள் சிலவும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அனுஷா கோகுல உள்ளிட்ட விருந்தினர்களும் தர்ஷன ருவான் திஸாநாயக்க உள்ளிட்ட தயாரிப்பு குழுவினரும் பிரேமரத்ன திஸாநாயக்கவின் குடும்ப உறுப்பினர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-7)

# 6 இந்திய மீனவப் படகுகள் ஒப்படைப்பு





(கொழும்பு)

இலங்கைக் கடல் எல்லைப்பரப்பில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றத்தால் இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட இந்திய மீனவர்களுக்கு உரித்தான 6 இந்திய மீன்பிடிப் படகுகள் மீள இந்தியாவிற்கு நேற்று முன்தினம் இலங்கைக் கடலோர திணைக்களத்தின் உதவியுடன் ஒப்படைக்கப்பட்டன.

நேற்று முன்தினம்மாலை குறித்த படகுகள் காங்கேசன்துறைக்கு வடக்கு சர்வதேச கடல் எல்லைப்பகுதியில் வைத்து இந்திய கடலோர காவற்படையின் அயுஷ் மற்றும் ராணி துர்க்காவதி கப்பல்களிடம் கையளிக்கப்படுவதற்கு முன்னர் கடந்த தினங்களில் இந்திய பொறியாளர்களால் காரைநகர் இலங்கை கடற்படை கப்பல் எலார மற்றும் நாச்சிக்குடா இலங்கைக் கடற்படைகப்பல்புவனெகநிறுவனங்களிலும் கிரான்சி முகாமிலும் வைத்து பழுது பார்க்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

## 28 கமக்கார அமைப்புக்களின் தலைவர்கள் முள்ளியவளையில் சந்திப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை கமநல சேவை திணைக்களத்திற்குட்பட்ட 28 கமக்கார அமைப்புக்களின் தலைவர்கள் நேற்று முள்ளியவளையில் ஊடக சந்திப்பு ஒன்றை மேற்கொண்டுள்ளார்கள்.

இதன்போது கடந்தாண்டு காலபோக நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் கடந்த டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் மக்களின் வயல்கள் அனைத்தும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

இருப்பினும் அந்த வயல்களை அறுவடைசெய்ய வேண்டிய காலத்தில்கையால் மற்றும் இயந்திரத்தால் வெட்டியும் அறுவடை செய்துள்ளோம்.

பாதிக்கப்பட்ட நாளில் இருந்து நாங்கள் வெட்டி அறுவடை செய்யும் வரை வந்து பார்வையிடாத காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதிகள், நாங்கள் அறுவடை செய்துவிட்டோம் என்ற காரணத்தால் எங்கள் வயல்களின் அழிவைப் பார்வையிடவும் அதற்கான இழப்பு தருவதற்கு மறுப்பு தெரிவித்துள்ளமை ஏமாற்றத்தினையும் விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

தயவுசெய்து விவசாயிகளின் அழிவு நிவாரணத்தை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வதாக விவசாயிகள் தெரிவித்துள்ளார்கள்.

இந்த ஊடக சந்திப்பின் போது கமக்கார அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளார்கள். (2-281)

## யாழிலிருந்து கொழும்புக்கு இளைஞன் நல்லிணக்க பயணம்



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் நிலவ வேண்டி யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி மாற்றுத் திறனாளி இளைஞரான மௌஹமட் அலி என்பவர் நேற்று ஆட்டோவில் பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

தமிழ் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் பயணம் நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ்.மத்திய பேருந்து நிலைய முன்றலில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது.

இவர் கொழும்பு நோக்கிச் சென்று மீண்டும் யாழ்ப்பாணத்தை வந்தடையவுள்ளார்.

இப்பயணம் இலங்கையில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என்றும் விசேட தேவையுடையோரின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் அமைந்துள்ளதாக குறித்த இளைஞர் தெரிவித்துள்ளார். (இ-9)

# செய்தித்துளிகள்

## காலி முகத்திடலில் ஒத்திகை



(காலி)

இலங்கையின் 71 ஆவது தேசிய தினத்தை முன்னிட்டு கொழும்பு காலிமுகத்திடலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற படை வீராங்கனைகளின் ஒத்திகையின் போது... (இ-7)

## பாக்கு விற்ற வர்த்தகர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் அபராதம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைப் பிரதேச வர்த்தக நிலையங்களில் சந்தேகத்துக்கிடமான பாக்கு விற்பனையில் ஈடுபட்ட வர்த்தகர்கள் கடந்த 28 ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

குறித்த பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் ஊர்காவற்றுறைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இ.ஜெகதாசனும் காரைநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ம.ஜெய்பிரதீப்பும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் போது குறித்த பாக்கு கைப்பற்றப்பட்டதாகச் சுகாதாரப் பரிசோதகர் ம.ஜெய்பிரதீப் தெரிவித்தார்.

சந்தேகத்திற்கிடமான பாக்குகளை வைத்திருந்த இரு வர்த்தகர்கள் மீது ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு ஒரு வர்த்தகருக்கு ஆயிரம் ரூபாவும் மற்றைய வர்த்தகருக்கு 6 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்ட தாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## 75 ஏக்கர் தீக்கிரை



(ஹற்றன்)

ஹற்றன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியான ருவன்புர வனப்பகுதியில் சில விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.


இதனால் 75 ஏக்கருக்கும் அதிகமான வனப் பகுதி எரிந்து சாம்பலாகியுள்ளதாக ஹற்றன் வலய பொலிஸ் அதிகாரி ஏ.எல்.எம். பிரேமலால் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 250 | 150 | 200 | 180 | 250 |
| தக்காளி | 100 | 80 | 70 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 75 | 70 | 40 | 60 |
| கோவா | 50 | 70 | 60 | 60 | 60 |
| கரட் | 120 | 100 | 100 | 80 | 140 |
| பூசணி | 30 | 30 | 20 | 40 | 40 |
| புடோல் | 50 | 80 | 70 | 60 | 100 |
| வாழைக்காய் | 80 | 90 | 70 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 150 | 100 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 120 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 60 | 160 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 120 | 120 | 100 | 80 | 120 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 90 | 120 |
| பீற்றூட் | 50 | 60 | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 150 | 150 | 70 | 80 | 160 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 600 | 500 | 500 |
| போஞ்சி | 80 | 80 | 60 | 70 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 70 | 60 | 60 |
| கீரை-1பிடி | 30 | 20 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 150 | 80 | 100 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 40 | 30 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 150 | 120 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 60 | 80 | 60 | 120 |
| முள்ளங்கி | 30 | 80 | 60 | 30 | 120 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 40 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 80 | 20 | 10 | 20 |
| ஈரப்பலா | — | 80 | 50 | 100 | 80 |

# சிறுவர் அரங்கம்

## ஏன் சிரிக்கிறாய்?



ஒரு பண்ணையில் ஆண் கழுதையொன்றும், பெண் கழுதையொன்றும் வளர்ந்து வந்தன. ஆண் கழுதை பகலில் கடுமையாக உழைக்கும். பண்ணைக்குள் கொண்டு செல்ல வேண்டிய சரக்குகளை முதுகில் சுமந்து செல்லும். மாலை தங்குமிடம் வந்ததும் அங்கு கிடக்கும் காய்ந்த புல்லை மேய்ந்து பசியாறும்.

பெண் கழுதை எந்த வேலையும் பார்ப்பதில்லை. பசுமையாகக் கிடைக்கும் புல்லைத் தின்று விட்டு, தொழுவத்தில் தூங்கி எழும். மிகவும் மகிழ்ச்சியாக, வேலை பார்க்காமல் பொழுதை கழித்தது.

ஒருநாள் உழைத்த களைப்புடன் சோர்வாக ஆண் கழுதை வந்து சேர்ந்தது. களைப்பின் மிகுதியால் வந்தவுடனே படுத்தும் விட்டது. ஆண் கழுதையைப் பார்த்து பெண் கழுதை பரிதாபப்பட்டது.

"உன்னைப் பார்க்கவே பாவமாக இருக்கிறது!" என கிண்டல் செய்தது.

"என்ன செய்வது என் நிலை அப்படி, உழைத்தால் தான் முதலாளி விடுவார்!" என்றது ஆண் கழுதை.

இதைக் கேட்டதும் பெண் கழுதை சிரித்தது.

"ஏன் சிரிக்கிறாய்?"

"சிரிக்காமல் என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? நான் மட்டும் கஷ்டப்பட்டு வேலையா செய்கிறேன்!"

ஆண் கழுதை அதை ஆச்சரியத்துடன் பார்த்தது.

"ஆமாம்... நானும் இதைப் பற்றி உன்னிடம் கேட்க வேண்டும் என்று தான் நினைத்திருந்தேன். அதை முதலில் கூறு!"

"பண்ணையாள் வந்து உன் கயிற்றினை அவிழ்த்து விட்டதும், உடனே நீ வேலை செய்யப் போய் விடுவாய். நான் அப்படி போய் விட மாட்டேன்!"

"பிறகு என்ன செய்வாய்?"

"அப்படியே படுத்திருப்பேன். நான் எழவில்லை என்றதும் சாட்டையால் நான்கு அடி அடிப்பான். பொறுத்துக் கொண்டு படுத்துக் கொள்வேன். பிறகு என்னை விட்டு விட்டுச் சென்று விடுவான்!" என்றது பெண் கழுதை.

"இவ்வளவுதானா!" ஆச்சரியமாகக் கேட்டது ஆண் கழுதை.

"ஆமாம்... நீயும் அது போல சண்டித்தனம் செய்து விடு. உன்னையும் பண்ணையாள் விட்டுவிட்டுப் போய் விடுவான். எல்லாம் நம் கையில்தான் உள்ளது!" என அறிவுரை வழங்கியது.

காலைப் பொழுது வேலைக்குச் செல்லும் நேரம் பண்ணையாள் வந்தான். வழக்கம் போல் ஆண் கழுதையைப் பிடித்துக் கொண்டு செல்ல முயன்றான். இன்று ஆண் கழுதை படுத்துக் கொண்டு சண்டித்தனம் செய்தது.

பண்ணையாள் சாட்டை எடுத்து அடித்தும் பார்த்தான். ஆண் கழுதை எழுவதாய்த் தெரியவில்லை. பண்ணையாள் பல விதங்களிலும் முயற்சி செய்து பார்த்து விட்டு, முதலாளியிடம் சென்றான்.

"ஐயா! இந்த ஆண் கழுதை என்றுமில்லாமல் சண்டித்தனம் செய்கிறது!" என்றான்.

"சரி பரவாயில்லை. இன்னைக்கு ஆண் கழுதைக்கு ஓய்வு கொடுத்துவிடு. தினமும் நன்றாகச் சாப்பிட்டுக் கொழுத்து சும்மா இருக்கும், அந்தப் பெண் கழுதையை அடித்து இழுத்துப் போ!" என்றார்.

பண்ணையாளும் வந்து ஆண் கழுதை சாப்பிட பசும் புல்லைக் கொண்டு வந்து போட்டான்.

பிறகு, பெண் கழுதையை இழுத்துச் சென்று வேலையில் ஈடுபடுத்தினான். கெட்டதை சொல்லிக் கொடுக்கப் போய் தன்னுடைய பிழைப்பே போய் விட்டதை எண்ணி மிகவும் வருந்தியது பெண் கழுதை.

## உலகத்திலேயே மிகக் கொடூரமான நச்சுத் தாவரம்

அரளி என்னும் ஒலியாண்டர் Nerium oleander என்னும் தாவரம் உலகத்திலேயே மிகக் கொடுமையான நச்சுத் தாவரமாக கருதப்படுகிறது. தாவரத்தின் எல்லா பாகங்களும் நஞ்சு தான். பலவகையான நஞ்சுகளும் இந்த தாவரத்தில் காணப்படுகின்றன. இதில் காணப்படும் oleandrin மற்றும் neriine நச்சுக்கள் இதயத்தை பாதிக்கக்கூடியவை. தேனீக்களால் ஒலியாண்டர் பூக்களில் இருந்து சேகரிக்கப்பட்ட தேனை நக்கிய மாத்திரத்திலேயே மரணம் சம்பவிக்கும். ஒலியாண்டர் தாவரத்தின் பூக்கள் அழகானவை. ஆனால் அழகைப்பார்த்து ஏமாந்து போய் விடாதீர்கள். அத்தனையும் நஞ்சு.

கொடுமையான நச்சுத் தன்மை இருந்தாலும்கூட அழகிற்காக இந்தத் தாவரம் வளர்க்கப்படுகிறது. தூரகிழக்கு நாடுகளில் இருந்தும் மத்தியதரைக் கடல் நாடுகளில் இருந்தும் அமெரிக்காவிற்கு கொண்டு வரப்பட்ட இந்த தாவரம் உலர்ந்த வெப்ப நிலைகளிலும் வளம்குறைந்த மண்ணிலும் வளரக்கூடியது. அடர்த்தியான புதர்வடிவில் ஆறு முதல் பதினெட்டு அடி உயரத்திற்கு ஒலியாண்டர் தாவரம் வளரும். இலைகள் அடர் பச்சை நிறத்திலும் தடிமனாகவும் இருக்கும். கொத்தாகப் பூக்கும் பூக்கள் மஞ்சள், சிவப்பு, இளஞ்சிவப்பு, வெள்ளை ஆகிய நிறங்களில் காணப்படும்.

வறண்ட நிலத்தில் கூட ஒலியாண்டர் அழகாக பூத்து அருமையான வாசனையை த்தரும். விலங்குகள் இயற்கையாகவே இந்த தாவரத்தின் அருகில் கூட போவதில்லை என்பது இயற்கையின் விநோதம்தான். வேகமாக வளரும் இந்தத் தாவரத்தை வீதிகளில் தடுப்பரண்களாக வளர்க்கிறார்கள். தூசு இரைச்சல் இவற்றையெல்லாம் தடுக்கும் திறன் இந்த தாவரத்திற்கு உள்ளது. மண்ணரிப்பை தடுப்பதால் புதிய குடியிருப்புகள் தோன்றும் பகுதிகளிலும் ஒலியாண்டர் தாவரம் வளர்க்கப்படுகிறது.

ஒலியாண்டர் தாவரத்தின் ஓர் இலை ஒரு குழந்தையின் உயிரைப்பறிக்க போதுமானது. வயிற்றுப் போக்கு, வாந்தி, கடுமையான வயிற்றுவலி, நினைவிழப்பு, மயக்கம், ஒழுங்கற்ற இதயத்துடிப்பு வரிசையில் கடைசியாக மரணம் ஏற்படும். ஒலியாண்டர் நஞ்சை உட்கொண்ட ஒருவனுக்கு 24 மணிநேரத்திற்குள் மரணம் சம்பவிக்கவில்லையென்றால் அதற்கப்புறம் அவன் பிழைத்துக் கொள்வதற்கான வாய்ப்பு அதிகம் என்பது ஒரு ஆச்சரியமான செய்தி.

ஒலியாண்டர் நஞ்சுக்கு மருத்துவம் செய்யும்போது நோயாளியை வாந்தியெடுக்கச் செய்வதும் வயிற்றை காலிசெய்வதும் செறிவூட்டப்பட்ட காபனை உட்கொள்ளச்செய்து நஞ்சை உறிஞ்சும்படி செய்வதும் முக்கியமாகும்.

## இரவில் பனி பெய்வது எதனால்?

காலையில் மரங்களும் செடி கொடிகளும் பனியில் நனைந்து ஈரமாகக் காணப்படும். இரவில் பொழிந்ததால் மரங்கள் இவ்வாறு நனைந்திருக்கும். பனி பெய்வது எதனால் என்பது பலருக்குத் தெரியாது.

பூமியின் பரப்பில் நிகழும் உறைவித்தலால் பனி உருவாகிறது. சில சமயங்களில் இரவில் காற்றை விட பூமி அதிகமாகக் குளிர்ந்து விடுகிறது.

காற்றில் உள்ள ஆவி, குளிர்ந்த தரைப் பரப்பில் உள்ள இலைகள், தழைகள், பொருட்கள் ஆகியவற்றின்மீது விடியற்காலையில் படியும் போது, அது உறைந்து பனித் திவலையாக மாறுகிறது.

பூமி மிகவும் குளிர்ந்து இருந்தால் ஈர ஆவி இறுகி உறை பனியாக மாறி விடுகிறது.

தரையில் இருந்து எழும் ஈர ஆவி, அதைவிட குளிர்ந்த இலையில் படுமானால், அது இறுகி வேறு வகை பனிப் படிவாக இருக்கும்.

## ஒட்சிசன்



உலகத்தில் உற்பத்தியாகும் பாதி அளவு ஒட்சிசன் கடலில் இருந்து தான் வருகிறதாம்.

நமக்கான முழு ஒட்சிசன் மரத்தில் இருந்து கிடைப்பதில்லை. கடலில் இருக்கும் சிறிய நீர்வாழ் தாவரங்கள் இருக்கின்றன.

இவை காபனீரொட்சைட் மற்றும் சூரிய ஒளியை உட்கொண்டு ஒட்சிசனை உற்பத்தி செய்து வெளிப்படுத்துகின்றன.

# வடக்கு பட்டதாரிகள் தொடர்பில் பிரதமரிடம் கேள்வி எழுப்புவோம்

## மாவை சேனாதிராஜா உறுதி

(சித்தன்கேணி)

வடக்கு கிழக்கு பட்டதாரிகளை அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம் செய்யும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் அடுத்த மீள்குடியேற்ற கூட்டத்தில் பிரதமரிடம் கேள்வி எழுப்புவோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

நாட்டில் உள்ள பட்டதாரிகளை அபிவிருத்தி உத்தியோகத்தராக நியமனம் செய்யும் வேலைத்திட்டம் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் ஒரு தொகுதி பட்டதாரிகள் பயிலுநராக நியமிக்கப்பட்ட நிலையில் மேலதிக பட்டதாரிகள் நியமனம் தொடர்பில் அரசு மௌனம் காத்து வந்தது.

எனவே இது தொடர்பில் நேற்றைய தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் வேலையில்லாப் பட்டதாரிகள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்த தமிழரசுக் கட்சியின் தலைவர்,

45 வயதுக்கு மேற்பட்டவர்களையும் நாம் வேலைக்கு உள்வாங்கச் செய்தோம். அது தொடர்பில் ஏதாவது பிரச்சினை இடம்பெற்றது என எம்முடன் யாருமே தொடர்பு கொள்ளவில்லை எனவும் இதேவேளை 15 ஆயிரம் பட்டதாரிகள் நியமனம் தொடர்பில் நேர் முகத்தேர்வு இடம்பெற்றதை ஏற்றுக் கொள்கிறேன்.

இதுதொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை சம்பந்தமாக வருகின்ற மீள்குடியேற்ற கூட்டத்தில் நேரடியாக பிரதமரிடம் கேள்வி எழுப்பவுள்ளோம் எனத் தெரிவித்தார். (ம-17)

# புதிய அரசியலமைப்பில் பௌத்தத்துக்கு முன்னுரிமை

## பியசேன எம்.பி தெரிவிப்பு

பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை, புதிய அரசியலமைப்பில் மாற்றப்படாது அதன் முக்கியத்துவத்தில் மாற்றமோ, திருத்தமோ செய்யப்படாது.


இப்படி தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன கமகே.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழுள்ள தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயற்பாடுகளிற்கான இணைப்பாளராகவும் அமைச்சின் நடவடிக்கைகளை மீளாய்வு செய்ய பொறுப்பாகவும் அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்தபோதே மேற்படி கருத்தை தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு தொடர்பாக அரசியல்வாதிகளால் தவறான கருத்துக்கள் பரப்பப்படுவதாகவும் பௌத்தத்திற்கு வழங்கப்பட்ட முன்னுரிமையில் மாற்றம் வராது என்றும் தெரிவித்தார். (ம-3)

# மூத்த ஊடகவியலாளர் கணேசலிங்கம் காலமானார்



மூத்த ஊடகவியலாளரும் சிறந்த எழுத்தாளருமான கே.கணேசலிங்கம் நேற்றுக் காலமானார்.

ஈழநாடு பத்திரிகையில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய கணேசலிங்கம் பாடசாலை அதிபராகவும் கடமையாற்றியவர்.

சிறந்த விமர்சனப் பார்வை கொண்ட மூத்த ஊடகவியலாளர் கணேசலிங்கத்தின் இறுதிக்கிரியைகள் இல.32, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம் பெறும். (ம)

# தேர்தலை துரிதமாக நடத்துவதே அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பு

## என்கிறார் தினேஸ் குணவர்த்தன

ஜனாதிபதி சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்திற்கு அமைய மாகாண சபை தேர்தலை துரிதமாக நடத்த அரசாங்கத்திற்கு பொறுப்புள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் கனக ஹெரத், மாகாண சபை தேர்தலை ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் நடத்த அரசாங்கம் முயற்சித்து வருவதாக குற்றம் சாட்டியுள்ளார். (ம-3)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கருத்துருவாக்கிகள் குழாம் நடாத்தும் "கற்றோர் கருத்தறிதலும் மூத்தோர் மூதுரையும்" என்ற மக்கள் மனமறியும் அரசியல கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு தென்மராட்சி கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் அன்றாடப் பிரச்சினைகளும் அடிப்படைப் பிரசசினையும் தொடர்பான வாதங்களும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-30)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 5.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில இராமநாதன் வீதி, அரசடி வீதி, வைமன் வீதி, கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதி, மார்டின் வீதி சந்தியிலிருந்து ஏ9 வீதி வரை, நல்லூர் கோவிலடி, றக்கா வீதி, மருதடி வீதி, யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான பீடம், பிரிட்டிஸ் கவுன்சில், நாவலர் வீதி தியாகி அறக்கொடை நிலையம், மருதனார்மடம், இணுவில் ஒரு பகுதி, தாவடி, சுதுமலை, கொக்குவில்; கோண்டாவில் ஒரு பகுதி, உடுவில் ஒரு பகுதி, சங்குவேலி, மானிப்பாய் ஒரு பகுதி, பிப்பிலி, மாலு சந்தி, இலகடி, அல்வாய், காந்தியூர், மந்திகை, மந்திகை அம்மன் கோவில் பிரதேசம், சாரையடி, கிராமக்கோடு, கல்லூரி வீதி, வி.எம் வீதி, தம்பசட்டி, சாளம்பை, ஆனைவிழுந்தான், புனிதநகர், நெல்லண்டை, மாதனை, கற்கோவளம், பருத்தித் துறை, பருத்தித்துறை சந்தை, வெளிச்சவீடு, சிவப்பிரகாசம், கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, மந்திகை வைத்தியசாலை, வல்லிபுரம், வல்லிபுரம் நீர்ப்பாசனம், திருநெல்வேலி சந்தை பிரதேசம், திருநெல்வேலி பாற்பண்ணை பிரதேசம், வாகையடி சந்தி மீசாலை பிரதேசம், டச் றோட் மீசாலை பிரதேசம் ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில மலையாபருத்திக்குளம் பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

> தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்கு படக்கு எனுமாம்.
>
> – தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சொந்த நலன் கருதிய விமர்சனங்களை தவிருங்கள்

அண்மையில் பெரியவர் ஒருவரைச் சந்தித்தேன். தற்போது அவர் கொழும்பில் வசிக்கின்றார்.

அவருடன் கதைக்கும் சந்தர்ப்பத்தில் பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் என்று விசாரித்தேன்.

பிள்ளைகள் இல்லை என்ற பதிலோடு அவரது முகம் துயரமாகிவிட்டது.

1987ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் குழந்தை பிறந்தது. அந்நேரம் இந்திய அமைதிப்படையினர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் நுழைந்து கொண்டனர்.

பிறந்த குழந்தையை பராமரிப்பதற்கு சில கருவிகளின் உதவிகள் தேவைப்பட்டன. வைத்தியசாலைக்குள் அமைதிப்படை நுழைந்ததால் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக போதனா வைத்தியசாலை தன்னிலை இழந்துபோக, பிறந்த குழந்தையைக் காப்பாற்ற முடியாமல் போயிற்று என்று கூறியவர் சில நிமிடம் அமைதியானார்.

அவரது அமைதியைக் குலைக்க என்னாலும் முடியவில்லை. தன்னைச் சுதாகரித்துக் கொண்ட அவர் தானே குரல் தந்தார்.

அமைதிப்படை வராமல் இருந்திருந்தால், இன்று என் குழந்தை உயிரோடு இருந்திருக்கும் என்று கூறியபடியே கையை விரித்து தன் துயரத்தை வெளிப்படுத்தினார்.

துயரம் சுமந்த மனத்தினராய் நம்மவர்கள் வாழ்கின்றனர் என்ற யதார்த்தத்தை அந்தப் பெரியவரின் துயரம் வெளிப்படுத்திக் கொண்டது.

இதை நாம் கூறுவதானது இந்திய அமைதிப்படையைச் சுட்டிக் காட்டுவதற்காக அல்ல.

மாறாக, இலங்கை நாட்டில் தமிழனாகப் பிறந்ததனால் நாம் இழந்தவை ஏராளம்.

உயிரிழப்பு, சொத்திழப்பு, தொழில் இழப்பு என்பவற்றுக்கு மேலாக எல்லாம் இழந்து போன வெறுமையில் வாழ்வைத் தொலைத்து யமதூதனின் வருகையை எதிர்பார்த்து வாழ்கின்றவர்கள் நம்மத்தியில் பலர் உளர்.

இதுவே உண்மை. இன யுத்தத்தில் ஒவ்வொரு தமிழ் மகனும் ஏதோவொரு வகையில் இழப்புகளை அனுபவித்துக் கொண்டே இருக்கின்றான்.

அதில் ஒன்றுதான் 1987இல் பெற்ற குழந்தையை பறிகொடுத்து விட்டு பிள்ளைச் செல்வம் இல்லை என்ற வேதனையைத் தன்னுள் சுமந்து கொண்டிருக்கும் அந்தப் பெரியவரின் சரிதம்.

நிலைமை இதுவாக இருக்க, நம் அரசியல் வாதிகளில் பலர் ஏதோ செய்கின்றனர்.

அரசியலை விமர்சிக்கின்றவர்களில் சிலர் தாங்கள் நினைப்பதும் எழுதுவதுமே நிதர்சனமானவை என்று அடம் பிடிக்கின்றனர்.

என்ன செய்வது! அரசியலிலும் அரசியல் விமர்சனத்திலும் பங்கெடுப்போர் தங்கள் நலனை மட்டும் கருத்திலெடுக்கும்போது, தமிழினத்துக்காய் தமிழர்கள் இழந்தவை அர்த்தமற்றுப் போகின்றன.

இந்த அபத்தம் இல்லாதுபோக, தமிழினத்தின் இழப்பறிந்தேனும் சொந்த நலன்களை துறந்து தர்மத்தின் பெயரால் ஒன்றுபடுவோம்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- எறும்பும், தேவதூதனும் ஒன்று தான். புழுவும் கூட கடவுளின் உடன்பிறப்பே. எந்த உயிரிடத்தும் உயர்வோ, தாழ்வோ இல்லை.
- நமது உள்ளங்களை நம் எப்போதும் திறந்து வைத்திருந்தால் பிரபஞ்சத்தில் உள்ள நல்ல நினைவுகள் அனைத்திற்கும் உரிமையுள்ளவர்களாகி விடுவோம்.
- அன்பே உலகில் மேலானது. யோகப்பயிற்சியை விட அன்பே உயர்ந்தது.
- பிறரைத் துன்புறுத்துவது எளிது. எழுகின்ற கையைத் தாழ்த்தி அமைதியாய் நிற்பது மிகவும் கடினமானது.
- மனிதன் பிறந்திருப்பது இயற்கையை வெல்வதற்காகவே. அதற்குப் பணிந்து போவதற்கு அல்ல.
- இந்த மண்ணுலகம் பெரிய பயிற்சிக்கூடம். நம்மை வலிமையுள்ளவர்களாக்கிக் கொள்வதற்காகவே இங்கு நாம் அனைவரும் வந்திருக்கிறோம்.
- வழிபாட்டில் கடவுளை நம் பெற்றோராக ஏற்றுக் கொண்ட பிறகு, அன்றாட வாழ்வில் சந்திக்கும் அனைவரையும், நம் சகோதரர்களாக ஏற்க தயங்கக்கூடாது.

# ஜெரிக்துசாந்த் சகலதுறையிலும் சிறப்பாட்டம் அரியாலை வோரியர்ஸ் அணி பிளேஓவ் சுற்றில்



ஜெரிக்துசாந்தின் சகலதுறையாட்டம் கைகொடுக்க அரியாலை வோரியர்ஸ் அணி 2 விக்கெட்களால் இலகு வெற்றி பெற்று, பிளேஓவ் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் சுப்பர் லீக் என்னும் இருபது - 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதலாவது பருவ காலப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானங்களில் போட்டிகள் நடைபெறுகின்றன.

இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் 8 அணிகளும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் ஏ பிரிவில் ஜப்னா பந்தேர்ஸ், பருத்தித்துறை சுப்பர் கிங்ஸ், அரியாலை வோரியர்ஸ், நல்லூர் பிறவுண் கொஸ் அணிகளும், பி பிரிவில் வேலணை வேங்கைகள், கொக்குவில் ஸ்ரார்ஸ், பண்ணை ரில்கோ கிளாடியேற்றர்ஸ் மற்றும் ரில்லியூர் ரைரன்ஸ் ஆகிய அணிகளும் உள்ளன.

நல்லூர் பிறவுண்கொஸ் அணிக்கும் அரியாலை வோரியர்ஸ் அணிக்கும் இடையிலான போட்டியில், நாணயச் சுழற்சியில் வென்ற அரியாலை வோரியர்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதற்கிணங்க களமிறங்கிய நல்லூர் பிறவுண்கொஸ் அணி, பிரியலக்சனின் அதிரடி ஆட்டத்தின் உதவியுடன், 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 156 ஓட்டங்களை எடுத்தது.

பிரியலக்சன் 74 ஓட்டங்களையும், சிம்சன் 23 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் அரியாலை வோரியர்ஸ் அணி சார்பாக, ஜெரிக்துசாந்த், லோகதீஸ்வரர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

157 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலளித்தாடிய அரியாலை வோரியர்ஸ் அணி, 19.3 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஜெரிக்துசாந்த் 33, செல்ரன் 28, பிரியலக்சன் 24, கோபிராம் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜேம்ஸ் ஜான்சன் 33 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும், பிரபவன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (க-26)









உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கல்விசார் புலமைப்பரிசில் நிதியத்திற்கான வடமராட்சி லீக் அனுசரணையுடன் வடமராட்சி லீக் அணிகள் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று மாலை 3.30 மணிக்கு கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடை பெறவுள்ளது.

முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து வல்வெட்டி கருணாகரன் அணியும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து சமரபாகு நியூட்டன் அணியும் பலப்பரீட்சை நடத்தவுள்ளது. (க)

# கௌதமன் அதிரடிச் சதம் சென்றலைட்ஸ் அணி வெற்றி

சிறப்பான பந்துவீச்சு மற்றும் கௌதமனின் 59 பந்துகளில் பெறப்பட்ட 100 ஓட்டங்கள் என்பன கைகொடுக்க, சென்றலைட்ஸ் அணி 8 விக்கெட்களால் பெரு வெற்றிபெற்றது.

ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்கான 50 ஓவர்கள் கொண்ட சுற்றுப்போட்டியின் தெரிவுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

அதில் ஒரு போட்டியொன்றில் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து வவுனியா யங் ஸ்ரார்ஸ் அணி மோதியது

நாணயச் சுழற்சியில் வென்ற சென்றலைட்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதற்கிணங்க களமிறங்கிய யங்ஸ்ரார்ஸ் அணி 42.4 ஓவர்களில் அனைத்து விக் கெட்களையும் இழந்து, 159 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் ஆர்.தசரிதரன் 38 ஓட்டங்களையும், எஸ்.பிரசாத் 26 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக ஜெரிக் துசாந்த் 9.4 ஓவர்கள் பந்துவீசி 19 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்களையும், தசோபன், டர்வின் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.


160 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்தாடிய சென்றலைட்ஸ் அணி, கௌதமனின் அதிரடிச் சதத்தின் உதவியுடன், 18.4 ஓவர்களில் 2 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றி



யிலக்கை அடைந்தது. கௌதமன் 59 பந்துகளில் 100 ஓட்டங்களைப் பெற்று இறுதிவரையில் ஆட்டமிழக்காமல் இருந்தார். பிரியலக்சன் 28 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் யங்ஸ்ரார்ஸ் அணி சார்பாக கோகுலன் 2 விக்கெட்களைக் கைப்பற்றினார். (க-26)





கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலையின் இல்ல மெய் வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் கடந்த புதன்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. (க-254)

## புதிய கூட்டு...

அமைச்சருமான மனோ கணேசன் இந்தத் தகவலை வெளியிட்டார். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கையான நாளொன்றுக்கான அடிப்படைச் சம்பளம் ஆயிரம் ரூபாய் என்பதைப் புறந்தள்ளி 700 ரூபாயாக நிர்ணயித்து புதிய கூட்டு உடன்படிக்கை கடந்த சில தினங்களுக்கு முன் கைச்சாத்திடப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளிமார் சம்மேளனத்துக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட இந்த கூட்டு உடன்படிக்கை தொடர்பில் பெரும் எதிர்ப்பு அலை எழுந்தது.

இந்த நிலையில் ஆளும் ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சியான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கட்சித் தலைவர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று சந்தித்து பேச்சு நடத்தினர்.

இதன்போது புதிய கூட்டு உடன்படிக்கையை வர்த்தமானியில் வெளியிட்டு நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளக் கோரிக்கைகள் தொடர்பில் வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதலாளிமார் சம்மேளனத்துடனும் தொழில் அமைச்சருடனும் பேச்சு நடத்தப்படும். அதில் தீர்வு கிடைக்காவிடின் போராட்டம் நடத்தப்படும் என்றும் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார். (ம-3)

## அரசியல் கைதி...

மன்னார் பிரஜைகள் குழு நேற்று ஊடக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

இவ்வருட சுதந்திர தினத்தை முன்னிட்டு நல்லாட்சி அரசுக்கு தமிழ் மக்களின் உரிமையையும், வேண்டுகோளையும் அரசு மதித்து பல ஆண்டுகளாக அடிமைகளாக உரிமை இழ்ந்து நீதிக்கு புறம்பாக பல வருட காலமாக சிறைவாசம் அனுபவிக்கும் எமது தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்து தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தை அங்கீகரிக்குமாறு தமிழ் மக்களின் அரசியல் கைதிகளின் குடும்ப உறவுகள், உரிமைசார் போராட்ட முன்னெடுப்பாளர்கள், அனைத்து தமிழ் மக்கள் சார்பாக மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு அரசை மிகவும் விநயமாக கேட்டுக்கொள்கின்றோம்.

நீதி, உண்மை, மனித உரிமைகள், உரிமை மீறல், உறவுகளைத் தேடல், புதைகுழிகளை தோண்டுதல், எலும்புகளை இனம் காணல் இப்படியாக தமிழரின் உரிமைப் போராட்ட அலகுகள் பரவலாக விரிந்து செல்கின்ற இந்த கால கட்டத்தில் தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள் தொடர்புகளற்று, உரிமைகள் மறுக்கப்பட்டு, பொன்னான வாழ்வின் பொற்காலம் சிறையில் வீணடிக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கையில் பொருளின்றி, பிடிப்பின்றி, குடும்பம், பிள்ளைகள், உறவுகள் என்ற உணர்வின்றி, நடைப்பிணங்களாக நான்கு சுவருக்குள் அடிமைகளாக எந்தவித உரிமையும் இன்றி உயிர் வாழும் தமிழ் அரசியல் கைதிகளை இந்த வருட சுதந்திர தினத்திலாவது அவர்களை விடுதலை செய்து சுதந்திரமாக நடமாட அனுமதிக்க வேண்டும்.

அவர்களின் இல்லங்களிலும் தமிழ் மக்களின் உள்ளங்களிலும் ஒளியேற்றுமாறு நாட்டுத்தலைவரையும் நல்லாட்சி அரசையும் நீதித்துறையையும் ஆணித்தரமாக கேட்டு நிற்கின்றோம்.

நாட்டின் நீண்டகால போராட்ட வரலாற்றில் தொடர்ந்து பல்வேறு நிலைகளில் மக்களின் உரிமைக்காக சகல வேறுபாடுகளையும் தாண்டி பயணித்துக் கொண்டிருக்கும் மன்னார் பிரஜைகள் குழு இந்த வேண்டுகோளை தமிழ் மக்கள், அரசியல் கைதிகள் இவர்கள் சார்பாக அரசையும், நாட்டுத் தலைவரையும், நீதித் துறைசார் வல்லுநர்களையும், நீதி வழங்கி தமிழரின் உரிமை வாழ்வை கௌரவிக்குமாறு வற்புறுத்தி நிற்கின்றது. தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நாங்கள் தொடர்ந்து போராடுவோம்.

அவர்களின் நல்வாழ்க்கைக்காக, குடும்பங்களின் ஒருங்கிணைப்புக்காக, உரிமை வாழ்வுக்காக அவர்களின் விடுதலைக்காக தொடர்ந்து குரல் கொடுப்போம் என குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-285)

## புதிய அரசியல...

புதிய அரசியலமைப்பு பற்றி இன்று சிலர் பேசி வருகின்றபோதும் எனக்கு இன்னும் அப்படியொன்று கிடைக்கப்பெறவில்லை. அதுபற்றி தெளிப்படுத்தப்படவும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறந்ததோர் நாட்டை கட்டியெழுப்புவதற்கு அரசியலமைப்பு மாற்றம் அவசியம் என்ற போதும் அதன்மூலம் தான் எதிர்பார்ப்பது பாராளுமன்றத்தை பலப்படுத்தும் மாற்றமேயன்றி வேறு நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான மாற்றம் அல்ல என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஹொரனையில் ஒலபொடுவ ஸ்ரீ ஜயவர்தனாராம ரஜமகா விகாரையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற புண்ணிய நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிப்தி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

2019ஆம் ஆண்டு தேர்தல் நடைபெறும் ஆண்டாக உள்ள போதும் இந்த ஆண்டுக்குள் புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்படும் என்று சில கூறுகின்றனர். அதனால் தமிழ் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள்.

அரசியலமைப்பு திருத்தம் ஒன்றை செய்வதாயின் பலமான பாராளுமன்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கே முன்னுரிமையளிக்கப்பட வேண்டும். அதற்கு எனது ஒத்துழைப்பு கிடைக்கும்.

பலமான பாராளுமன்றம் ஒன்று இல்லாதிருப்பதன் விளைவாக நாட்டின் எதிர்காலத்திற்கு தேவையான தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முடியாது போவதுடன், அரசியல் உறுதியின்மையும் இல்லாமல் போகும் நிலை உருவாகும்.

புதிய மூலோபாயங்களுடன் பல்வேறு வெளிநாட்டு சக்திகள் இன்று தாய் நாட்டுக்கு எதிராக செயற்பட்டு வருகின்றன. நான் நடைமுறைப்படுத்தியுள்ள நாட்டுப் பற்றுடைய தேசிய நிகழ்ச்சித்திட்டங்கள் விமர்சிக்கப்படுவதும் இதன் காரணத்தினாலேயே ஆகும்.

எமது அரச அதிகாரத்தை கொண்டு நடத்துவதற்கும் எமக்கு தேவையான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் எவரேனும் வெளிநாட்டுச் சக்திகளின் அழுத்தங்களை பயன்படுத்துவார்களேயானால் அது இந்த நாட்டின் சுயாதீன தன்மைக்கும் இருப்புக்கும் எவ்விதத்திலும் பொருத்தமற்றதாகும்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய அனைத்து மக்கள் மத்தியிலும் நல்லிணக்கத்தையும் தேசிய ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் அதேநேரம் அனைத்து மக்கள் மத்தியிலும் அச்சத்தையும் பீதியையும் ஒழிக்கின்ற அரசியல் முறைமை ஒன்றையும் சமூக சூழலையும் கட்டியெழுப்புவது இன்று அனைவர் மீதும் சுமத்தப்பட்டுள்ள பாரிய பொறுப்பாகும் என்றார். (ம-3)

## பதவிகளுக்கா...

ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அந்த கட்சியின் ஊடகப்பேச்சாளர் விஜித ஹேரத் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், ஐக்கிய தேசிய கட்சிக்குள் உள்ள அமைச்சு போராட்டமும், அரசாங்கத்தில் இணைந்துகொள்ள துடிக்கும் நபர்களுக்கு அமைச்சுக்களை வழங்கவுமே கூட்டணி அரசாங்கம் அமைக்க ஐக்கிய தேசிய கட்சி முயற்சித்து வருகின்றது.

நேர்த்தியில்லாத அரசியலை தொடர்ந்தும் முன்னெடுக்காது உடனடியாக பொதுத் தேர்தலை அறிவிக்க வேண்டும் என்கிறது மக்கள் விடுதலை முன்னணி.

பொதுத் தேர்தலை நடத்தக்கோரிய பிரேரணையை கொண்டுவர நாம் தயாராகவே உள்ளோம். சகல கட்சிகளின் ஆதரவை எதிர்பார்க்கின்றோம் என தெரிவித்துள்ளார். (ம-3)

## தனங்கிளப்பில்...

விக்கையில்,

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தனங்கிளப்பு பகுதியில் புதிதாக தனியார் உப்பளம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

அதாவது தனங்கிளப்பு, கச்சாய், நாவற்குழி, பெரியமாவடி, கோயிலாகண்டி, மீசாலை, கெற்பெலி, மறவன்புலவு, கிளாலி, புலோப்பளை, அல்லிப்பளை கிழக்கு,கோவிந்தபுல கிராமங்களை அண்டிய 200 ஏக்கர் பரப்பு கொண்ட தனியார் உப்பளம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதனால் மேற்கூறப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்து 500 மீனவர்கள் வாழ்வாதார ரீதியாகப் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். இம்மீனவத் தொழிலாளிகள் இக்களப்பை நம்பியே தமது வாழ்வாதாரத்தைக் மேற்கொண்டு வருகின்றனர்.

ஏற்கெனவே 1991 ஆம் ஆண்டு பாதுகாப்பு கருதி ஆனையிறவுப் பாலம் மூடப்பட்டதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ள நிலையில் மேலும் உப்பளத்தை அமைத்து கடல் நீரை கிட்டத்தட்ட 200 ஏக்கர் பரப்பிற்குள் உள்வாங்குவதால் கடல்நீர் வற்றும். ஆகையினால் இதனையே நம்பியுள்ள மீனவகுடும்பத்தினர் தமது வாழ்வாதாரத் தொழிலை எவ்வாறு மேற்கொள்வது என்றும் கேள்வியெழுப்பியுள்ளனர்.

மேலும் கடல் மற்றும் அதனை அண்டிய பரப்பும் அதிக உவர்த்தன்மையாக மாற்றமடைந்து கொண்டிருப்பதால் அங்குள்ள கண்டல் தாவரங்கள் அழிவடைந்து விட்டது. இதனால் கடல்வாழ் மீனினங்கள் இறந்து கரையொதுங்கி வருவதுடன் உப்பளம் அமைக்கப்படுவதால் வெளியேறும் இரசாயன தாக்கத்தால் கடல்வாழ் உயிரினங்கள் முற்றாக அழிக்கப்பட்டு விடும் நிலை உருவாகும்.

எனவே தற்போது நாட்டில் காணப்படும் வரட்சியான காலநிலையால் குடிநீர் வற்றி உள்ளது. அத்தோடு இவ்வாறான இரசாயனத் தாக்கம் ஏற்பட்டால் குடிநீர் மேலும் வற்றுவதுடன் உவர்த்தன்மையும் அடைந்து விடும். குடிநீருக்கு மக்கள் திண்டாடும் நிலையும் வரும். அத்தோடு அதனை அண்டியுள்ள விவசாய நிலங்கள் அனைத்தும் விவசாயம் மேற்கொள்ள முடியாமல் உவர் பூமியாக தரவைகளாக மாற்றமடையும் நிலை வந்து விடும். ஏற்கெனவே மழை பெய்து காணப்படும் நிலையில் உப்பளம் வந்தால் இங்கு வாழும் மக்கள் எங்கு குடிபெயர்வது? மக்களுக்கு வாழும் சூழல் நிலம் அற்றுப் போகும் நிலை ஏற்படும்.

ஆகையினாலேயே இவ் உப்பளத்தை அமைக்க வேண்டாமென வலியுறுத்தி யாழ்ப்பாணத்தின் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கடற்கரைப் பிரதேசங்களைச் சேர்ந்த 9 மீனவ சங்கங்களும் கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 4 மீனவ அமைப்புக்களும் இணைந்து கூட்டாக இக்கோரிக்கையை பல தரப்பினர்களிடத்திலும் விடுத்திருந்தோம். போராட்டங்களையும் செய்திருந்தோம். அதற்கு உரிய பதில் கிடைக்காத நிலையில் மேற்படி முறைப்பாட்டை பதிவு செய்துள்ளதாக தெரிவித்தனர்.

இதன்போது இந்த விடயத்திற்கு உடனடியாக தாம் நடவடிக்கை எடுக்க முடியாது எனவும் தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தி நடவடிக்கை எடுக்குமாறும் மனித உரிமை ஆணைக்குழுவினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (ம-9)

## தொடருந்து...

பயணித்த தொடருந்துடன் மோதுண்டே இளைஞர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் நுணாவில் மேற்கைச் சேர்ந்த 28 வயதுடைய பாலமகேந்திரா விக்னேஸ்வரன் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள வாகனம் திருத்தும் கடையில் தனது உந்துருளியை திருத்தத்திற்காக கொடுத்திருந்த நிலையில், அதனைப் பார்வையிட நண்பர் ஒருவரின் உந்துருளியில் பயணித்து கடவையைக் கடந்தபோதே விபத்து நேர்ந்துள்ளது.

படுகாயமடைந்த நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் இளைஞர் அங்கு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, குறித்த தொடருந்து கடவையில் தடுப்பு துலா அமைக்கப்படாமல் இருப்பதுடன், பொருத்தப்பட்டுள்ள சமிக்ஞை விளக்கு சீராக இயங்கவில்லை எனவும் பொதுமக்களால் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-9-30)

## மாகாண சபை...

வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "சர்வதேச ஜனநாயகத் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள டிசம்பர் மாதத்திற்கு முன்னர், மாகாண சபை தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்க்கின்றோம்.

ஜனாதிபதி மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என கோரியுள்ளார்.

நாட்டுக்கு உகந்த தேர்தல் முறை எது என்பது தொடர்பில் நான் கூறவிரும்பவில்லை. அதனை பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டும். ஆனால் தற்போது உடனடியாக பழைய முறைமைக்கு அமையவே தேர்தலை நடத்த வாய்ப்புள்ளது.

புதிய முறைமைக்கு அமைய நடத்துவதென்றால் நிறைவேற்றப்பட்ட எல்லை நிர்ணய அறிக்கை ஒன்று இல்லை.

அவ்வாறு இல்லாமல் எந்தெந்த தொகுதிகள் என்பதை விளங்கிக் கொள்வது கடினம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## சு.கவுடன்...

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் கூட்டணியாக அது அமையப்போவதில்லை.

ஐக்கிய தேசிய முன்னணியின் கொள்கைகளுக்கு ஏற்றவகையிலான தனித்துவமிக்க தேசிய அரசாங்கமொன்றே உருவாக்கப்படும்.

மாகாண சபை தேர்தல் எந்த முறையில் நடத்தப்படுவதாக இருந்தாலும் அதற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

அதற்கான நடவடிக்கைகளையே தற்போது முன்னெடுக்க வேண்டியுள்ளது. எனவே இம்முறை எந்த தேர்தல் இடம்பெற்றாலும் ஐக்கிய தேசிய கட்சிக்கே பெரும் வெற்றிக்கிடைக்கும் •என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)


மெகா பவர்
திகதி 01/02/2019
சீட்டிழுப்பு இலக்கம் 339
N 11 04 33 55 77

கொவிசெத
திகதி 2019.02.01
சீட்டிழுப்பு இலக்கம் 2022
E 07 31 42 60

மஹஜன சம்பத
திகதி 2019/02/01
சீட்டிழுப்பு இலக்கம் 3846
F 7 2 2 8 5 8

தன நிதானய
திகதி 2019-02-01
சீட்டிழுப்பு இலக்கம் 109
C 41 50 61 69

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு கருவப்புலம் வீதியில் (யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அண்மையில்) ஒரு பரப்பு 2 குளி காணியில் புதிதாக வாஸ்து முறைப்படி வடக்கு வாசல் கொண்டு சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்ட சுற்றுமதிலுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:

**0770767114, 0766003303**

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மாங்குளம், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623 (7383)


## பாடசாலைக்குள்...

ஒருவர் உள்நுழைந்து அங்கிருந்த மாணவர் மீது கத்தியால் குத்தி உள்ளார். இதில் மாணவன் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

இது தொடர்பில் பாடசாலை அதிபரினால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ம-60)


புதிய பிரிவுகள் ஆரம்பம் 2019 யூலை பரீட்சைக்கான

**aat (Sri Lanka)**
(AA1, AA2, AA3)

Qualification :- G.C.E. O/L 6 Passes Medium - Tamil & English Note :- 2018 ஆம் ஆண்டு G.C.E. O/L பரீட்சை எடுத்த மாணவர்களும் இணைந்து கொள்ளலாம். முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.

FIT (Foundation in information Technology) - 6 months

- Minimum qualification passed GCE O/L (Pre degree Course Leads to BIT)

Certification offered by University of Colombo School of Computing (UCSC), Sri Lanka.

ஆரம்பம் :- 02.02.2019 8.00 am (C-5218)

Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
0212223382 / 0212229149


## தேசிய அரசை அமைத்து...

46(4) இன் பிரகாரம், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை 48க்கு மேற்படக் கூடாது எனவும், அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை 45க்கு மேற்படக் கூடாது எனவும் பாராளுமன்றில் தீர்மானிக்குமாறும் குறித்த முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ம-3)


## கட்டாரில் டிறைவர் வேலை

கட்டாரில் முன்னணி நிறுவனமொன்றில் தகுதிவாய்ந்த சாரதிகளுக்கு சந்தர்ப்பம்!

இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம் போதுமானது

2 வருட ஒப்பந்தம், வேலைநேர உணவு, தங்குமிடம், மருத்துவம், பயண ஏற்பாடு தினமும் 8 மணி வாரம் 6 நாள் வேலை. (வயதெல்லை 25 - 40)

முற்றிலும் இலவச பயணம்! சம்பளம் ரூ.73000

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரமுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

Emerald Isle Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268

077 00 38 215
021 2219 221

221- 1/1, மின்சார நிலைய வீதி 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்

www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

## வேலைக்கு ஆட்கள் தேவை

நாவலர் வீதியில் அமைந்துள்ள கட்டிடப் பொருள் விற்பனை நிலையத்தில் உழவு இயந்திரம் செலுத்துவதற்கு 2 வேலையாட்கள் மற்றும் மெசினில் கல் அரிவதற்கு 2 வேலையாட்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். (7382)

தொடர்புகளுக்கு:

**0779050185**


## ஈழ மக்...

பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரட்ணம் மற்றும் மன்னார் நகரசபை உறுப்பினர் சம்பூரணம் இரட்ணசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஏற்புரையினை செல்வி இராசதுரை கோமதியும் பிராந்திய அறிக்கையை முன்னாள் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரனும் வழங்கவுள்ளனர். (ம)


## VACANCY

We are printing and advertising centre & we have the following vacancy

- **Computer Designer** - (Male or Female)
கணனி வடிவமைப்பாளர் (ஆண்/பெண்)

HIGHEST SALARY IN JAFFNA FOR CREATIVE PERSON

உங்கள் சுயவிபரக்கோவையை ideasjaffna@gmail.com மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும்

ideas ADVERTISING 936A, K.K.S Road, Naachimar Kovil, Jaffna. 077 636 6860 (சி-5367)

விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி-700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg

0768226240 V2 TRAVELS

மானிப்பாய் யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை

# M.சிவகுமாரின் அக்னியின் மாபெரும் இசைமழையில்

இந்திய தொலைக்காட்சி சரிகமப புகழ் கலைஞர்கள் முதன்முதலாக கிளிநொச்சி மண்ணில் கலந்து கொள்ளும்

## கலைகளின் சங்கமம்

இசை நிகழ்ச்சி




பெப்ரவரி 02|03 [சனி, ஞாயிறு]

மாபெரும் மலிவு விற்பனை
காலை 11.00 மணி - இரவு 12 மணிவரை

கலை நிகழ்ச்சிகள்
மாலை 03.00 மணி - இரவு 12 மணிவரை

கிளிநொச்சி மத்தியகல்லூரி மைதானம்



## கலைகளின் சங்கமம்

நுழைவுக்கட்டண விபரங்கள்

1000/- 700/- 500/-

(சி-5872)

நுழைவுச்சீட்டு பெற்றுக்கொள்ளும் இடங்கள்

01 ரவி லேணர்ஸ் (சாரதிப் பயிற்சிப் பாடசாலை)
கிளிநொச்சி: 0777 526658
மல்லாவி: 077 9102 114
ஒட்டுசுட்டான்: 077 356 3530
முள்ளியவளை: 077 1321 885
புதுக்குடியிருப்பு: 077 1623 282

02 சிந்து நகை மாளிகை - கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்பாக

03 யேசுராசன் மரக்கறி வாணிபம் - கிளிநொச்சி பொதுச் சந்தை 077 8666 737

04 சிற்றி மெழக்கல் - A9 வீதி, கிளிநொச்சி. 077 627 4719

05 சிவா பதிப்பகம் - டிப்போ சந்தி, கிளிநொச்சி. 077 534 6766

06 ஆதவன் உணவகம் - வாடியடி சந்தி, பூநகரி 077 777 8395

07 நிரோ லேணர்ஸ் - A9 வீதி, பளை 077 0043 948

08 சிந்துஜா ரெக்ஸ் - இரணைமடு சந்தி.

09 செல்லா Hotel & Rest - கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 077 744 2846, 021 492 5665

குறிப்பு: நுழைவுச்சீட்டு பாவிக்கும் நாளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (ஒரு நுழைவுச்சீட்டு ஒரு நாளைக்கு மட்டும்) பெற்றோருடன் வருகைதரும் 12 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு அனுமதி இலவசம்.

குறிப்பு - மாபெரும் மலிவு விற்பனையில் பங்குபெற விரும்பும் வியாபார ஸ்தாபனங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

ஆசனங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நுழைவுச்சீட்டுக்களை நிகழ்வு நடைபெறும் மைதானத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகட்கு: 0767699191, 0762948744, 0774599709

அனைவரும் வருக! ஆதரவு தருக!!

விழா ஏற்பாட்டாளர் : V.S மகேந்திரன்
Founder/ President
Poverty Free Welfare Organization


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.